# உதயன்

கூ.வெ. 30 °C
கு.வெ. 29 °C
தெளிவான வானிலை

சுடர் 30 | கதிர் 222 | வள்ளுவர் ஆண்டு 2046 | ஆனி 21, திங்கட்கிழமை 06.07.2015


# பிளவடைந்தது சுதந்திரக் கூட்டு

## வெளியேறியது ஹெல உறுமய

கொழும்பு, ஜூலை 6
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் முக்கிய பங்காளிக் கட்சியாக இருந்த ஜாதிக ஹெல உறுமய அக்கூட்டணியில் இருந்து நேற்று வெளியேறியது.
எதிர்வரும் பொதுத்தேர்தலில் தனித்துக் களமிறங்குவதற்கும் ஜாதிக ஹெல உறுமய முடிவெடுத்துள்ளது.
இதற்காக கட்சியின் பெயரை ஐக்கிய நல்லாட்சிக்கான தேசிய முன்னணி' என மாற்றியுள்ள துடன், அதன் சின்னமாக வைரம்' சின்னம் இருக்கிறது.
ஜனாதிபதித் தேர்தலின்போது, மஹிந்த



அணியிலிருந்து விலகி மைத்திரி கூட்டணியை ஹெல உறுமய ஆதரித்திருந்தமை குறிப் பிடத்தக்கது.
இந்த நிலையில், பொதுத் தேர்தல் தொடர்பில் கட்சித் தீர்மானத்தை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று பத்தரமுல்லையில் அமைந்துள்ள கட்சி தலைமையகத்தில் இடம்பெற்றது.
இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த ஹெல உறுமயவின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க, நாட்டில் தற்போது நிலவுகின்ற பிரச்சினைகளைத் தீர்ப்ப பக்.24

## வேட்பு மனுத் தாக்கல் இன்று முதல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 6
நடைபெறவுள்ள எட்டாவது நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல், நாடளாவிய ரீதியில் இன்று ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் 13 ஆம் திகதி நண்பகல் 12 மணி வரையில் வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப் படும் என்று தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.
ஓகஸ்ட் 17 ஆம் திகதி, எட்டாவது நாடாளுமன்றத் தேர்தல் இடம் பெறவுள்ளது. தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் இன்று முதல் ஏற்றுக் கொள்ளப்படவுள்ளன. ஒவ்வொரு பக்.24

## யாழ். மாவட்ட செயலகத்துக்கு இன்று முதல் பொலிஸ் காவல்

யாழ்ப்பாணம், ஜூலை 6
வேட்பு மனுக்களைக் கையேற்கும், யாழ்.மாவட்ட செயலகத்துக்கு இன்று முதல் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படவுள்ளது. அத்துடன், தேர்தல்காலப் பொலிஸ் முறைப்பாட்டுப் பிரிவும் மாவட்ட செயலகத்தில் இன்று முதல் இயங்கத் தொடங் கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
எட்டாவது நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் இன்று முதல் இடம்பெறவுள்ளது. இதற்காக, வேட்பு மனுத் தாக்கல் பக்.24

## 'அண்ணா' நடராசா காலமானார்



யாழ்ப்பாணம்,ஜூலை 6
வடக்கின் முன்னோடி உள்ளூர் உற்பத்தியாளர்களில் ஒருவரும்; சிறுகைத்தொழில் அதிபருமான 'அண்ணா' கோப்பி நிறுவுநர் பொ.நடராஜா தமது அறுபத்தொன்பதாவது வயதில் நேற்றுக் காலமானார்.
தமது சுயமுயற்சியினால் வீட்டில் வைத்து கோப்பியைத் தயாரித்து தாமே அதனை துவிச்சக்கர வண்டியில் எடுத்துச்சென்று விற்பனை செய்த அவர், ஒரு சில வருடங்களிலேயே வடக்கின் தொழில் அதிபர்களில் ஒருவராக உயர்ந்தவர். பக்.24

## கடந்த முறை வெற்றி பெற்ற அனைவருக்கும் வேட்புமனு

### ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி முடிவு

கொழும்பு, ஜூலை 6
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிட்டு கடந்த முறை வெற்றி பெற்ற அனைத்து நாடாளு மன்ற உறுப்பினர்களுக்கும் இம்முறையும் போட்டியிடுவதற்கு வேட்புமனு வழங்கப்படும் என சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அநுர பிரிய தர்ஷன யாப்பா தெரிவித்தார்.
எதிர்க்கட்சித் தலைவரின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
மேற்படி இந்தக் கலந்து ரையாடலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி, தேசிய சுதந்திர முன்னணி, பக்.24

## வேட்பாளர் ஒதுக்கீடு இறுதி முடிவு இன்று

### சம்பந்தன் தலைமையில் வவுனியாவில் கூடுகின்றது கூட்டமைப்பின் உயர்பீடம்

கொழும்பு, ஜூலை 6
எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கில் வேட்பாளர்களை நிறுத்துவது தொடர்பில் இறுதி முடிவு எடுப்பதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உயர்பீடம் இன்று வவுனியாவில் ஒன்றுகூடுகின்றது.
கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் காலை 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இந்தக் கூட்டத்தில் தமிழரசுக் கட்சி, ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோ, புளொட் ஆகிய பங்காளிக்கட்சிகளின் தலைவர்கள், செயலாளர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் கலந்து பக்.24

## 11 கிராம சேவையாளர்களுக்கு வவுனியாவில் புனர்வாழ்வு

### புலிகளின் பகுதிக்குள் பணிபுரிந்தமையால்

யாழ்ப்பாணம், ஜூலை 6
தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில், அவர்களது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் பணிபுரிந்த 11 கிராம சேவையாளர்களை, புனர்வாழ்வுக்கு தற்போது அனுப்பி வைக்கப் பட்டுள்ளனர். தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவளித்ததை ஒப்புக் கொண்டதற்கு அமையவே, குறித்த 11 கிராம சேவையாளர்களையும் அரசு புனர்வாழ்வுக்கு அனுப்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசங்களில் குறித்த கிராம சேவையாளர்கள், 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் பணியாற்றியி பக்.24

## ரவிராஜ் கொலையாளிக்கு நீதிமன்று சிவப்பு அறிக்கை

கொழும்பு, ஜூலை 6
ஒன்பது வருடங்களுக்கு முன்னர் தலைநகர் கொழும்பில் சுட்டுப் படுகொலைசெய்யப்பட்ட அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் நடராஜா ரவிராஜின் கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர், வெளிநாடொன்றுக்குத் தப்பிச் சென்றுள்ள நிலையில், அவரைக் கைதுசெய்வதற்கு கொழும்பு மேலதிக நீதிவான் நிரோஸ் பெர்னாண்டோ, சிவப்பு அறிக்கையொன்றை விடுத்துள்ளார்.
சரண் என்றழைக்கப்படும் விவேகானந்தன் ஸ்ரீகாந்தன் என்பவரைக் கைதுசெய்வதற்கான சிவப்பு அறிக்கையே இவ்வாறு விடுக்கப்பட்டுள்ளது. (த-சி)

## காணாமற்போதல், கொலை, கடத்தல் குறித்து பேச்சளவில் அல்ல செயலுருவில் விசாரணை

### வேண்டும் என்கிறது இலங்கை ஆசிரியர் சங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 6
வடக்கு கிழக்கு உட்பட நாடளாவிய ரீதியில் இடம்பெறும் காணாமற்போதல், கொலை செய்யப்படல், கடத்திச் செல்லல் போன்ற செயற்பாடுகளுக்கு விசாரணை மேற்கொள்வதாகக் கூறுவது வார்த்தையளவில் இல்லாமல் யதார்த்தமான நடவடிக்கை எடுக்கவேண்டும். சிறைப் படுத்தப்பட்டுள்ள அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய வேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சங்கம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.
சங்கத்தின் 58 ஆவது பேராளர் மாநாடு அண்மையில் இடம்பெற்றது. அதில் இந்தப் பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது. அந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட மேலும் சில பிரேரணைகள் வருமாறு:-
புதிய கல்விக் கொள்கை ஒன்றைத் தயாரிப்பது சம்பந்தமான கவனத்தை மேற்கொள்ளாதது மட்டுமல்ல 100 வேலைத் திட்டத்தினுள் காணப்படும் கல்வி சம்பந்தமான பக்.24

## பஸ் டிப்போவில் நிதி கையாடல் அதிகாரி பொலிஸாரால் கைது

### உயரதிகாரிகள் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 6
முல்லைத்தீவு பஸ் டிப்போவுக்குச் சேரவேண்டிய நிதியைக் கையாடல் செய்த குற்றச்சாட்டில் டிப்போவில் பணிபுரியும் அதிகாரி, தலைமை அதிகாரிகளால் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். அவரைக் கைது செய்துள்ளதாகவும் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அச்சுவேலியைச் சேர்ந்த குறித்த நபர் முல்லைத்தீவு பஸ் டிப்போவில் தற்போது பணியாற்றி வருகிறார்.
பணியில் ஈடுபட்டுத் திரும்பும் பஸ் நடத்துநர், சாரதிகள் கொண்டுவரும் பணத்தைப் பெற்று பக்.24

# பொதுத் தேர்தலில் போட்டியிடவில்லை

*அஜித் நிவாட் கப்ரால் தெரிவிப்பு*

கொழும்பு, ஜூலை 6
எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.
தான் பொதுத் தேர்தலில் போட்டியிட உள்ளதாக வெளியான தகவல்களில் உண்மையில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான சிறந்த வேட்பாளர்கள் ஓகஸ்ட் 17 தேர்தலில் போட்டியிடுவதாகத் தெரிவித்துள்ள அவர் மஹிந்த தலைமையிலான அரசொன்றில் பொருத்தமான நிர்வாகப் பதவியொன்றை வகிக்க விரும்புவதாகத் தெரிவித்துள்ளார்.
2006ஆம் ஆண்டு முதல் இந்த ஆண்டு ஜனவரி மாதம் வரையில் அஜித் நிவாட் கப்ரால் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக கடமையாற்றியிருந்தார். (ற)

# இந்தியாவுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தவில்லை இலங்கை

***முன்னாள் ஜனாதிபதி மஹிந்த கூறுகின்றார்***

கொழும்பு, ஜூலை 6
இந்தியாவுடனான உறவுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையிலான எந்தவொரு நடவடிக்கையும் இலங்கையால் மேற்கொள்ளப்படவில்லை என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.
இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.
இலங்கை மற்றும் சீனாவுக்கு இடையிலான உறவால், இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையிலான உறவுக்கு எந்தவொரு அச்சுறுத்த லும் ஏற்படவில்லை என அவர் இதன் போது சுட்டிக்காட்டினார்.
இந்தியாவுக்கு சிக்கல் ஏற்படுத்தும் வகையில் வேறு நாடுகளுக்கும் இலங்கை உதவி வழங்கவில்லை எனவும் மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். (ற)

# விபத்தில் இளைஞன் சாவு

அம்பாறை, ஜூலை 6
அம்பாறை சுதுவெல்ல பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 17 வயது இளைஞன் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு நடந்துள்ளது. உயிரிழந்த இளைஞன் பயணித்த மோட்டார் சைக்கிள் பஸ் ஒன்றுடன் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.
விபத்தில் பலத்த காயமடைந்த இளைஞன் அம்பாறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.
விபத்துடன் தொடர்புடைய பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டுள்ள நிலையில் அம்பாறை பொலிஸார் விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (ற-10)

# தேர்தலைக் குழப்புவதே மஹிந்த தரப்பு நோக்கம்

## ரில்வின் சில்வா தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 6
பொதுத் தேர்தலில் வெற்றிபெற வேண்டுமென்பது மஹிந்தவின் நோக்கமில்லையெனவும், தேர்தலை குழப்பி நாசப்படுத்து வதே அவர்களின் நோக்கமெனவும் மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.
தேர்தலில் வெற்றிபெறுவதைப் பற்றி மஹிந்த தரப்பால் நினைத்தும் பார்க்க முடியாது. ஊழல் மோசடியில் ஈடுபட்டவர்கள், சிறைக்குச் சென்றவர்கள், குற்றப்புலனாய்வு பிரிவிற்குச் சென்று வாக்குமூலம் கொடுத்தவர்கள் எல்லாம் ஆட்சிக்கு வர நினைப்பது நல்லாட்சியை ஏற்படுத்துவதற்கு அல்ல.
மஹிந்த ராஜபக்ஷவை விட்டால் வேறு ஒருவர் இல்லை என்பது போல், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தலைமைப் பதவிக்கு சரியான ஒருவரை நியமிக்க முடியாமல் இன்று அவர்கள் உள்ளனர். – என்றும் அவர் தெரிவித்தார்.
மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–
இன்று மஹிந்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்குள் நுழைந் துள்ளார். இதனால் கட்சியின் பலம் அதிகரிக்கப் போவதில்லை. உள்ள பலம் இல்லாமல்தான் ஆகப்போகின்றது.
இதனால் ஏற்படும் விளைவுகளை நாம் விரைவில் பார்க்கலாம். இனி ராஜித என்ன செய்யப் போகிறார், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா எடுக்கப்போகும் முடிவு என்ன, அர்ஜுன ரணதுங்க மற்றும் ஜாதிகஹெல உறுமய என்ன செய்யப் போகின்றது என்பவற்றை இனி வரும் நாள்களில் பார்க்கலாம். ஐக் கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு எடுத் துள்ள முடிவால் ஏற்படும் விளைவுகள் தற்போதே ஆரம்பித்து விட்டன. எஸ்.பி.நாவின்ன வின் வெளியேற்றம் இதற்கு நல்ல உதாரணம்.
மஹிந்தவுக்கு பிரதமர் வேட்பாளர் நிலையைக் கொடுத்து கட்சிக்குள் பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளனர். கட்சிக்குள் இருந்தவர்களை வெளியேற வைத்துவிட்டனர்.
கடந்த ஜனவரி 8ஆம் திகதி மக்கள் வாக்களித்தது, மைத்திரியை ஜனாதிபதியாக்க வேண்டும் என்பதற்கல்ல. மஹிந்தவின் குடும்ப ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வரவே வாக்களித்தனர். அதன்மூலம் நாட்டைக் காத்து, நல்லாட்சியை ஏற்படுத்தும் பொறுப்பு மைத்திரிக்கு வழங்கப்பட்டது. ஆனால் அவர் நாட்டை ஒருபக்கம் வைத்துவிட்டு கட்சியின் தலைமைத்துவம் பற்றி யோசித்தார். கடைசியில் அவருக்கு நாடும் இல்லாமல் கட்சியும் இல்லாமல் போகும் நிலை உருவாகியுள்ளது.
100 நாள்களை கடந்து கடந்த மே மாதம் தேர்தலை வைத்திருந்தாலும் பிரச்சினை வந்திருக்காது. உயர்தரப் பரீட்சைக்கும் இடையூறு வந்திருக்காது. மேலதிகமாக ஆட்சிசெய்த இரண்டரை மாதம் ஒன்றும் செய்யவில்லை. 19ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப் படுத்தவில்லை. அரசியலமைப்புச் சபைக்கு மூன்று சிவில் உறுப்பினர்களை நியமிக்க முடியவில்லை. சிவில் உறுப்பினர்கள் இல்லாமல் அரசியலமைப்பு சபையில் அங்கம் வகிக்கும் ஏனைய 7 பேருடன் சபையைக் கூட்டித் தேர்தல் தொடர்பில் முடிவெடுத்திருக்கலாம். அதனையும் செய்யவில்லை. கட்சியை பிடிக்கப் போய் இருந்ததையும் இல்லாமல் செய்துகொண்டது தான் மிகுதி.
இன்று பிரதான இரு கட்சிகளிலும் மீண்டும் ஊழல் மோசடிக்காரர்கள் அங்கம் வகிக்க ஆரம்பித்துவிட்டனர். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மோசடிக்காரர்களின் கூடாரமாகிவிட்டது.
மக்கள் எதிர்பார்த்த ஜனநாயகம் மற்றும் நல்லாட்சியை ஐக்கிய தேசியக் கட்சியும் மறந்துவிட்டது ஜனாதிபதி மைத்திரியும் மறந்துவிட்டார். மொத்தத்தில் ஆட்சியாளர்கள் மாறினார்களே தவிர வேறொன்றும் மாறவில்லை.
எனவே மக்கள் வழங்கிய ஆணையை மதித்து அதற்கேற்றவாறு நாட்டைக் கொண்டுசெல்ல முடியும் என்ற வாக்குறுதியை நாம் தருகின்றோம். எதிர்வரும் பொதுத் தேர் தலில் 22 மாவட்டங்களிலும் போட் டியிட்டு நாம் மக்களுக்காக குரல்கொடுப்போம். – என்றார். (ற)

# முன்னேஸ்வரம் சென்று வழிபட்டார் சந்திரிகா

## தனது 70ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு



கொழும்பு, ஜூலை 6
முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தமது 70ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு சிலாபம் முன்னேஸ்வரத்துக்குச் சென்று வழிபாடுகளை மேற்கொண்டுள்ளார்.
நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை ஸ்ரீ வடிவாம்பிகை சமேத ஸ்ரீ முன்னைநாதசுவாமி ஆலயத்தில் வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டு தெய்வ ஆசியைப் பெற்றுக் கொள்ளும் நிகழ்வுகளில் அவர் ஈடுபட்டார்.
அதன் பின்னர் அங்குள்ள ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலயத்துக்குச் சென்ற அங்கு இடம்பெற்ற விஷேட பூஜை வழிபாடுகளிலும் கலந்து கொண்டார்.
இதன்போது முன்னேஸ்வரம் ஆலயத்திற்கு வருகை தந்திருந்த பக்தர்களுக்கு பகல் உணவுப் பொதிகளைகளையும் அவர் வழங்கியுள்ளார்.
சமய நடவடிக்கைகளின் பின்னர் முன்னாள் ஜனாதிபதியும், ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஆலயத்தின் பிரதான குருவான பத்மநாப குருக்கள் இல்லம் சென்று அங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேநீர் உபசரிப்பில் கலந்து கொண்டனர். இதன்போது புத்தளம் மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான விக்டர் அன்ரனி பெரேரா, மில்ரோய் பெர்ணான்டோ, தயாசிரித் திசேரா உள்ளிட்டவர்கள் உடனிருந்தனர்.
எனினும் புத்தளம் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முன்னாள் முக்கிய அமைச்சர்களான பிரியங்கர ஜயரட்ன, நியோமால் பெரேரா மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அருந்திக பெர்னான்டோ ஆகியோர் இந்த நிகழ்வுகளில் கலந்துகொள்ளவில்லை. (ற)

# எதிர்வரும் தேர்தலில் குழப்பம் ஏற்படலாம்

**எச்சரிக்கின்றார் பேராசிரியர் நிர்மல் ரஞ்ஜித் தேவஸ்ரீ**

எதிர்வரும் பொதுத் தேர்தலின் போது நாட்டில் குழப்பகரமான நிலை அதிகரிக்க வாய்ப்புள்ளது என்று பேராசிரியர் நிர்மல் ரஞ்ஜித் தேவஸ்ரீ எச்சரிக்கை விடுத்துள்ளார்.
தற்போதைய அரசியல் நிலவரம் தொடர்பாக ஊடகமொன்றிற்கு வழங்கிய செவ்வியிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவை தோற்கடிப்பதற்காகவே மைத்திரிக்கு மக்கள் ஆதரவு வழங்கினர். ஆனால் தமக்கு ஆதரவு வழங்கிய மக்களுக்கு மைத்திரி துரோகம் இழைத்துவிட்டாரென அவர் குறிப்பிட்டுள்ளார்.
மஹிந்தவுக்கு வேட்புமனு வழங்கி மக்கள் வழங்கிய ஆணையை ஜனாதிபதி மைத்திரி புறந்தள்ளியுள்ளதாகவும், இதனால் நாட்டிற்கு நல்லதல்ல என்றும் குறிப்பிட்டுள்ளார்.
முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவுக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் வேட்புமனு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்ற நிலையில், அது பல்வேறு சமூக மட்டத்தினர் மத்தியிலும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. அதனால் சிறிலங்கா சுதந்திரக் கட்சி பிளவுபடும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. (ற)

# அர்ஜுன ரணதுங்க ஐ.தே.கவில் போட்டி?

கொழும்பு, ஜூலை 6
அமைச்சர் அர்ஜுன ரணதுங்க உள்ளிட்ட சிலர் எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிடுவது தொடர்பான பேச்சை ஆரம்பித்துள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
இது தொடர்பில் தற்போது ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ளப்படுகின்றது என்று அரசியல் வட்டாரத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கீழ் போட்டியிடுவது குறித்த தீர்மானித்திற்கு அர்ஜுன ரணதுங்க உள்ளிட்ட குழுவினர் எதிர்ப்பு வெளியிட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது. அதன்படி இவர்கள் கூட்டமைப்பில் இருந்து விலகி முன்னணி ஒன்றின் கீழ் ஐக்கிய தேசியக் கட்சியுடன் போட்டியிடத் தீர்மானித்துள்ளதாக கூறப்படுகின்றது.
எது எவ்வாறு இருப்பினும் இது குறித்த இறுதித் தீர்மானத்தை மேற்கொள்ள முன்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் பேச்சு நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் தெரியவருகின்றது. (ற)

# '20' ஐ அங்கீகரிக்க வேண்டியது புதிய நாடாளுமன்றின் பொறுப்பு

## ஜனாதிபதி மைத்திரிபால கூறுகின்றார்

யாழ்ப்பாணம், ஜூன் 6

20 ஆவது திருத்தத்தை அங்கீகரிக்க வேண்டியது புதிய நாடாளுமன்றத்தின் அடிப்படை பொறுப்பு என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்களின் கோரிக்கையாக கருதி அதிகாரத்துக்கு வந்து 100 நாள்களுக்குள் தேர்தல் முறையை நாடாளுமன்றத்திற்குள் அங்கீ கரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்படி தாம் அனைத்து அரசியல் கட்சிகளையும் கேட்டுக்கொள்வதா கவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

கொழும்பில் நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலின்போது சிறிலங்கா சுதந்திரக்கட்சி சுத்தமான அரசியல் கட்சியாக மக்கள் முன்னால் செல்ல வேண்டுமென தெரிவித்த ஜனாதிபதி அவர்கள், ஊழல் மோசடியற்ற தூய்மையான வேட்பாளர்களை மாத்திரம் அதற்கு முன்வைக்க வேண்டுமெனவும் தெரிவித்தார்.

ஊழல் மோசடி, ஒழுங்கீனம், அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்துதல் போன்ற குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டவர்களை எதிர்வரும் பொதுத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மூலம் முன் வைத்தால் கட்சியை மக்கள் நிராகரிப்பார்கள் எனத் தெரிவித்த ஜனாதிபதி, சிறிலங்கா சுதந்திரக்கட்சியை அதிகாரத்திற்கு கொண்டு வரவேண்டுமானால் தூய்மையானவர்கள், நேர்மையானவர்கள் அதை வழி நடத்துவதாக மக்களுக்கு உறுதிப்படுத்த வேண்டுமெனவும் சுட்டிக் காட்டினார்.



கடந்தகால அனுபவங்களுடன் நாட்டின் எதிர்காலம் தொடர்பாக சரியான அரசியல் தீர்மானம் எடுக்க வேண்டியதன் அவசியம்பற்றியும் ஜனாதிபதி வலியுறுத்தினார். (ற-4)

# பிள்ளைகள் வெளிநாட்டில் தந்தை லேகியம் விற்பனை

## மடக்கிப் பிடித்தனர் பொலிஸார்

யாழ்ப்பாணம், ஜூன் 6

வீட்டில் வைத்து போதையூட்டப்பட்ட லேகியத்தை விற்பனை செய்து வந்த குடும்பஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சுதுமலை தெற்கு மானிப்பாயைச் சேர்ந்த குறித்த குடும்பஸ்தர் 3 வியாபார நிலையங்களை நடத்தி வருகிறார். அவரது 4 பிள்ளைகள் வெளிநாட்டில் உள்ளனர். அவருக்குத் தேவையான வசதிகள் இருந்தபோதும் அவர் இந்த வியாபாரத்தை மேற்கொண்டு வந்துள்ளார்.

புத்தளத்திலிருந்து வரும் சகோதர இனத்தவர் ஒருவர் போதையூட்டப்பட்ட குறித்த லேகியங்களை எடுத்து வந்து தருவதாகவும் அதனைத் தான் விற்பனை செய்து வந்ததாகவும் அவர் கூறியுள்ளார். அவர் 3 வியாபார நிலையங்களை நடத்தி வருகின்றபோதும் குறித்த லேகியங்களை வீட்டில் வைத்தே விற்பனை செய்து வந்துள்ளார். அவர் கைது செய்யப்படும்போது போதையூட்டப்பட்ட 8 லேகியங்களும் மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித் தனர்.

நேற்றுமுன்தின் கைது செய்யப்பட்ட அவர் மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு எதிர்வரும் 17 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-4)

# வாழைக்குலை திருடர்கள் கைவரிசை மீள ஆரம்பம்

## வலி. கிழக்கு விவசாயிகள் கவலை

யாழ்ப்பாணம், ஜூலை 6

வலி. கிழக்கு பிரதேசத்தில் உள்ள வாழைத்தோட்டங்களில் வாழைக் குலைகளை களவாடி செல்லும் திருடர்களின் கைவரிசை மீண்டும் ஆரம்பமாகியுள்ளது என்று விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

இரவு வேளையில் வாழைத் தோட்டங்களுக்கு செல்லும் திருடர்கள் வாழைக் குலைகளை களவாகத் திருடிச் செல்கின்றனர். குறிப்பாக சிறுப்பிட்டி பிரதேசத்தில் உள்ள தோட்டங்களில் கடந்த ஒரு வார காலத்தில் 50க்கும் மேற்பட்ட வாழைக்குலைகள் களவாக வெட்டிச் செல்லப்பட்டுள்ளன. அதனை விட நவக்கிரி, நீர்வேலி, கோப்பாய், ஊரெழு, புன்னாலைக் கட்டுவன் போன்ற பகுதிகளிலும் உள்ள வாழைத் தோட்டங்களில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டி வருகின்றனர். – என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

அதேபோன்று நீர்வேலி பகுதியில் உள்ள வாழைத் தோட்டத்தில் இரவு வேளை வாழைக் குலையை திருடிச் செல்ல முற்பட்ட திருட்டு கோஷ்டியை அங்கு இரவு காவல் கடமையில் இருந்த விவசாயிகள் மடக்கிப் பிடித்தனர். ஒருவர் விவசாயிகளிடம் சிக்க ஏனையவர்கள்தப்பிச் சென்று விட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தற்போது வாழைப்பழத்தின் விலை அதிகரிப்பை பயன்படுத்தியே திருடர்கள் தமது கைவரிசையை மீண்டும் காட்டத் தொடங்கியுள்ளனர்.

திருடர்களின் இந்த திருட்டுச் சம்பவங்களை அடுத்து விவசாயிகள் தமது வாழைத்தோட்டங்களில் இரவு காவல் கடமையில் ஈடுபட்டும் வருகின்றனர். (ற-17)

## கஞ்சாவுடன் ஒருவர் கைது

வவுனியா, ஜூலை 6

வவுனியா பஸ்தரிப்பிடத்தில் 650 கிராம் கேரளா கஞ்சாவுடன் ஒருவரை கைது செய்துள்ளதாக வவுனியா மாவட்ட போதைப் பொருள் ஒழிப்பு பொலிஸ் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சியிலிருந்து புத்தளம் நோக்கிச்சென்ற புத்தளம் வாசியே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். கேரளா கஞ்சாவை பொதி செய்து பயணப்பொதியில் சூட்சமாக மறைத்து வைத்திருந்தவாறு அவர் பயணத்தை மேற்கொண்டுள்ளார். இது தொடர்பில் வவுனியா மாவட்ட போதைப் பொருள் ஒழிப்பு பொலிஸ் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து அவர் பஸ் நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றது என்றும், குறித்த நபரை இன்று நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதா கவும் தெரிவிக்கப்பட்டது. (ற)

# கனரக வாகனத்தின் பாரம் தாங்காது இடிந்தது பாலம்



மட்டக்களப்பு, ஜூலை, 06

மட்டக்களப்பு மாவட்டத்தின் வவுணதீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பாலமொன்று இடிந்து வீழ்ந்துள்ளது. இதன்போழது இலங்கை மின்சார சபைக்கு சொந்தமான வாகனமொன்று சேதமடைந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

புளியடிமடு காளிகோவிலுக்கு முன்னால் முருங்கையடிச்சேனை எனும் இடத்திலேயே இந்தச் சம்பவம் நடந்துள்ளது. இலங்கை மின்சார சபை ஊழியர்கள் மின்சார வேலைகளுக்கு மின்சாரத் தூண்களை ஏற்றி பாலத்தின் மேலாகச் சென்றவேளையில் குறித்த பாலம் இடிந்து வீழ்ந்துள்ளது.

குறித்த கனரக வாகனம் படுவான் கரைப் பகுதிக்கு திருத்த வேலைக்குச் சென்றது என்றும், அதிக பாரம் வாகனத்தில் ஏற்றப்பட்டிருந்த நிலையில் குறித்த பாலத்தின் மேலாக அந்த வாகனம் சென்ற போது இந்த விபத்துச் சம்பவம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.(ற-10)

# கைவிடப்பட்ட நிலையில் சிசு மீட்பு

திருகோணமலை, ஜூன் 6

திருகோணமலையில் நேற்றுக் காலை 9.30 மணி அளவில் அநாதரவாக கைவிடப்பட்ட நிலையில் குழந்தை ஒன்று கண்டெடுக்கப் பட் டுள்ளது.

பிறந்து 4 மணி நேரங்களே ஆன குறித்த பெண் குழந்தையானது திருகோணமலை ஏகாம்பரம் வீதியில் அமைந்துள்ள மொஹைடீன் ஜும்மா பள்ளிவாயிலின் முன்பாக கைவிடப்பட்டிருந்தது என்றும், பள்ளிவாசல் நிர்வாகத்தினரால் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலை அடுத்து குழந்தையை பொலிஸார் பொறுப்பேற்று திருகோணமலை தள வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

வைத்தியசாலையின் சிசு பராமரிப்புப் பிரிவில் குழந்தை தற்போது வைக்கப்பட்டுள்ளது. (ற)

# இடையை தடவியவர் பொலிஸாரின்பிடியில்

அமெரிக்க நாட்டைச் சேர்ந்த உல்லாசப் பிரயாணி ஒருவரின் இடையை தடவிய இளைஞர் ஒருவரை நிலாவெளி பீச் ஹோட்டலில் வைத்து கைது செய்துள்ளதாக குச்சவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

குச்சவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நிலாவெளி உல்லாச கடற்கரையில் அனுராதபுரம் கெப்பிட்டி கொல்லாவ பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரே இவ்வாறு அமெரிக்கா உல்லாசப் பிரயாணி ஒருவரின் இடையை தடவியதாகவும் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது.

சந்தேக நபருடன் மேலும் எட்டு இளைஞர்களும் கெப்பிட்டி கொல்லாவ பகுதியிலிருந்து நிலாவெளி கடற்கரைக்கு வந்திருந்ததாகவும் குறித்த நபரே அவ்வாறு தடவியதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்ட சந்தேகநபரை தடுத்து விசாரணைகள் மேற்கொண்டு வருவதோடு நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக குச்சவெளிப் பொலி

# வாக்குறுதிகளில் பின்வாங்கோம்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு


கொழும்பு, ஜூலை 6

ஜனாதிபதி தேர்தல் காலப்பகுதியில் நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளிலிருந்து தாம் ஒருபோதும் பின்வாங்கப்போவதில்லை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசியல் நிலவரம் தொடர்பில் தனது டுவிட்டர் பக்கத்தில் கருத்துத் தெரிவிக்கும்போதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

பிரதமர் ரணில் விக்கரமசிங்க, நாட்டின் பயணத்தை மாற்றுவதாக ஜனாதிபதி தேர்தலின் போது நானும் ஜனாதிபதியும் அறிவித்திருந்தோம். மக்கள் ஆதரவை பெற்றுக்கொண்டதும் அதற்காகவே. எனவே நான்



கொடுத்த வாக்குறுதிகளில் இருந்து பின்வாங்கப்போவதில்லை.

ஒவ்வொரு கட்சிகளினும் வேட்பு மனு தொடர்பில் எனக்கு ஆர்வமில்லை. மக்கள் தங்களுக்கு அவசியமானவர்களை தெரிவு செய்வார்கள்.

சிறிலங்கா சுதந்திர கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரான எஸ்.பீ.நாவின்னவை ஐக்கிய தேசிய கட்சிக்கு அன்புடன் வரவேற்கின்றேன். மேல் மாகாணத்தில் தேர்தலின் போது அவரால் பெரியளவில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. – என்று தெரிவித்துள்ளார். (ற)

## 2 கிலோ கஞ்சாவுடன் ஒருவர் கைது

திருகோணமலை, ஜூலை 6

திருகோணமலை, சேருநுவரவிலிருந்து கிளிவெட்டிக்கு இரண்டு கிலோ கஞ்சாவை கொண்டு சென்றதாகக் கூறப்படும் ஒருவரை நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை கைதுசெய்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சைக்கிளில் சென்ற சந்தேக நபரை வீதிப் போக்குவரத்து பொலிஸார் இடைநிறுத்தி சோதனை மேற்கொண்டபோதே, இவரிடம் கஞ்சா இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

குறித்த சந்தேகநபர் கஞ்சா வியாபாரி என்றும் இதற்கு முன்னரும் இவர் கைது செய்யப்பட்டிருந் தார் என்றும், பொலிஸார் கூறினர். (ற)

# திருமலை மாவட்டத்தில் 2,56,852 வாக்காளர்கள்

திருகோணமலை, ஜூலை 6

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 17ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் 2 லட்சத்து 56 ஆயிரத்து 852 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர் என்று அம்மாவட்ட உதவித் தெரிவத்தாட்சி அலுவலரும் உதவித் தேர்தல்கள் ஆணையாளருமான சஜித் வெல்கம தெரிவித்துள்ளார்.

இந்த மாவட்டம் மூன்று தேர்தல் தொகுதிகளை உள்ளடக்கியது. திருகோணமலைத் தொகுதியில் 86 ஆயிரத்து 978 பேரும், சேருவில தொகுதியில் 74 ஆயிரத்து 070 பேரும், மூதூர் தொகுதியில் 95 ஆயிரத்து 804 பேரும் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

விகிதாசாரத் தேர்தல் முறையின் கீழ், நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த மாவட்டத்துக்காக தெரிவுசெய்யப்படவுள்ளனர். இதற்காக, ஒரு கட்சியிலிருந்தோ அல்லது சுயேட்சைக் குழுவிலிருந்தோ ஏழு வேட்பாளர்களை தேர்தலில் நிறுத்த முடியும் என்று அவர் தெரிவித்தார்.

அதேவேளை, நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் பணிகளுக்காக அலுவலர்களை நியமிக்கும் நடவடிக்கையை திருகோணமலை தேர்தல்கள் திணைக்களம் ஆரம்பித்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள அரச பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் தொடர்பாக கணக்கெடுப்பு பெற்றுக்கொள்வதற்கு சகல அதிபர்களுக்கும் ஆளணி தொடர்பான விண்ணப்பப் படிவங்கள் தற்போது அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அதில் தேர்தல் விசாரணை அதிகாரியின் தரவுப்படிவம், சாரம்சப் படிவம், தேர்தல் கடமைகளுக்காக விடுவிக்கப்பட முடியாத ஆசிரியர்கள் விவரம் மற்றும் பாடசாலைகளின் கல்விசாரா ஊழியர்களின் பணியாட் தொகுதி ஆகிய படிவங்கள் அதிபர்களால் பூரணப்படுத்தி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

இது தவிர இம்முறை விசேடமாக ஒவ்வொரு பாடசாலைக்கும் ஒரு குறியீட்டு இலக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. அக்குறியீட்டு இலக்கத்தை தேர்தல் விசாரணை அதிகாரியின் தரவுப் படிவத்தின் வலது பக்க மேல் மூலையில் தவறாது குறித்துக் காட்டப்பட வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட சகல விண்ணப்பப் படிவங்களையும் எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் திருகோணமலை தேர்தல்கள் திணைக்களத்துக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமோ அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ற)

## கட்டாக்காலி மாடுகளால் பயிச்செய்கை நாசம்

அச்சுவேலி, ஜூலை 6

வாதரவத்தைப் பகுதியில் செய்கைபண்ணப்பட்டுள்ள பயிர் வகைகளை கட்டாக்காலி மாடுகள் சேதம் செய்து வருகின்றன. மாடுகளின் உரிமைக்காரர்கள் மாடுகளை இனங்கண்டு பிடித்துச் செல்லுமாறு வாதரவத்தை விவசாய சம்மேளனச் செயலாளர் கே.சுந்தரவேல் அறிவித்துள்ளார்.

அக்காச்சி குடியிருப்பு உள்ளிட்ட வாதரவத்தைப் பிரதேசத்தில் கட்டாக்காலியாக நடமாடித்திரியும் எட்டு மாடுகள் சிறுபோகத்தில் செய்கை பண்ணப்பட்ட பயிர்வகைகளை சேதப்படுத்தி வருகின்றன. இரவு பகல் என்றும் இல்லாமல் முழுநாளும் நடமாடும் கட்டாக்காலி மாடுகள் கடந்த சில தினங்களாக நடமாடி வருகின்றன என அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-11)

## வீட்டுக்குள் புகுந்து கைபேசி திருட்டு

தெல்லிப்பழைப் பகுதியில் புகையிரத வீதிக்கு அருகாமையில் உள்ள வீடு ஒன்றினுள் பகல் வேளையில் புகுந்த திருடன் வீட்டின் உரிமையாளர் குளிக்கச் சென்ற நேரம் பார்த்து பூட்டியிருந்த கதவைத் திறந்து அறையினுள் இருந்த சேட் பொக்கற்றில் இருந்த 15 ஆயிரம் ரூபாவையும், கைத்தொலைபேசி ஒன்றையும் திருடிச் சென்றுள்ளான். இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை நடந்துள்ளது.

குளித்துவிட்டு வந்து பார்த்த போது, கைத்தொலைபேசி காணாத தால் உசாரடைந்த உரிமையாளர் தனது சட்டைப் பையினுள் பார்த்த போது, பணமும் களவுபோய்விட் டதை உணர்ந்துள்ளார்.

தனது தொலைபேசிக்கு வேறு தொலைபேசி மூலம் கொண்ட போது குறித்த தொலை பேசியை எடுத்த நபர் தொடர்பு தொடர்பு கொண்டு தான் புகையிரத வீதியில் திருத்த வேலைகளில் ஈடுபட்டு வருவதாகவும் தானே இந்தத் தொலைபேசியையும், பணத்தையும் எடுத்ததாகவும் முடிந்தால் பிடித்துப்பார் எனக் கூறிய துடன் தொலைபேசியின் தொடர்பை நிறுத்திவிட்டார் என வீட்டு உரிமையாளர் தெரிவித்தார். (ற-36)

## கூரை பிரித்து திருடர்கள் கைவரிசை

மட்டக்களப்பு மாவட்டம் காத்தான்குடி மீராஜும்மாப் பள்ளி வீதியிலுள்ள வீடொன்றில் கடந்த சனிக்கிழமை இரவு கூரை பிரித்து உள்நுழைந்த திருடர்கள் 37 பவுண் தங்க நகைகளையும், 7 ,லட்ச ரூபாய் பணத்தையும் திருடிச் சென்றுள்ளதாக காத்தான்குடிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீட்டிலுள்ளோர் நோன்பு கால இரவு நேர விஷேட தொழுகைக்காக வீட்டைப் பூட்டி விட்டு பள்ளி வாசலுக்குச் சென்றிருந்த வேளை பார்த்து திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் காத்தான்குடிப் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவம் குறித்து காத்தான்குடிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

## ஏகாதச ருத்ர ஹோமம்

வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தின் ஏகாதச ருத்ர ஹோமம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு விசேட பூசைகளுடன் நடைபெறவுள்ளது. (ஐ)

## மத்திய கல்லூரி இலச்சினை வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் 200ஆவது ஆண்டு விழா நிகழ்வுக்கான உத்தியோகபூர்வ இலச்சினை வெளியீட்டு விழா நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 8 மணிக்கு கல்லூரியின் றொமைன்குக் மண்டபத்தில் கல்லூரி அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இலச்சினை வெளியீட்டு நிகழ்வில் யாழ். மெதடிஸ்மிஷன் திருச்சபை தேவாலய குருமுதல்வர் வண ரவி சுங்கர் நைல்ஸ் அடிகளார் கலந்து கொண்டு இலச்சினையை வெளி யிடுவார். கல்லூரியின் 200வது ஆண்டு நிகழ்வுகளின் ஆரம்ப நிகழ்வுகள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் தொடக்கம் ஆரம்பமாகவுள்ளது. (ற)

## பதிவு செய்த சிறுகைத்தொழில் முயற்சியாளர்களுக்குக் கடன்

உள்ளூராட்சி சபைகளில் பதிவு செய்யப்பட்ட சிறுகைத்தொழில் முயற்சியாளர்களுக்கு விரைவான கடன் திட்டங்கள் வழங்கப் படுகின்றன. உரிய ஆவணங்க ளு டன் வருகை தரும் சிறுகைத்தொழில் முயற்சியாளர் களுக்கு ஐந்து லட்சம் ரூபா கடன் வழங்கப்படும் என சங்கானை தேசிய சேமிப்பு வங்கியின் முகாமையாளர் உலகநாதன் ராகுலன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வலி.மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவு மட்டுமன்றி ஏனைய பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த சிறுகைத்தொழில் முயற்சியாளர்களுக்கும் எமது வங்கி ஊடாக 5 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட கடன்களை அறிமுகம் செய்து வழங்கி வருகின்றோம்.

5 லட்சம் ரூபாவுக்கு உட்பட்ட கடன்களை சிறுதொழில் முயற்சியாளர்கள் உள்ளூராட்சி சபையினால் பதிவு செய்யப்பட்ட சான்றிதழ்களுடன் சமூகமளிக்கும் பட்சத்தில் வழங்கப்படும்.

5 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட கடன்களைப் பெறவுள்ளோர் ஆதனங்களை ஈடாக வைத்து கடன் களைப் பெற்றுக்கொள்ளலாம்.

உள்ளூராட்சி சபையின் பதிவு இல்லாத சிறுதொழில் முயற்சியாளர்களுக்கு கடன்கள் வழங்கப்பட மாட்டாது. - என்று அவர் தெரிவித்தார். (ற-50)



## காஸ் சிலிண்டர் தீப்பற்றியதில் கடை எரிந்து நாசமாகியது

### வவுனியாவில் சம்பவம்

வவுனியா, ஜூலை 6

வவுனியாவில் தேனீர்கடையொன்றில் காஸ் சிலிண்டர் வெடித்து சிதறியதில் கடை பெரும் சேதமடைந்தது. தெய்வாதீனமாக எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் குருமன்காட்டுச் சந்தியில் நடந்துள்ளது.

குறித்த கடையில் சமையலுக்குப் பயன்படும் காஸ் சிலிண்டரே திடீரெனத் தீப்பற்றியுள்ளது.

காஸ் சிலிண்டர் தீப்பற்றியதை அடுத்து கடையில் இருந்த பொருள்களிலும் தீப் பற்றிக் கொண்டுள்ளது. எனினும் அங்கிருந்த பணியாளர்கள் எவருக்கும் தெய்வாதீனமாகக் காயங்கள் ஏற்படவில்லை. கடையின் பெரும் பகுதி எரிந்து நாசமாகியுள்ளது.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (ற-402)

## சுற்றுலா மையங்களை மேம்படுத்த நடவடிக்கை

### வடமாகாண சுற்றுலா மற்றும் உள்ளூராட்சி அமைச்சு முன்னெடுப்பு

மானிப்பாய், ஜூலை 6

வடக்கில் சுற்றுலாத் துறையை மேம்படுத்த வடமாகாண சுற்றுலா மற்றும் உள்ளூராட்சி அமைச்சு பல்வேறுபட்ட துரித நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. முதற்கட்டமாக ஏற்கனவே உள்ள சுற்றுலா மையங்களை நவீனமயப்படுத்தி அதனை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இரண்டாவது கட்டமாக சுற்றுலாத் துறைக்குள்ள அம்சங்கள், இடங்கள், இயற்கையான கடற்கரைகள் மற்றும் வளங்கள் இருந்தபோதும் இதுவரை உள்வாங்கப்படாத விடயங்களை முன்னெடுத்துச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. அதற்கான தரவுகளை வடமாகாண சுற்றுலா அமைச்சு திரட்டி வருகின்றது.

வடமாகாணத்தில் இதுவரை இனங்காணப்படாத சுற்றுலா மையங்களை இனம் கண்டு அதன் சாத்தியவள ஆய்வுகளை மேற்கொண்டு அறிக்கையிடுமாறு வடமாகாண சுற்றுலா அமைச்சு சகல உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்களையும் கோரியுள்ளது.

இந்த ஆய்வுகளானது சுற்றுலாத் துறையின் நீண்டகால அபிவிருத்திச் செயற்பாடுகளை முன்னெடுப்பது, சுற்றுலாத் துறைகளுக்கு இடையிலான ஒழுங்கமைக்கப்பட்ட கட்டமைப்பு ஏற்பாடுகளை முன்னிலைப்படுத்துவது, சுற்றுலாத் துறையின் உள்ளூராட்சி மன்றங்களின் பங்குபற்றல் நெறிமுறைகளை முன்னெடுப்பது, இதன் ஊடாக வடமாகாணத்தில் இதுவரை இனம் காணப்படாத புதிய சுற்றுலா மையங்களை இனம் கண்டு பேணத்தகு வழிமுறைகளுக்கு இட்டுச்செல்வது போன்ற செயற்பாடுகளை துரிதப்படுத்துவதாக இருக்கும் என வடமாகாண சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. (ற-50)

## எண்ணெய் ஆலை அமைக்க வேண்டும்

### கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.கணேஸ் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 6

தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி இந்தப் பிரதேசத்தில் எண்ணெய் ஆலை ஒன்றை அமைப்பதற்கு முயற்சிக்க வேண்டும் என்பது கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.கணேஸ் கேட்டுள்ளார்.

தென்மராட்சி பிரதேசத்தில் தென்னை மரங்கள் அதிகமாகக் காணப்படுவதால் தேங்காய்களை அதிகமாக கொள்வனவு செய்து தேங்காய் எண்ணெய் ஆலை ஒன்றை நிறுவ வேண்டும். இதற்கு தென்மராட்சி கொத்தணியினர் உரிய ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்று ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இப்படிப்பட்ட ஆலைகளை அமைப்பதன் மூலம் எமது உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிப்பதோடு சங்கங்களும் அதிக வருமானத்தைப் பெற வாய்ப்பு உள்ளது.

அதேபோல் அச்சுவேலி, பருத்தித்துறை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களும் தமது காணிகளில் தென்னம் பண்ணைகளை அமைக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-17)

# உலக மாற்றத்தோடு இசைந்து நற்பிரஜைகளாக வாழுங்கள்

மாணவர்களுக்கு வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் அறிவுரை



யாழ்ப்பாணம், ஜூலை 6

இன்றைய மாணவர்கள் மிகப் பெரிய ஆற்றல்களைத் தம்முள் தேக்கி வைத்திருக்கிறார்கள். அறிவுரீதியாகச் சிந்திக்கக் கூடியவர்கள். அவர்கள் மாறும் உலகின் மாற்றங்களுக்கு முகம் கொடுத்து நற்பிரஜைகளாக வாழவேண்டும். இவ்வாறானதொரு மாற்றம் ஏற்படுவதற்குத் தொழில்நுட்ப அறிவு இன்றியமையாதது. – இவ்வாறு தெரிவித்தார் வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன்.

வயாவிளான் மத்திய கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட தொழில்நுட்ப ஆய்வுகூடத்தைத் திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

இன்று மாணவர் சமூகம் மிகப் பெரிய நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கின்றது. இந்த நெருக் கடிகளிலிருந்து அவர்கள் விடுபட வேண்டும். ஒவ்வொருவரும் சிந்தித்துச் செயற்படவேண்டும். எதிர்காலத்தில் அனைவரும் தொழில்நுட்ப அறிவு பெற்றிருக்க வேண்டியது அவசியமாகும். பரீட்சையை மட்டும் மையமாகக் கொள்ளாது, தமது சுபீட்சமான எதிர்கால வாழ்வின் சிறப்புக்குத் தொழில்நுட்பத் துறையைத் தெரிவு செய்வது காலத் தின் கட்டாயமாகின்றது.

மாணவர்களாகிய நீங்கள் ஒழுக்கமுள்ள, பண்புள்ள, தொழில்நுட்ப அறிவு கொண்டவர்களாக மிளிர வேண்டும்.

கிராமப்புற மாணவர்களும் தொழில்நுட்ப அறிவு கொண்டவர்களாக மேன்மை பெற்று, சுயவேலை வாய்ப்புக்களுடன் வாழ வேண் டும் என்ற நோக்கத்தோடு அமைக்கப்பட்ட இந்தத் தொழில்நுட்ப ஆய்வு கூடத்தை அனைவரும் பயன்படுத்திப் பயனடைய வேண்டும். – என்றார்.

கல்லூரி அதிபர் வே.த.ஜயந்தனின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.ரவிச்சந்திரன், பொலிஸ் அதிகாரிகள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (ற)

# ரிஷாத் கட்சி எமக்கு சவாலாக இருக்காது

## மு.கா. செயலாளர் நாயகம் தெரிவிப்பு



அம்பாறை, ஜூலை 6

அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் அகில இலங்கை மக்கள் காங் கிரஸ், அம்பாறை மாவட்டத்தில் இந்த முறை தேர்தல் களத்தில் குதிப்பது சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு ஒரு போதும் சவாலாக அமையாது. – இவ்வாறு சுகாதார இராஜாங்க அமைச்சரும் சிறிங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகமுமான எம்.ரி.ஹஸனலி தெரிவித்துள்ளார்.

அமைச்சர் ரிஷாத்பதியுதீனைத் தலைவராகக் கொண்ட அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் இந்தமுறை அம்பாறை மாவட்டத்தில் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதுடன் அம்பாறை மாவட்டத்தின் ஒரு ஆசனத்தை, உறுதிசெய்யு மென்றும் அந்தக் கட்சியைச் சேர்ந்த பிரதி அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீரலி நேர்காணல் ஒன்றில் கூறியிருந்தார். அத்துடன் அங்கு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், முஸ்லிம் காங்கிரஸுக்குச் சவாலாக அமையுமெனவும் அவர் தெரிவித்தார்.

இது குறித்து முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகம் ஹஸனலியிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நிச்சயமாக அம்பாறை மாவட்ட தேர்தல் களத்தில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் பிரவேசம் முஸ்லிம் காங்கிரஸுக்கு ஒரு சவாலாக அமையாது.

முஸ்லிம் அரசியலை நாம் எடுத்துப் பார்க்கும்போது, ஒவ்வொரு கிராமத்திலும், முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் கிராமங்களில், முஸ்லிம் காங்கிரஸுக்கு எதிர்ப்பான சக்திகள் சிறுகூட்ட மாகத் தொடர்ந்து இருந்து கொண்டே வந்துள்ளது. அதில் ஒரு குறிப்பிட்ட வாக்குகள் முஸ்லிம் காங்கிரஸுக்குக் கிடைக்காது.

இது எந்தக் கிராமத்திலுமுள்ளதால், அந்த வாக்குகளுக்கு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியினர் ஆர்வம் கொண்டிருப்பார்கள்.

தவிரவும் முஸ்லிம் காங்கிரஸின் பலத்தைப் பலவீனப்படுத்தும் அளவுக்கு எமது பிரதேசங்களில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆதிக்கம் செலுத்த முடியாது.

**தயார்**

முஸ்லிம் காங்கிரஸைப் பொறுத்தவரை நாம் பொதுத் தேர்தலொன்றுக்காக எந்த வேளையிலும் தயாராகவே இருந்து வந்துள்ளோம். இந்தப் பொதுத்தேர்தலில் வடகிழக்குக்கு வெளியிலும் முஸ்லிம் காங்கிரஸ் நிச்சயமாகப் போட்டியிடும். வடக்கு, கிழக்குக்கு வெளியிலும் முஸ்லிம் காங்கிரஸுக்கு மாகாண சபை உறுப்பினர்கள் உள்ளதுடன், நூற்றுக்கணக்கான உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களும் உள்ளனர். அதற்கு ஏதுவாக நாம் பெற்று வரும் வாக்குகளும் அந்த இலக்கை அடைவதற்கு முக்கியமானதாக உள்ளது.– என்றார். (ற–30)

# நல்லிணக்கத்தை ஏற்படுத்த ஆவன செய்ய வேண்டும்

மதங்களுக்கிடையேயான சமாதான அமைப்பு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 6

20ஆவது அரசியல் அமைப்புத் திருத்தம் பற்றிய ஜனநாயக கருத்தொற்றுமைப்பாட்டை உருவாக்கும் செயன்முறை, தேசிய ஒற்றுமையையும் நல்லிணக்கத்தையும் உருவாக்குவதில் முக்கிய பங்களிப்பை வழங்கும் என்று மதங்களுக்கிடையேயான சமாதான அமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது. அதிலேயே இவ்வாறு குறிப்பிடப் பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

உள்நாட்டுப் போர் முடிவடைந் து, இன்று நாடு கட்டியெழுப்பப்படுகின்றது. இதன்போது மக்களிடையே பிரிவினைகளையும் பேதங்களையும் ஏற்படுத்தாமல் பாதிப்புற்ற உள்ளங்களை நலம்பெறச் செய்ய வேண்டும். அவர்களிடத்தில் நல்லிணக்கத்தையும் நல்லுறவையும் ஏற்படுத்த ஆவன செய்ய வேண்டும். இவற்றைக் கருத்தில் கொண்டு விருப்பு வாக்கு தேர்தல் முறையை இரத்துச் செய்யுமாறு அனைத்து அரசியல் கட்சிகள், அமைப்புக்கள், அபேட்சகர், தேர்வுக் குழுக்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

போதைப்பொருள் கடத்தல்காரர், குற்றச் செயலில் ஈடுபடுவோர், மோசடிக்காரர், கற்பழிப்புக்களில் ஈடுபடுவோர் போன்றோருக்கு எந்தவொரு தேர்தலிலும் அபேட்சகராக போட்டியிட நியமனப் பத்திரம் வழங்குவதைத் தவிர்க்க வேண்டும். உத்தேச 20ஆவது அரசியலமைப்புத் திருத்தமானது அரசியல் மற்றும் பிரதிநிதித்துவம் சிறிலங்கா சுதந்திரக் கட்சி – ஐக்கிய தேசியக் கட்சிகளுகளுக்கிடையே மாத்திரம் கேந்திரமயமாகாத முறையில் சகல அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புக்களுக்கிடையே பிரிந்து செல்வதற்கான வழிகளை மேற்கொள்ள வேண்டும். இதன்மூலம் சகல மக்களதும் கௌரவம், சமத்துவம், ஒற்றுமை மற்றும் நேர்மை வளர்ந்து உறுதியான ஜனநாயகம் மலரும்.– என்றுள்ளது. (ற–10)

# புதிதாகச் சிந்திக்கும் காலம் கனிந்துள்ளது

பாட்டலி சம்பிக்க ரணவக்க கூறுகின்றார்



கொழும்பு, ஜூலை 6

கல்வியறிவுமிக்க, திறமையான, நேர்மையானவர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்ப வேண்டும். அதற்கு மக்கள் சிந்தித்து செயற்பட வேண்டும். புதிதாக சிந்திக்க வேண்டிய காலம் தற்போது மலர்ந்துள்ளது. – இவ்வாறு ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளரும் மின்சக்தி அமைச்சருமான பாட் டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

ஜாதிக ஹெல உறுமய கட்சியினால் ஏற்பாடு செய்யப்பட்ட மக் கள் சந்திப்பொன்று, பொரளையில் இடம் பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அங்கு அவர் மேலும் தெரிவித் துள்ளதாவது:–

நாடாளுமன்ற உறுப்பினர்களாக உள்ள 225பேரில் 94பேர், க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் கூட சித்தியடையாதவர்கள். அந்த 225 பேரில் 192பேர், உயர்தரப் பரீட்சைக்கு தோற்றாதவர்கள் என்றும் கபே அமைப்பு அண்மையில் சுட்டிக்காட்டியுள்ளது. யாரை நாடாளுமன்றத்துக்கு அனுப்ப வேண்டும் என்று மக்கள் சிந்திக்க வேண்டிய காலம் கனிந்துள்ளது.– என்றார். (ற)



# நாட்டை விட்டுச் செல்லவில்லை

அர்ஜுன மகேந்திரன்

கொழும்பு, ஜூலை 6

தான் நாட்டை விட்டுச் சென்றிருப்பதாக அரசியல்வாதியொருவர் வெளிப்படுத்தியிருக்கும் கருத்தை மறுப்பதாகவும், ஜப்பானிய அரசின் உத்தியோகபூர்வ அழைப்பொன்றுக்கு அமைய பொருளாதாரச் செயற்பாடுகள் சம்பந்தப்பட்ட மாநாடொன்றில் கலந்து கொள்வது தொடர்பாகத் தான் நிதியமைச்சர் ரவிகருணா நாயக்கவுடன் ஜப்பானுக்கு சென்றிருந்ததாகவும் மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மத்திய வங்கியின் கேட்போர் கூடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றிருந்த செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள் ளார். (ற–22)

# மஹிந்த மீள்பிரவேசத்தால் சு.கவில் பெரும் பிரச்சினை

பிரதி வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 6

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கு சந்தர்ப்பம் வழங்கியமை, சிறிலங்கா சுதந்திரக்கட்சியில்பெரும்பிரச்சினைகளை ஏற்படுத்தும் என ஐக்கிய தேசியக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

மஹிந்தவை வேட்பாளர் பட்டியலில் இணைத்துக்கொண்டதன் மூலம் சுதந்திரக் கட்சி குப்பைத் தொட்டியாக மாற்றமடைந்துள்ளதாக பிரதி வெளிவிவகார அமைச்சர் அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ இல்லாத சுதந்திரக் கட்சி சில வேளைகளில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு சவால்களை ஏற்படுத்தக் கூடும் என்ற போதிலும், மஹிந்தவின் மீள் பிரவேசம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு சாதக நிலைமையை ஏற்படுத்தியுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

கட்சியை மறுசீரமைக்கும் பொன்னான வாய்ப்பை சுதந்திரக் கட்சி இழந்து விட்டதாகத் தெரிவித்துள்ளார். கோத்திரவாத பழங்குடியின அல்லது நாகரிக மற்ற தலைவர்களின் மீள் பிரவேசம் சுதந்திரக் கட்சியை மேலும் மலினப்படுத் துமே மேலும் தவிர வலுச் சேர்க்காது என அவர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார். (ற)



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** எண்ணத்தில் புத்துணர்வும், செயலில் சுறு சுறுப்பும் உண்டாகும். தொழில், வியாபாரத்தில், எதிர் பார்த்த முன்னேற்றம் உருவாகும். தக்க சமயத்தில், நண்பர் களின் உதவி கிடைக்கும். பழைய விவகாரம் ஒன்றில், சாதகமான தீர்வு ஏற்படும்.

**இடபம்:** எதிலும் முன்யோசனையுடன் செயல்படு வீர்கள். திட்டமிட்ட பணி அனைத்தும், எளிதாக நிறை வேறும். தொழில், வியாபாரத்தில், இலாபம் பன்மடங்கு உயரும். ஆரோக்கிய விடயத்தில் அக்கறை கொள்வீர்கள்.

**மிதுனம்**: புதிய முயற்சியில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில், இலாபம் அதிகரிக்கும். பிள்ளைகள் வழியில் ஆடம்பரச் செலவு செய் வீர்கள். மனைவியின் கருத்துக்கு மதிப்பளிப்பது நல்லது.

**கடகம்**: எதிர்மறை எண்ணத்துடன் பேசுவோரிடம் இருந்து விலகவும். தொழில், வியாபாரத்தில், நிர்வாகச் செலவு அதிகரிக்கும். வீட்டுச் செலவுக்காக, கடன் வாங்க நேரிடும். பாதுகாப்பு குறைவான இடங்களுக்கு செல்ல வேண்டாம்.

**சிங்கம்**: நட்பை, உயிராக மதித்துப் போற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில், அபிவிருத்திப் பணி நிறை வேறும். இஷ்ட தெய்வ வழிபாடு சிறப்பாக நடந்தேறும். பெண் களுக்கு ஆபரணச் சேர்க்கை உண்டாகும்.

**கன்னி**: மனதில் எண்ணியதை திறம்பட நிறைவேற்று வீர்கள். தொழில், வியாபாரம், சிறந்து புதிய சாதனை உருவாகும். வீடு, வாகனத்தில், பராமரிப்புச் செலவு உண்டா கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்திக்க நேரிடும்.

**துலாம்**: உறவினர் மத்தியில் நற்பெயர் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில், அதிர்ஷ்டவசமாக இலாபம் உண்டாகும். வெளியூர் பயணத்தின் மூலம், இனிய அனுபவம் ஏற்படும். எதிர்பார்த்த நல்ல செய்தி, வீடு தேடி வரும்.

**விருச்சிகம்**: எதிர்பார்ப்பு நிறைவேற காலதாமதம் ஏற்படும். தொழில், வியாபாரத்தில், வளர்ச்சிப் பணிகளில் ஈடுபடுவீர்கள். சேமிப்பு, முக்கிய செலவுக்கு பயன்படும். வாகனப் பயணத்தில் மித வேகம் பின்பற்றவும்.

**தனுசு**: அனைவரிடமும், நட்புப் பாராட்டி மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில், புதிய உத்தி மூலம் இலாபம் உய ரும். மனைவி வழி உறவினர்களிடம் நெருக்கம் அதிகரிக் கும். பிள்ளைகள் விரும்பியதை வாங்கித் தருவீர்கள்.

**மகரம்**: மனதில் குழப்ப சிந்தனை ஏற்படலாம். குடும்பப் பிரச்னையை பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில், மிதமான இலாபம் கிடைக்கும். உடல் நலத்துக்கு ஒவ்வாதவற்றை உண்ண வேண்டாம்.

**கும்பம்**: எதிலும் நேர்மை மிக்கவராகச் செயல் படுவீர் கள். தொழில், வியாபாரத்தில், விற்பனை அதிகரித்து இலா பம் கூடும். உறவினர் வருகையால், குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற் படும். மனைவி விரும்பிய பொருளை வாங்கிக் கொடுப்பீர்கள்.

**மீனம்**: தன்னம்பிக்கை மிக்கவராகத் திகழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில், இடையூறு மறைவதால், வருமானம் உயரும். உறவினர் வருகையால், திடீர் செலவு உண்டாகும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகைப் பயன் கிடைக்கும்.



## சூரிய ஒளி விமானத்தின் பயணம் வெற்றி

சூரிய ஒளியை மாத் திரம் கொண்டு இயங் கும் விமானம், தனது வரலாற்றுச் சிறப்புமிக்க பயணத்தை வெற்றிக ரமாக முடித்துக் கொண்டு அமெரிக்காவில் உள்ள ஹவாய் தீவில் தரையிறங்கியது.

அபுதாபியிலிருந்து கடந்த மார்ச் 9 ஆம் திகதி உலகைச் சுற்றும் இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க பயணத்தைத் தொடங்கிய விமானம், இதுவரை ஓமான், இந்தியா, சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளை கடந்து சென்றுள்ளது.

5 பகல் 5 இரவு இடைவிடாமல் வானில் பறந்து 7 ஆயிரத்து 900 கிலோ மீற்றர் தூரம் பயணிக்க வேண்டிய விமானம் கடந்த ஜூன் முதலாம் திகதி பயண தூரத்தில் பாதி தூரத்தை வெற்றிகரமாகக் கடந்தது. பின்னர் 4 நாள்கள் 22 மணி நேரத்திற் குள்ளாகவே, பயண தூரத்தைத் கடந்து ஹவாய் தீவில் வெற்றிகரமாகத் தரையி றங்கியது.

இதையடுத்து தங்களது ருவிட்டர் வலை தளத்தில் சூரிய ஒளி விமான நிறுவனம் கூறியிருப்பதாவது; நாங்கள் சாதித்து விட்டோம். நீங்கள் சாதித்துவீட்டீர்கள். உங்களது பேராதரவுக்கு நன்றி என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஸ்பைடர்மான் இவர்தான்



ஸ்பைடர் மானாக, நடி கர் டாம் ஹோலண்ட் தேர்வாகி உள்ளார். ஸ்பைடர்மான் கதை யைக் கொண்ட ஐந்து படங்கள் இதுவரை வெளியாகியுள்ளன. இதில் முதல் மூன்று படங்களில் டோபி மகியூரும், அடுத்த இரண்டு படங்களில் அண்ட்ரு கார்பீல்டும் நடித்தனர். அண்ட்ரூ கார்பீல்டு இந்தப் படங் களில் தன்னுடன் நடித்த எம்மா ஸ்டோனை நிஜவாழ்க்கையிலும் காதலித்து வருகிறார்.

இதற்கிடையில், புதிய ஸ்பைடர்மான் யார்? என்று சொனி பிக்சர்ஸ் நிறுவனமும், மார்வெல் ஸ்ரூடியோ நிறுவனமும் இணைந்து அறிவித்து உள்ளன. இதில் த இம்பாசிபிள் உட்பட சில படங்களில் நடித்துள்ள டாம் ஹோலண்ட், ஸ்பைடர்மான் பீட்டர் பார்க்கராக நடிக்கிறார். இவர், கப்டன் அமெரிக்கா: சிவில் வோர் என்ற படத்தில் ஸ்பைடர்மானாக சிறு வேடத்தில் நடித்துள்ளார். இதைத் தொடர்ந்து முழுநீள ஸ்பைடர் மான் கதாபாத்திரத்தில் நடிக்கிறார். இதை ஜோன் வட்ஸ் இயக்குகிறார். 2017 இல் படம் திரைக்கு வருகிறது.

## முதலைக்கும் மனிதனுக்கும் திருமணம்

நகர மேயர் ஒருவர் முதலையொன்றைத்திருமணம் செய்த சம்பவம் மெக்ஸிக்கோவில் இடம்பெற் றுள்ளது.

நகர மேயர் ஜோயல் வஸ்குயஸ் ரொஜஸ், மரியா இஸபெல் (வயது–3) என்ற முதலை இளவரசியைத் திருமணம் செய்துள்ளார்.

நகர மேயர் முதலையொன்றைத் திருமணம் செய்தால் அந்நகரில் வாழும் மீனவர்களுக்கு பெருமளவில் மீன்களும் கடல் உணவுகளும் கிடைக்கும் என்ற நம்பிக்கை பிராந்திய ம்க்களி டையே நிலவுவதால் இத்தகைய திருமணம் அங்கு வருடாந்தம் இடம்பெற்று வருகின்றது.

இந்தப் பாரம்பரிய திருமண வைபவத்தின் முதல் கட்டமாக மணப்பெண்ணான முதலைக்கு ஞானஸ்நானம் செய்துவைக்கப்பட் டது. அதன்பின் அந்த முதலை மணப்பெண் ஆடை அணிவிக்கப்பட்டு திருமணம் நடை பெறும் இடத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

அந்த முதலை, மணமகனையும் திருமணத்தில் கலந்துகொண்ட ஏனையவர்களையும் கடித்துக் குதறாமல் இருக்க அதன் வாயைச் சுற்றி நாடாவால் கட்டப்பட்டிருந்தது. இதன்போது மணமகனான ரொஜஸ் மணமகளுக்கு திருமண உறுதிமொழியை அளித்தார்.

இந்தத் திருமண நிகழ்வில் பெருந்தொகையான மக்கள் கலந்துகொண்டனர். திருமண விருந்துபசாரத்தை யடுத்து மணமகன், தனது புதிய மனைவியான முத லையை அங்குமிங்கும் நகர்த்தி அதனுடன் நடன மாடுவதில் ஈடுபட்டார்.

## ரஜினியுடன் இணையும் விக்ரம்

2016 ஆம் ஆண்டு ஷங்கர் இயக்கத்தில் ரஜினி நடிக்கவிருக்கும் எந்திரன்–2 படத்தில் முக்கிய வேடத்தில் நடிக்க ஒப்பந்தமாகி இருக்கிறார் விக்ரம்.

தற்போது ரஜினி – ஷங்கர் இருவரும் மீண்டும் இணைந்து எந்திரன் 2 படத்திற்கான கதை விவாதத்தில் ஈடுபட்டு வருகின்றனர். எந்திரன்–2 படத்தில் ரஜினிக்கு வில்லனாக நடிக்க கமலிடம் பேச்சு நடத்தினார்கள். ஆனால், கமல் மறுத்துவிட்டார். அதனைத் தொடர்ந்து விக்ர மிடம் பேச்சு நடத்தினார் ஷங்கர். இறுதியாக, எந்திரன் 2 படத்தில் நடிக்க சம்மதம் தெரிவித்திருக்கிறார் விக்ரம். இந்தப் படத்தின் கதைக்கு இறுதிவடிவம் கொடுக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறார் ஷங்கர். அதனைத் தொடர்ந்து ரஜினி, விக்ரம் அனை வருமே இந்தப் படத்தின் ஒப்பந்தத்தில் கையெ ழுத்திட இருக்கிறார்கள்.

எந்திரன் 2 படத்தில் நாயகனாக ரஜினி, வில்ல னாக விக்ரம், ஒளிப்பதிவாளராக நீரவ் ஷஜு, இசையமைப்பாளராக ஏ.ஆர்.ரஹ்மான் ஆகி யோர் ஒப்பந்தம் செய்யப்பட இருக்கிறார்கள்.







# விலங்குகளால் கடிக்கப்பட்டு 108 பேர் கடந்த மாதம் சிகிச்சை

## சாவகச்சேரி மருத்துவமனையில்

தென்மராட்சி, ஜுலை 6

தென்மராட்சி பிரதேசத்தில் கடந்த மாதம் 108 பேர் விலங்குகளால் கடியுண்ட நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளனர் என்று மருத்துவமனை செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் 68 பேர் வளர்ப்பு நாய்களாலும், 16 பேர் தெரு நாய்களாலும், 22 பேர் பூனைகளாலும், இருவர் ஏனைய விலங்குகளினாலும் கடியுண்ட நிலையில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இதேவேளை– கடந்த ஆறு மாதங்களில் விலங்குகளால் கடியுண்ட ஆயிரத்துக்கு மேற்பட்டோர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வளர்ப்பு நாய்களாலும், தெரு நாய்களினாலும் கடிபடுவோரின் எண்ணிக்கை மாதாந்தம் அதிகரித்துச் செல்கின்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

நாய்களை வளர்ப்போர் ஏனையோருக்கு கடிக்காத வகையில் கட்டி வளர்க்கவேண்டும். விலங்குகளால் கடிபடுபவர்களுக்குத் தடுப்பூசி மருந்துகள் பெருமளவில் பயன்படுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. இந்தத் தடுப்பூசி மருந்துகள் கொள்வனவுக்கு பெருமளவு நிதி செலவிட வேண்டிய நிலை சுகாதார அமைச்சுக்கு ஏற்படுகிறது. இதனால் மருத்துவமனைகளில் அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்புகள் உள்ளன.

மக்கள் வரிப் பணத்திலேயே இவை கொள்வனவு செய்ய வேண்டிய நிலை காணப்படுவதால் பொது மக்கள் தமது வளர்ப்பு நாய்களை மற்றவர்களை கடிக்காத அளவுக்கு பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும். தெரு நாய் மற்றும் வளர்ப்பு பூனைகளால் கடிபடுவோரின் எண்ணிக்கையும் கணிசமாக அதிகரிப்பதால் இவற்றிலிருந்து விலகி நடப்பதால் ஏற்படும் பாதிப்புக்களைத் தவிர்க்கலாம்.– என்று அந்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற–9)

# மஹிந்தவுக்கு இனி கிடைக்க இருப்பது அதிர்ச்சி விடையே

## ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவிப்பு



கொழும்பு, ஜுலை 6

மஹிந்தவுக்கு முடியுமானால், அவர் தான் ஜனவரி 8ஆம் திகதி பெற்ற 58 லட்சம் வாக்குகளில் 25 லட்சத்தையாவது பெற்று காட்டட்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணி–ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

மஹிந்தவைச் சுற்றி இன்று இருக்கும் அரசியல் கோமாளிகள், இனவாதிகள், மதவாதிகள், கூட்டுக்களவாணிகள், தமிழ்–முஸ்லிம் துரோகிகள் ஆகியோரை வெற்றி பெற செய்துக்காட்டட்டும். இந்த முறை மஹிந்தவுக்கு கிடைக்கப் போவது பிரியா விடை இல்லை. அது அதிர்ச்சி விடை. அதை தரப்போவது, தமிழ் பேசும் மக்கள் அல்ல. மஹிந்தவுக்கு எதிர்வரும் தேர்தலில் அதிர்ச்சி தரப்போவது, இந்நாட்டு சிங்கள மக்களே – என்றும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் அரசியல் நிலைவரம் தொடர்பில் கட்சி தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் உரையாற்றியபோது மனோ கணேசன் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

புதிய நிலைமைகள் இந்நாட்டு தமிழ் மக்கள் மத்தியில் ஒரு பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. தமது மக்கள் ஆணைக்கு மதிப்பு என்ன என்பது பற்றி தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் சிந்திக்க தொடங்கியுள்ளார்கள்.

இது நாட்டின் எதிர்காலத்துக்கு நல்லது அல்ல. இனவாதத்துக்கும், மதவாதத்துக்கும், அரச பயங்கரவாதத்துக்கும் எதிராக தாம் வழங்கிய ஆணையை தமிழ் பேசும் மக்கள் ஒருபோதும் வாபஸ் வாங்கிக்கொள்ள போவது இல்லை.

புதிய நிலைமைகளை கண்டு நாம் அஞ்சப்போவதும் இல்லை. ஜனாதிபதி தேர்தலில் தந்த நாகரிகமான பிரியாவிடை. தனக்கு போதவில்லை என்று மஹிந்த மீண்டும் வருகிறார். அவர் வரட்டும். வந்து வாங்கி செல்லட்டும். எதிர்வரும் பொது தேர்தலில் அவருக்கு வாழ்க்கையில் மறக்க முடியாத பதிலை தர நாம் தயாராகவே இருகின்றோம்.

அவரைச் சுற்றி இன்று இருக்கும் அரசியல் கோமாளிகள், இனவாதிகள், மதவாதிகள், கூட்டுக்களவாணிகள் ஆகியோரை வெற்றி பெற செய்து காட்டட்டும். இந்த முறை மஹிந்தவுக்கு கிடைக்கப் போவது பிரியாவிடை இல்லை.

ஜனவரி எட்டாம் திகதி இந்நாட்டு மக்கள் வழங்கிய மக்கள் ஆணை தொடர்பில் தமது இன்றைய நிலைப்பாட்டை இனியும் தாமதியாது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாட்டு மக்களுக்கு உடன் அறிவிக்க வேண்டும்.

மஹிந்தவை உள்வாங்கும் எந்த ஒரு தீர்மானத்துக்கும் ஜனவரி எட்டு அன்று ஆணையை வழங்கிய மக்கள் உடன்பட மாட்டார்கள் என்பதை ஜனாதிபதி அறிந்துக் கொண்டுள்ளார். தனது கட்சி எந்த நிலைப்பாட்டில் இருந்தாலும், மஹிந்தவை உள்வாங்கும் நிலைப் பாட்டில் ஜனாதிபதி இல்லை என்றும் நாம்நம்புகின்றோம்.– என்றார். (ற)

# தொழில் தேடுவோருக்கான பதிவுகள்

யாழ்ப்பாணம் ஜுலை 6

தொழில் தேடுவோருக்கான பதிவு நடவடிக்கைகள் நாளை செவ்வாய்க்கிழமை ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கிராம சேவகர்களது அலுவலகங்களில் மேற்கொள்ளப்படவுள்ளன.

யாழ். மாவட்டத்தில் சமீப நாள்களாக தொழில்தேடுவோர் தொடர்பான பதிவு நடவடிக்கைகள் பரவலாக முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் குறித்த செயற்றிட்டத்தின் ஒரு கட்டமாகவே ஊர்காவற்றுறை பிரதேச செயலகப் பிரிவில் குறித்த பதிவு நடவடிக்கைகள் மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ம)

# நிர்வாகக்குழுத் தெரிவு

யாழ்ப்பாணம் ஜுலை 6

யாழ்ப்பாணம் வதிரி வடக்கு மெதடிஸ்த மிஷன் தமிழ் பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் நடப்பு வருடத்துக்கான நிர்வாகத் தெரிவு கடந்த மாதம் இறுதிப் பகுதியில் நடைபெற்றது.

புதிய நிர்வாகத் தெரிவின்படி தலைவராக சி.வன்னியகுலமும் செயலாளராக சு.நிருத்திகளும், பொருளாளராக ச.உதயணனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த பாடசாலையின் பழைய மாணவர்கள் தமது அங்கத்துவத்தைப் புதுப்பித்துக்கொள்ளுமாறு நிர்வாகக்குழு அறிவித்துள்ளது. (ம)

# டெங்கு தொடர்பான பயிற்சி பட்டறை

தென்மராட்சி, ஜுலை 6

யாழ். மாவட்டத்தில் டெங்குத் தொற்றைக் கட்டுப்படுத்தும் முகமாக மருத்துவமனைகளில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிப் பட்டறை யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தால் நடத்தப்படவுள்ளது.

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் நாளைமறுதினம் புதன்கிழமை மதியம் தாதிய உத்தியோகத்தர்களுக்கும் எதிர்வரும் 15ஆம் திகதி மருத்துவ அதிகாரிகளுக்கும் டெங்கு தொடர்பான பயிற்சிப் பட்டறை நடைபெறவுள்ளது. (ற–9)

# சுயேச்சையாகவேனும் தேர்தலில் போட்டி

## ஆசாத் சாலி கூறுகின்றார்



கொழும்பு, ஜுலை 6

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் சுயேச்சையாகவேனும் கண்டி மாவட்டத்தில் போட்டியிடப் போவதாக தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் ஆசாத் சாலி தெரிவித்துள்ளார்.

தேர்தல் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

நாடாளுமன்ற தேர்தலில் கண்டி மாவட்டத்தில் போட்டியிடுமாறு மக்கள் தனக்கு அழைப்பு விடுத்துள்ளனர். இது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் பேச்சு நடத்தினேன். எனினும் கண்டி மாவட்டத்தில் இரண்டு முஸ்லிம்களை மாத்திரமே நிறுத்த முடியும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை தெரிவித்தது.

கடந்த தேர்தலில் இரண்டுக்கு அதிகமாக வேட்பாளர்களே ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் கண்டி மாவட்டத்தில் போட்டியிடுள்ளனர். இந்த நிலையில் இந்த முறை மாத்திரம் இரண்டு பேர் வாக்காளர்களாக நிறுத்தப்படுகின்றனர். இது தொடர்பில் ஐக்கிய தேசியகக் கட்சியுடன் தொடர்ந்து பேச்சு நடத்தப்படுகின் றது. எவ்வாறாயினும் மக்களின் கோரிக்கையை ஒரு போதும் என்னால் நிராகரிக்க முடியாது. இதற்கமைய சுயேச்சைக் குழுவிலும் கண்டி மாவட்டத்தில் போட்டி யிடுவேன்.

– என்றார். (ற–10)


**வேலையாள்கள் உடன் தேவை**

யாழ்ப்பாணத்திலுள்ள கட்டட நிர்மாண பணிக்கு அனுபவம் வாய்ந்தவேலையாள்கள் தேவை .

- மேசன்
- உதவியாளர்
- வர்ணப்பூச்சாளர் (Painter)

தொடர்பு: 077 723 8373

(68721) (3.5.7)




## யோகா பயிற்சி நெறி

சாந்தியகமும் யோகக் கேந்திரா வளாகமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள யோகா பயிற்சி நெறி இந்த மாதத்தின் நடுப்பகுதியில் ஆரம்பிக்கவுள்ளது. அதில் வயது வேறுபாடின்றி அனைவரும் கலந்துகொள்ளலாம் எனவும் சாந்தியகத்தில் மேற்படி பயிற்சிகள் நடைபெறும் எனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ற-10)


31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்
10.10.1926
மறைவு
06.06.2015

பொன்னாலையைப் பிறப்பிடமாகவும் சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட எமது குடும்பத்தலைவி
திருமதி
**வள்ளியம்மை (தங்கம்மா) கிருஷ்ணர்** அவர்கள்
அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு எமது இல்லத்துக்கு வருகை தந்தவர்களுக்கும் தொலைபேசி,மின்னஞ்சல் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"சிந்து பவனம்",
சிவன் கோயில் வீதி,
சித்தன்கேணி

குடும்பத்தினர்



எங்கள் அருமை பாசச்செல்வனின் ஒன்பதாம் ஆண்டு நினைவு அஞ்சலி

06.07.2015

அமரர்
செல்லத்துரை சிவபாதம்



அன்னை மடியில்
1952.06.10
ஆண்டவன் பாதத்தில்
15.07.2006

எங்களின் அருமருந்தென்ன செல்வமே தம்பி, அண்ணா எங்களைவிட்டு பிரிந்து ஆண்டுகள் ஒன்பது ஆகிவிட்டதையா நாமும் இவ்வுலகில் இருக்கும் வரை ஆறுமோ மறப்போமா? எங்கள் இதய ஜோதியை எம் உள்ளத்தில் நித்தமும் நினைத்து வணங்கிய பின்பே என் கடமையைத் தொடங்குகிறேன்.

"அன்னநிழல்"
செட்டியார் மடம்,
வட்டுக்கோட்டை.

(61467)(9.3.7)

நித்தமும் உன் நினைவாக வாழும்
உன் அருமை அக்காமார், தங்கை
செ.தனலட்சுமி.


## வீதியோரம் நடந்தவரை மோதியது மோ.சைக்கிள்

### இருவர் படுகாயம்

தென்மராட்சி, ஜூலை 6

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியில் நடந்து சென்றவரை மோதியது. அதில் நடந்து சென்றவரும் மோட்டார் சைக்கிளைச் செலுத்தியவரும் பலத்த காயங்களுக்கு இலக்காகினர்.

இந்தச் சம்பவம் கடந்த வியாழக் கிழமை இரவு நுணாவில் மத்தி பேச்சியம்மன் கோயிலுக்கு அருகில் ஏ-9 வீதியில் நடந்துள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த வைத்திலிங்கம் வைத்தீஸ்வரனும் (வயது-40), சாவகச்சேரி கச்சாய் வீதி உதய சூரியன் கிராமத்தைச் சேர்ந்த அருளப்பு சுதாகரனுமே (வயது-27 ) காயங்களுக்கு உள்ளானவர் களா வர். அங்குள்ள ஆலயத் திருவிழா ஒன்றில் கலந்து கொண்டிருந்த மக்கள் காயமடைந்து சுயநினைவையிழந்த நிலையில் காணப்பட்ட இருவரையும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். அவர்கள் இருவரும் அங்கிருந்து உடனடியாக யாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர். (ற-9)

## நேருக்கு நேர் மோதிய மோட்டார் சைக்கிள்கள்

### மூவர் காயம்

தென்மராட்சி, ஜூலை 6

இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதியதில் மூவர் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 7 மணியளவில் சங்கத்தானை ஏ -9 வீதியில் இடம்பெற்றது.

முன்னால் சென்ற வாகனத்தை முந்த முயன்ற மோட்டார் சைக்கிள் எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியது என்று தெரிவிக்கப் பட்டது.

அதில் அல்லாரை தெற்கைச் சேர்ந்த சின்னவன் சிவசுதன் ( வயது -29 ) நுணாவிலைச் சேர்ந்த பாலகுமார் பரந்தாமன் ( வயது -22 ) மீசாலை வடக்கைச் சேர்ந்த சிவகுமார் கஜன் ( வயது -22 ) ஆகியோரே காயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் சிவசுதன் மற்றும் பரந்தாமன் ஆகியோர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர்.

இதேவேளை- ஆலயப் பூசையை முடித்துக் கொண்டு வீடு திரும்பிய பூசகர் இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டு காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். மீசாலை வடக்கைச் சேர்ந்த சரவணபவக் குருக்கள் சகானாய சர்மா ( வயது -24 ) என்பவரே தாக்குதலுக்குஇலக்காகியுள்ளார். (ற-9)

## ஆங்கில தினப்போட்டிகளின் விருது வழங்கல்

யாழ்ப்பாணம், ஜூலை 6

யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலகத்தின் அனுசரணையில் வலய மட்ட ஆங்கில மொழித்தினப் போட்டிகளின் விருது வழங்கும் நிகழ்வு வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. யாழ்.வலய ஆங்கிலப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் கோ.சுப்பிரமணியம் தலைமையில் காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் என்.தெய்வேந்திரராஜாவும், சிறப்பு விருந்தினராக வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அதிபர் திருமதி.ச.வேணுகாவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்களுக்கு ஆங்கிலக் கையேடு வழங்கப்படவுள்ளது என்றும், யாழ். வலயப் பாடசாலைகளின் சகல ஆங்கில பாட ஆசிரியர்களையும், பாடசாலை அதிபர்களையும் கலந்துகொள்ளுமாறும் யாழ். வலய ஆங்கிலப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் கோ.சுப்பிரமணியம் அறிவித்துள்ளார். (ற-10)

## ஹிந்தி மொழி தெரிந்தோர் பதியலாம்

யாழ்ப்பாணம், ஜூலை 6

ஹிந்தி மொழியைப் பேசவோ, எழுதவோ, வாசிக்கவோ தெரிந்த வடமாகாண மக்களைப் பதிவு செய்யும் நடவடிக்கை யாழ்ப்பாணம் இந்தியத் துணைத்தூதரகத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. ஹிந்தி மொழியை எழுத, வாசிக்க, பேசத் தெரிந்தவர்கள் இந்தியத் துணைத் தூதரகத்தில் பதிவுகளை மேற்கொள்ளலாம் என தூதரகத்தினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை தூதரக இணையத்தளமான www.cgijaffna.org இல் பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்து விண்ணப்பப்படிவங்களை cgi.jaffna@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது இல.14, மருதடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள இந்திய துணைத் தூதரகத்துக்கு தபால் மூலமாகவோ அல்லது 021-222-0503 எனும் தொலை பேசி இலக்கத்துக்கு தொலைநகல் மூலமாகவோ எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்புமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-10)


## ஆக்கத்திறன் கண்காட்சியும் சந்தையும்

திக்கம் பாலர் பாடசாலை மாணவர்களின் ஆக்கத்திறன் கண்காட்சியும் சந்தையும் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. திக்கம் மத்திய சனசமூக நிலையத்தின் அனுசரணையில் திக்கம் கலாசார மண்டபத்தில் மு.ப 10 மணிக்கு நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வுக்கு சனசமூக நிலையத் தலைவர் க.திருவரங்கன் தலைமை வகிக்கவுள்ளார்.

நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ஜெ.சுதாகரன் கலந்துகொள்ளவுள்ளதுடன் ஏனைய விருந்தினர்களாக ஆசிரியர் ச.செந்தூரன், அரச நில அளவையாளர் த.கிரிதரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ற-10)


31 ஆம் நன்றி நவிலலும் நாள் நினைவஞ்சலியும்

செல்வராசா பிரசன்னா
(ஊழியர் மருத்துவபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்)



அன்னை மடியில்
05.11.1978
ஆண்டவன் அடியில்
06.06.2015

எமது குடும்ப விளக்கான அன்புத் தெய்வம் செல்வராசா பிரசன்னா அவர் களின் திடீர் மரணச் செய்தியைக் கேட்டு சகல உதவி ஒத்தாசைகளையும் வழங்கிய அயலவர், உறவினர், நண்பர்கள் ஆகி யோருக்கும் நேரடியாகக் கலந்து கொண்டும் தொலைபேசி வாயிலாக தம் துயரத்தைப் பகிர்ந்து கொண்டவர்களுக் கும் விபத்தின்பின் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றவர்கள் வைத்தியசாலை வைத்தியர்கள், ஊழியர்கள் மற்றும் பல்கலைக்கழக சமூகத்தினர் மற்றும் மலர்வளையம் வைத்தும், கண்ணீர் அஞ்சலிப்பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும் ஏனையோருக்கும் எமது நன்றிகள்.

மேலும் 45ஆம் நாளான 20.07.2015 அன்று காலை 5.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக்கிரியையிலும் 10.30 மணியளவில் இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

மோட்டம் சீமா
அல்வாய் கிழக்கு,
அல்வாய்.

(சி.16634)
(45.7.3)

குடும்பத்தினர்.



நினைவஞ்சலி

2 ஆம் ஆண்டு | 17 ஆம் ஆண்டு | 2 ஆம் ஆண்டு







அமரர் அப்புக்குட்டி நல்லதம்பி
அவனிக்கு முத்தாக 05.09.1918
அரனது சொத்தாக 27.06.2013

திருமதி நல்லதம்பி புனிதவதி
12.03.1925
01.07.1998

அமரர் நல்லதம்பி புவனகுமார் (புத்தா)
10.09.1953
15.08.2013

பண்புக்கும் அன்புக்கும் உதாரணமாய் வாழ்ந்துகாட்டி
நல்வாழ்வு நெறிவாழ வழிகாட்டியெம்மை நெறிப்படுத்தி
எம் வாழ்வை வளமாக்கிவைத்த எம் அன்புத்தெய்வங்கள் நீவிர்;
எம் உயிருள்ளவரை உங்கள் நினைவு எம்நெஞ்சில் நிலைத்திருக்கும்
உங்கள் ஆத்மாக்கள் ஆண்டவன் நிழலில் அமைதிபெறப் பிரார்த்திக்கின்றோம்.

உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.

(சி.16625) (45.6.3)

குடும்பத்தினர்.



கண்ணீர் அஞ்சலி

சங்க உறுப்பினரும் நாவற்குழி பொது நூலகத்தில் கடமையாற்றுபவருமான **அருணாசலம் சிவசுதன்**
அவர்களின் பாசமிகு தந்தையார்

**கந்தையா அருணாசலம்**

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

**சாவகச்சேரி பிரதேச சபை**
**ஊழியர் நலன்புரி சங்கம்.**

(சி.116635)
(45.5.3.6)

## வீரபத்திரர் ஆலய அலங்காரத் திருவிழா

தென்மராட்சி, ஜூலை 6

சாவகச்சேரி கோயில் குடியிருப்பு ஞான வீரபத்திரர் ஆலய அலங்காரத் திருவிழா நாளை ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும்

எதிர்வரும் 16 ஆம் திகதி பகல் சங்காபிஷேகமும் இரவு வீதியுலாவும் இடம்பெறும். கலாநிதி சிவஸ்ரீ து.கு.ஜெகதீஸ்வரக்குருக்கள் தலைமையில் திருவிழா கிரியைகள் இடம்பெறும். (ற-9)

## சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம்,ஜூலை 6

நாவற்குழி சித்திர வேலாயுதர் ஆலயத்தின் மணவாளக்கோலமும் சங்காபிஷேகமும் இன்று திங்கட்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது. அன்றைய தினம் மாலை 4 மணிக்கு திருக்கல்யாணம் நடைபெறும். (ஐ)

## தாம் புலனாய்வாளர் என்று கூறி கள் கேட்டவர்களுக்கு கவனிப்பு

தென்மராட்சி, ஜூலை 6

பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் எனக் கூறியஇருவர் காசில்லாமல் கள் வழங்குமாறு கேட்டதால் அங்கு நின்றவர்களின் முறையான கவனிப்பால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் கடந்த வாரம் தென்மராட்சி கிழக்குப் பகுதியில் உள்ள கள் தவறணையில் இடம்பெற்றுள்ளது.

நாகரிகமான உடையில் மோட்டார் சைக்கிளில் கள் தவறணைக்குள் சென்ற இருவர் தம்மை பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் என அறிமுகப்படுத்திக் கொண்டுள்ளனர். தவறணைக்குள் கசிப்பு விற்பனை செய்யப்படுவதாகத் தமக்கு தகவல் வந்துள்ளதால் சோதனையிடப் போவதாகக் கூறியுள்ளனர்.

தவறணை முகாமையாளரும் அதற்கு ஒத்தழைப்பு வழங்கினார். அங்கு கசிப்பு அகப்படாத நிலையில் தமக்கு போத்தலில் கள்ளு வழங்குமாறு கேட்டுள்ளனர். கிளை முகாமையாளரும் கள் வழங்குவதற்கு ஆயத்தங்கள் செய்த போது அங்கு வந்த வாடிக்கையாளர் ஒருவர் அங்கு நடந்தவை தெரியாமல் 'புலனாய்வு உத்தியோகத்தர்' ஒருவரின் பெயர் சொல்லி அழைத்ததுடன் தனக்கும் கள் வாங்கித் தருமாறு கேட்டுள்ளார்.

அப்போது தான் அவர்கள் இருவரும் புலனாய்வாளர்கள் இல்லை அயல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் என்பது வெளிச்சத்துக்கு வந்தது. அதையடுத்து அவர்களை அங்கிருந்தவர்கள் தம்மால் முடிந்த அளவு முறையாகக் கவனித்தனர். அங்கிருந்த ஓடிய இருவரும் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் இனந்தெரியாதோர் தாக்கியதாகக் கூறி விடுதியில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று இருநாள்களின் பின் வீடு திரும்பினர் என்று தெரியவருகின்றது.

மக்கள் அவதானமாக இருந்தால் இவ்வாறான போலி புலனாய்வாளர்களை இனங்கண்டு அவர்களை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்க வேண்டுமென பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது. (ற-9)


முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

சசிதரன் - மனோகரி தம்பதியரின் செல்வப்புதல்வன்

**ரிசாந்**



தனது முதலாவது பிறந்தநாளை இன்று (06.07.2015) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, தாத்தாமார், பாட்டிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், அத்தைமார், அக்காமார், அண்ணாமார், தங்கைமார், தம்பிமார், மச்சாண்மார், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோர் நாச்சி அம்மன் அருள் பெற்றுப் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ்க என்று வாழ்த்துகின்றனர்.

சிவபாலமூர்த்தி (தாத்தா)
திருநெல்வேலி.

(61685) (9.3.7)





சங்கத்தானை - சாவகச்சேரி
அருள்மிகு வைரவ சுவாமி கந்தசுவாமி கோவில்
மன்மத வருஷ திவ்விய மஹோற்சவம் - 2015

நிகழும் மங்கலகரமான மன்மத வருஷம் ஆனிமாதம் 22 ஆம் நாள் இன்று (06.07.2015) திங்கட்கிழமை சதய நட்சத்திரமும் பஞ்சமித்திதியும் கூடிய முற்பகல் 10.00 மணிக்கு வரும் சுபவேளையில் கொடியேற்றத்துடன் திவ்விய மஹோற்சவம் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் உற்சவம் நிகழ திருவருள் கைகூடியுள்ளதுடன் (08.07.2015) புதன்கிழமை மாலை 3.00 மணிக்கு புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டமும்,14.07.2015 செவ்வாய்க்கிழமை தேர் உற்சவமும் மிகச் சிறப்பாக நடைபெற உள்ளது. அனைத்து அடியவர்களும் வருகை தந்து முருகனது இஷ்ட சித்திகளைப் பெற வாழ்த்துவதோடு மஹோற்சவம் சிறப்பாக அமைய இறைவனை வேண்டுகிறோம்.

மஹோற்சவ பிரதமகுரு
"வேதாகம சிரோன்மணி" செஞ்சொற்செல்வர்"
ஆகம கிரியா ரத்தினம்
சிவஸ்ரீ தே. கௌரிசங்கர் குருக்கள்
(கல்வயல், சாவகச்சேரி.)

(59061) (45.7.3)


## செவ்வாய்க்கிழமைகளில் அல்லல்படும் நோயாளர்

### கொடிகாமம் பிரதேச மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவு இயங்காததால்

தென்மராட்சி, ஜூலை 6

கொடிகாமம் பிரதேச மருத்துவமனையில் பிரதி செவ்வாய்க்கிழமை காலைவேளை வெளிநோயாளர் பிரிவு இயங்காததால் நோயாளர்கள் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் அந்தப் பகுதி நோயாளர்கள் சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு சிகிச்சை பெறச் செல்லவேண்டியுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

பிரதி செவ்வாய்க்கிழமைகளில் கிளினிக் நடத்தப்படுவதால் காலையில் வெளிநோயாளர் பிரிவு இயங்காது எனவும் - பிற்பகல் 2 மணி தொடக்கம் வெளி நோயாளர் பிரிவு இயங்குமெனவும் மருத்துவமனை தெரிவித்துள்ளது.

மருத்துவமனையில் இரண்டு மருத்துவர்களே கடமையாற்றுவதாகவும், செவ்வாய்க்கிழமைகளில் மாலை 5 மணியுடன் வெளி நோயாளர் பிரிவு மூடப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது.(ற-9)


**Professional Spoken English**

**IDEA** consultancy is willing to introduce a special professional spoken English program in Jaffna
Individual study programs and
Group study programs are available.
please contact For Further DetailsIDEA Consultancy,
**No 15/1, Victoria Road (off Jaffna Hospital), Jaffna. 072 592 1450**

ஆங்கிலத்தில் பேசுவதற்கான விசேட பயிற்சி வகுப்புக்கள்
மேலதிக விவரங்களுக்கு அழையுங்கள்.
072592 1450 (61671)(45.6.3)



**வீடுகள் வாடகைக்கு வழங்கப்படும்**

யாழ்ப்பாணம், கச்சேரியை அண்மித்த பகுதிகளில் வெளிநாட்டிலிருந்து வருவோர் திருமணம் போன்ற சுப நிகழ்வுகளுக்காக வருபவர்களுக்கும் சிறந்த நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள குளிரூட்டி வசதியுடைய, சாதாரண வீடுகள் நாள் மற்றும் கிழமை வாடகைக்கு வழங்கப்படும். வெவ்வேறு தரத்திலான வீடுகள் நியாயமான கட்டணத்துடன் வாடகைக்கு வழங்கப்படும்.

தொடர்பு: 077 332 8510 (61714) (46.3.7)





**ஆங்கிலம்** மூன்று மாத சனி,ஞாயிறு பயிற்சி நெறி

தொழில்புரிவோர், பல்கலை புதுமுக மாணவர்கள் மாணவர்கள்,இளைஞர், யுவதிகளுக்கானது.

2வது பயிற்சிநெறி ஆரம்பம் : 11.07.2015

பிரிவு 1 : காலை 08.00-10.00 | பிரிவு 2 : மு.ப 10.00-12.00
பிரிவு 3 : பி.ப 01.00-03.00 | பிரிவு 4 : மாலை 03.00-05.00

யாழ்நகர் 021 320 33 13
சங்கானை 021 567 41 33
நெல்லியடி 021 3200 607

SAAMSON

077 621 4567
021 320 3313


## தேர்தல்கள் திணைக்களம் பாராளுமன்றத் தேர்தல் -2015

### பிரதேசத்தில் இருக்கும் நிலைமை காரணமாக தனக்கொதுக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையத்திற்கு நேரில் சென்று வாக்களிக்க முடியாதுபோகுமென்ற நியாயமான அச்சத்தைக் கொண்டுள்ள வாக்காளர்கள் வேறொரு வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிப்பதற்கான வசதிகள்

பிரதேசத்தில் இருக்கும் நிலைமை காரணமாக தனக்கொதுக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிக்க முடியாதுபோகுமென்ற நியாயமான அச்சத்தைக் கொண்டுள்ள வாக்காளரொருவர், வேறொரு வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்தித் தரும்படிக்கான கோரிக்கையொன்றை முன்வைக்கலாம் .1988 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 127ஆ ஆம் பிரிவின் கீழ் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

02. இதற்குத் தேவையான விண்ணப்பப்பத்திரங்களை அனைத்து மாவட்டங்களின் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களின் அலுவலகங்களிலும், பிரதேச செயலாளர்களின் மற்றும் கிராம அலுவலர்களின் அலுவலகங்களிலும் பெற்றுக்கொள்ள முடியும். அவ்வாறான விண்ணப்பப் படிவங்களை பெயர்குறித்த நியமன அறிவித்தல் வெளியிடப்பட்ட நாளிலிருந்து 2015.06.26 ஆம் திகதியிலிருந்து 7 நாள்களுக்குள் குறித்த விண்ணப்பப்பத்திரங்களைதேர்தல்கள் ஆணையாளர் தேர்தல்கள் செயலகம் சரணமாவத்தை, இராஜகிரிய எனும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். ஆயினும் இக்காலப்பகுதி 2015.07.10 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளமையால் குறிப்பிட்ட விண்ணப்பப்பத்திரங்களை 2015.07.10 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு மேற்கூறப்பட்ட முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

03 .விண்ணப்பதாரி வதிகின்ற பிரிவின் கிராம அலுவலரைக் கொண்டு விண்ணப்பப்பத்திரத்தை அத்தாட்சிப்படுத்திக்கொள்ள வேண்டுமென்பதுடன் விண்ணப்பதாரி அவரது தேசிய அடையாள அட்டை இலக்கத்தை விண்ணப்பப்பத்திரத்தில் குறிப்பிடுவது கட்டாயமாகும். கிராம அலுவலரினால் அத்தாட்சிப்படுத்தப்படாத விண்ணப்பப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

04. விண்ணப்பதாரர்களினால் 2014 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பை அடிப்படையாகக் கொண்டு அதிலுள்ள தகவல்களின் மூலம் விண்ணப்பப்பத்திரத்தைப் பூரணப்படுத்த வேண்டுமென்பதுடன் அவ்விடாப்புக்கள் அனைத்து மாவட்டச் செயலகங்களிலும் கச்சேரிகளிலும், மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களிலும் மற்றும் கிராம அலுவலர்கள் அலுவலகங்களிலும் காட்சிக்கு வைக்கப்படும்.


**தேர்தல்கள் செயலகம்.**
**சரண மாவத்தை,இராஜகிரிய**
**2015.07.06**

**மஹிந்த தேசப்பிரிய**
**தேர்தல்கள் ஆணையாளர்**

# மரண அறிவித்தல்

## Dr. அருளப்பு டோமினிக்

(வைத்தியர் - மூன்றாவது மாதர் வைத்திய பரம்பரை)



பிறப்பு 10.08.1956 இறப்பு 04.07.2015

இல.45,பற்றிக்ஸ் வீதி,யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட Dr.அருளப்பு டோமினிக் 04.07.2015 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருளப்பு (வைத்தியர்) மற்றும் றீற்றா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான காணிக்கைபாலன் மரியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சகாயராணியின் பாசமிகு கணவரும் றிபிலிசாந் (மருத்துவத்துறை மாணவன்), பெருனிக்கா ஆகியோரின் அன்புத் தந்தையும் பிலோமினா, கிறேஸ், கொலஸ்ரினா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (06.07.2015) திங்கட்கிழமை பிற்பகல் 3.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.45, பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்
மனைவி, பிள்ளைகள்
சகோதரிகள்,மைத்துனர்கள்.

(16637)(3.7.6.9)

## பிரான்ஸில் தமிழர்அடித்துக் கொலை

யாழ்ப்பாணம், ஜூலை 6

புலம்பெயர்ந்து பிரான்ஸில் வசித்து வந்த ஈழத் தமிழரான 53 வயதுடைய இராசையா ஈஸ்வரகுமார் என்பவர் இனந்தெரியாத நபர்களால் அடித்து கொலைசெய்யப் பட்டுள்ளார்.

பிரான்ஸில் அவர் தங்கியிருந்த வீட்டிலிருந்து உணவுப் பொருளொன்றை வாங்குவதற்காக அண்மையில் உள்ள கடை ஒன்றுக்குச் சென்ற பொழுதே குறித்த சம்பவம் நிகழ்ந்ததாகவும், பிரான்ஸில் அவர் வேலை பார்த்த நிறுவனத்துடன் கருத்து முரண்பாடுகள் இருந்ததால் குறித்த கொலையின் பின்னணியில் அந்த நிறுவனம் இருக்கலாம் என்று உறவினர்கள் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

கொலை தொடர்பாக பிரான்ஸ் பொலிஸார் தீவிரவிசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் இறந்தவரதுஉடல்இன்று பிரான்ஸில்அடக்கம் செய்ப்பட விருப்பதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (ம)

# மரண அறிவித்தல்

## திருமதி இராசம்மா கணபதிப்பிள்ளை



மண்கும்பான் 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வேலணை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா கணபதிப் பிள்ளை 05.07.2015 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மூத்ததம்பி கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான முருகேசு - சின்னத்தங்கம் தம்பதியரின் மூத்தமகளும் காலஞ்சென்றவர்களான மூத்ததம்பி - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகளும் பாலசுப்பிரமணியம் (பிரான்ஸ்), மகேஸ்வரி, அன்னலட்சுமி,லீலாவதி,மகாலெட்சுமி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை,கமலாம்பிகை மற்றும் பொன்னம்மா,சரஸ்வதி,பூபதி,சிந்தாமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சொர்ணம்மா, முத்துக்குமாரு, ஆறுமுகம், சோமசுந்தரம், சிவசம்பு மற்றும் நாகம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும் புஸ்பவதி(பிரான்ஸ்), சுந்தரலிங்கம் , குருபாலன், தேவசிகாமணி, சிறிதரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் அகிலன்,ராஜி, பாமா, காவேரி, தர்சன், ஜெயகௌரி, ஜெயராணி, துஸ்யந்தன், பிரியந்தன் காலஞ்சென்ற ஜெயவதனி மற்றும் விஜிதன், நிரோஜினி, மகிந்தன், திஷாலினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் டதுசன், சரணிகா, சஞ்சிதா, சவீசன், சயானி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(06.07.2015) திங்கட்கிழமை முற்பகல் 10மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வேலணை கிழக்கு,
வேலணை -2

தகவல்:
குடும்பத்தினர்.

(61716)(3.7.9)

# மரண அறிவித்தல்

## பொன்னையா நடராஜா



(தொழிலதிபர் - அண்ணா தொழிலகம், இணுவில்)

இணுவில் தெற்கினைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா நடராஜா (தொழிலதிபர் - அண்ணா தொழிலகம், இணுவில்) நேற்று (05.07.2015) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தில்லைநடராஜா - புஷ்பமலர் தம்பதியரின் அன்பு மருமகனும் இராசமலரின் அன்புக் கணவரும் திவாகரன்(அண்ணா தொழிலகம், இணுவில்), கண்ணதாசன்(அண்ணா தொழிலகம், கொழும்பு), தயாளினி ஆகியோரின் அன்புத் தந்தையும் அமுதா, தர்சினி, மதிமகன்(Civil Engineer)ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான சாரதாமணிதேவி, விவேகானந்தன் மற்றும் புனிதவதி, அன்னபூரணம், அன்னலட்சுமி, மகாலட்சுமி, ஜெயலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற தம்பிராசா மற்றும் பேரின்பநாயகிதேவி, காலஞ்சென்ற நட ராசா மற்றும் குலசிங்கம், செல்வநாயகம், காலஞ்சென்ற தில்லையம் பலம் மற்றும் ஸ்ரீஸ்கந்தவ ரோதயன் ஆகியோரின் மைத்துனரும் நந்திகா, பிரணவன், இராகவி, மதிதயனன் மதிதயனி, ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

அண்ணா தொழிலகம், இணுவில்.
077 730 1207, 0779675599,
077 333 4860, 077 768 2265.

தகவல்:
குடும்பத்தினர்.

(கி.16638) (45.3.6)



## வலியை உணர்வதில் வேறுபாடு விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

மனிதர்களில் ஏற்படும் பல்வேறு வகையான நோய்களுக்கான நிவாரணிகளைக் கண்டு பிடித்த பின்னர் அவற்றை எலிகளிலேயே விஞ்ஞானிகள் பரீட்சித்துப் பார்ப்பது வழக்க மாகும்.

இவ்வாறிருக்கையில் தற்போது வலியை உணர்வதில் ஆண் எலிகளுக்கும் பெண் எலிகளுக்கும் வேறுபாடு இருப்பதாக அமெ ரிக்காவின் McGill பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

இது பற்றி கருத்து தெரிவித்த விஞ்ஞானிகள் இந்த வேறுபாட்டுக்கான காரணங்கள் தெரியவில்லை எனவும், எதிர்காலங்களில் மேற்கொள்ளப்படவுள்ள மருத்துவ ஆய்வு களில் இந்த இயல்பு பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும் எனவும் தெரிவித் துள்ளனர்.

காயங்களின் தன்மைக்கு ஏற்ப வலி தொடர்பான சமிக்ஞைகளை நரம்புகளில் ஏற்படுத்துவதற்கு Microglia எனும் நோய் எதிர்ப்பு கலமே காரணமாக இருக்கின்றது.

இந்தக் கலத்தில் காணப்படும் வேறுபாடுகளே வலியை உணர்வதிலும் வேறுபாட்டை ஏற் படுத்தலாம் என விஞ்ஞானிகள் குறிப்பிட் டுள்ளனர்.

## மொபைல் சாதனங்களுக்கான யூடியூப் அப்பிளிக்கேஷனில் புதிய வசதி

முன்னணி வீடியோ பகிரும் தளமாக திகழும் யூடியூப் ஆனது 60fps வேகம் கொண்டதும், 4K Ultra HD வீடியோக்களை பகிரும் இந்த வருட ஆரம்பத்தில் அறிமுகம் செய்திருந்தது.

இவ்வாறான நிலையில் சில மாதங்களின் பின்னர் தற்போது அப்பிளின் iOS மற்றும் கூகுள் Android இயங்குதளங்களில் செயற்படும் சாதனங்களுக்கான யூடியூப் அப்பிளிக்கேஷன் ஊடாக 60fps வேகத்தில் வீடியோக்களை பார்வையிடும் வசதியை அறிமுகம் செய்துள்ளது.

இந்த அறிவித்தலை கூகுள் நிறுவனம் உத்தியோகபூர்வமாக வெளியிட்டுள்ளதுடன், 60fps வேகத்தில் உருவாக்கப்பட்ட ஹேம் ஒன்றின் மாதிரியும் வெளியிடப்பட்டுள்ளது.




## Samsung Galaxy A8 தொடர்பான வீடியோ வெளியீடு

சம்சுங் நிறுவனம் S தொடரில் தொடர்ச் சியாக ஸ்மார்ட் கைபேசிகளை அறி முகம் செய்துவந்த நிலையில் தற்போது A தொடரிலும் கைப்பேசிகளை அறி முகம் செய்கின்றது. இதன் தொடர்ச்சி யாக விரைவில் Galaxy A8 கைபேசியை அறிமுகம் செய்யவுள்ள நிலையில் இந்தக் கைப்பேசியின் வடிவம் மற்றும் ஏனைய அம்சங்கள் தொடர்பான வீடியோ ஒன்று வெளியாகியுள்ளது.

இந்தக் கைபேசி 5.7 அங்குல அளவு, 1920 x 1080 Pixel Resolution உடைய தொடுதிரையையும், 64bit Octa Core Qual comm Snapdragon 615 Processor, பிரதான நினைவகமாக 2GB RAM மற்றும் 16GB சேமிப்புநினைவகம் என்பவற்றைக் கொண்டுள்ளது.

இவை தவிர 16 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமரா, 5 மெகாபிக்சல் களை உடைய வீடியோ அழைப் புக்களை ஏற் படுத்து வதற்கான கமரா என்பவற் றுடன் 3050 mAh மின்கலத் தையும் உள் ளடக்கியுள்ளது.

## காத்தான்குடி நூதனசாலை தற்காலிகமாக மூடப்பட்டது

காத்தான்குடி, ஜூலை 6

காத்தான்குடியில் தொல்பொருள் ஆராய்ச்சித் திணைக்களத்தின் அனு சரணையுடன் நிர்மாணிக்கப்பட்ட பூர்வீக நூதனசாலையில் வைக் கப்பட்டுள்ள சிலைகளை அகற்று மாறு அகில இலங்கை ஜம்இய்ய துல் உலமா கேட்டுக்கொண்டதற் கமைய இன்று முதல் அவை அங்கிருந்து அகற்றப்படவுள்ளன.

அத்துடன் இன்று முதல் நூதன சாலை தற்காலிகமாக மூடப்பட வுள்ளதாகவும் முன்னாள் பிரதி யமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ் புல்லாஹ் தெரிவித்துள்ளார்.

காத்தான்குடியில் அமைக்கப்பட் டுள்ள இஸ்லாமிய பூர்வீக நூதன சாலையில் பராக்கிரமபாகு மன்ன ரின், உருவம் உட்பட சிலைகள், உரு வங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள் ளன. அவற்றை அகற்றுமாறு பல தரப்பினரும் எதிர்ப்பு நடவடிக்கை களில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து குறித்த உருவச் சிலை விவகாரத்தை அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் பத்வா குழுவின் கவனத்துக்கு கொண்டு வந்ததை அடுத்து, கடந்த 18ஆம் திகதி அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா பத்வா குழுவினர் நேரடி யாக வந்து பார்வையிட்டு இது தொடர்பான விடயங்களையும் கேட்டறிந்தனர்.

இதற்கமைய ஜம்இய்யதுல் உல மாவின் பத்வாகுழு குறித்த சிலை களை அகற்றுமாறு முன்னாள் பிர தியமைச்சர் ஹிஸ்புல்லாஹ்வுக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளது.

அந்தக் கடிதத்தின் பிரதிகள் காத் தான்குடி ஜம்இய்யதுல் உலமா மற்றும் காத்தான்குடி பள்ளிவாசல் கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம் மேளனம் என்பவற்றுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த ஹிஸ்புல்லாஹ் ஜம்இய்யதுல் உல மாவின் தீர்ப்பை ஏற்றுக்கொண்டு குறித்த உருவங்களை இன்று முதல் அகற்றுவதுடன் மறு அறிவித்தல் வரை நுதனசாலையை மூடுவதற் கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜம்இய்யதுல் உலமாவின் வேண்டு கோளின்படி அவைகளை டிஜிற்றல் வடிவில் வடிவமைக்க கால அவ காசம் தேவை என்பதால் நூதன சாலை தற்காலிகமாக மூடப்படுகின் றது. – என்றார். (ற)

## பஸ்ஸுடன் மோதி இருவர் படுகாயம்



ஹற்றன், ஜூலை 6

பொகவந்தலாவையிலிருந்து ஹற்றன் நோக்கி சென்ற மோட்டர் சைக்கிள் பொகவந்தலா வையி லிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ்ஸுடன் மோதி விபத்துக்குள்ளாகியதில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

பொகவந்தலாவை ஹற்றன் பிர தான வீதியில் நோர்வூட் தியசிரிகம பகுதியில் இந்த விபத்து நேற்றுக் காலை 9 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

படுகாயமடைந்தவர்கள் டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்கள் மேலதிக சிகிச்சைக்காக நாவலப் பிட்டி வைத்தியசாலைக்கு மாற்றப் படவுள்ளதாக கிளங்கன் வைத்திய சாலைவட்டாரங்கள்தெரிவிக்கின்றன.

இந்நிலையில் மோட்டர் சைக்கிள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பஸ் ஸின் பின் பகுதியில் மோதி விபத் துக்குள்ளாகியிருப்பதாகவும், இந்த விபத்து மோட்டார் சைக்கிள் சாரதி யின் கவனவீனம் காரணமாக நேர்ந்திருக்கலாம் எனவும் பொலி ஸார் தெரிவிக்கின்றனர். விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணை களை நோர்வூட் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (ற)

## குளவி கொட்டி நால்வர்காயம்

நுவெரலியா, ஜூலை 6

நுவெரலியா மாவட்டத்தில் நோர்வூட் மேற் பிரிவு தேயிலை தோட்டத்தில் வேலை செய்துக் கொண்டிருந்த நான்கு ஆண் தொழி லாளர்கள் குளவித் தாக்குதலுக்குள்ளாகியுள்ளனர்.

நேற்று முற்பகல் 11 மணியளவில் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்து கொண்டி ருந்த போதே குளவி தாக்கியுள்ளதாகத் தெரி விக்கப்பட்டுள்ளது.

தேயிலை மரத்தின் அடிப்பகுதியிலிருந்து கலைந்து வந்த குளவிக் கூட்டங்கள் தாக்கின என்று பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் தெரி வித்தனர்.

தாக்குதலுக்கு இலக்கான நான்கு பேரும் டிக் கோயா கிளங்கன் மாவட்ட வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின் றனர். (ற)

## கால்வாயில் விழுந்த யானை பெரும் முயற்சியால் மீட்பு

கொழும்பு, ஜூலை 6

மாதுறுஓயா காட்டுப் பகுதியிலிருந்து தண்ணீர் தேடி வந்த காட்டு யானையொன்று தவறிக் கால்வாய் ஒன்றினுள் வீழ்ந்துள்ளது.

பொலன்னறுவை, அரனகங்வில பகுதியிலுள்ள இசட் 'டி' கால் வாயினுள் விழுந்த குறித்த காட்டு யானை சுமார் 7 கிலோ மீற்றர் தூரம் அடித்துச் செல்லப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் அதிகாலை 3 மணியளவில் இடம்பெற் றுள்ளது.

கால்வாயிலிருந்து கரைக்கு மீள முடியாது போராடிக் கொண்டிருந்த யானையை கண்ட பிரதேசவாசிகள் உடனடி யாக வனத்துறை அதிகாரிகளுக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

அதனை தொடர்ந்து சம்பவ இடத்துக்கு வந்த வனத்துறை அதிகாரிகளும், பொலிஸாரும் குறித்த கால்வாயின் நீர்மட் டத்தைக் குறைத்து பிரதேசவாசிகளின் ஒத்துழைப்புடன் யானையை மீட்டனர்.

கால்வாயில் வீழ்ந்த யானையை அதிகாரிகள், பொலிஸார் மற்றும் பொதுமக்கள் சுமார் 10 மணிநேரம் வரையான போராட் டத்தின் பின்னரே வெளியே கொண்டு வந்தனர். (ற)

cmyk

# இஸ்ரேலின் போர்க்குற்றம் ஐ.நா. சபையில் தீர்மானம்



காஸா, ஜூலை 6

காஸா முனையில் கடந்த வருடம் நடைபெற்ற போரின் போது இஸ்ரேல் போர்க் குற்றங்களில் ஈடுபட்டதற்கான ஆதாரங்களை, ஐ.நா. மனித உரிமை ஆணையம் கண்டறிந்துள்ளது. அது தொடர்பாக ஐ.நா மனித உரிமை சபையில் வழங்கியுள்ள அறிக்கையை வரவேற்கும் வகையிலும், அந்தக் குற்றங்களுக்கு இஸ்ரேல் அதிகாரிகள் பொறுப்பேற்க வேண்டும் எனவும் மனித உரிமை சபையில் தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

அந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாக 41இற்கும் மேற்பட்ட நாடுகள் வாக்களித்தன. தீர்மானத்துக்கு எதிராக அமெரிக்கா வாக்களித்தது. அந்த வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல், இந்தியா புறக்கணித்தது. கென்யா மற்றும் மாசிடோனியா உள்பட மேலும் 4 நாடுகளும் இந்த வாக்கெடுப்பைப் புறக்கணித்தன. (ஐ)



## பதவியேற்றார் ஜெயலலிதா

சென்னை, ஜூலை 6

தமிழக முதல்வர் ஜெயலலிதா ஆர்.கே.நகர் தொகுதி சட்ட மன்ற உறுப்பினராக நேற்று முன்தினம் பதவி ஏற்றுள்ளார்.

ஆர்.கே.நகர் தொகுதியின் சட்ட மன்ற உறுப்பினர் வெற்றிவேல் பதவி விலகியதைத் தொடர்ந்து, அந்தத் தொகுதியில் இடைத் தேர்தல் நடத்தப்பட்டது. அதில் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா போட்டியிட்டார்.

கடந்த ஜுன் மாதம், 27 ஆம் திகதி இடைத் தேர்தல் வாக்குப்பதிவு நடந்ததையடுத்து மறுநாள் தேர்தல் முடிவுகள் வெளியாகின. அதில் ஜெயலலிதா அதிகமான வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். இதையடுத்து, நேற்று முன்தினம் சபாநாயகர் தனபால் முன்னிலையில் ஜெயலலிதா பதவியேற்றுள்ளார். (ஐ)

## பாலூட்டும் தாய்மார்களுக்கு தனி அறைகள்

### ஜெயலலிதா அறிவிப்பு

சென்னை, ஜூலை 6

தமிழக முதல்வர் ஜெயலலிதா பஸ் நிலையங்களில் பாலூட்டும் தாய்மார்களுக்கு தனி அறைகள் அமைக்கப்படும் என்று அறிவித்துள்ளார்.

உலகத் தாய்ப்பால் வாரமான ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் பாலூட்டும் தாய்மார்களுக்கு பஸ் நிலையத்தில் தனி அறை அமைக்கும் திட்டம் தொடங்கப்படும் என்றும், நகராட்சிப் பணிமனையுடன் கூடிய பஸ் நிலையங்களில் அதற்கான தனி அறைகள் அமைக்கப் படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

## 4 ஆயிரம் முறை குலுங்கிய ஜின்ஜியாங்

பீஜிங், ஜூலை 6

சீனாவில் நிலநடுக்கம் ஏற்பட்ட ஜின்ஜியாங் மாகாணத்தில், நிலநடுக்கத்தைத் தொடர்ந்து 4 ஆயிரம் முறை அதிர்வுகள் ஏற்பட்டுள்ளன.

சீனாவின் வடமேற்குப் பகுதியில் உள்ள ஜின்ஜியாங் உய்கர் தன்னாட்சி பிராந்தியத்தில் நேற்று முன்தினம் 6.5 ரிக்டர் அளவில் கடும் நிலநடுக்கம் ஏற்பட்டது. அந்த நிலநடுக்கம் ஹோட்டானில் பிஹான் கவுண்டி பகுதியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அங்கு ஆயிரக்கணக்கான வீடுகள் சேதம் அடைந்தன. பல வீடுகள் இடிந்து தரை மட்டமாகின. வீடுகளும், கட்டடங்களும் குலுங்கியதால் பொது மக்கள் பயத்தில் வீதிகளுக்கு வந்து தஞ்சம் புகுந்தனர்.

இடிபாடுகளில் சிக்கி 6 பேர் உயிரிழந்துள்ள நிலையில், நிலநடுக்கத்துக்குப் பின்னரும் அடுத்தடுத்து நில அதிர்வுகள் ஏற்பட்டதால் பொதுமக்கள் வீடுகளுக்குச் செல்லாமல் வீதிகளிலேயே இருந்தனர். முதலில் ஏற்பட்ட கடுமையான நிலநடுக்கத்துக்குப் பின்னர் 4 ஆயிரம் முறை நிலஅதிர்வுகள் ஏற்பட்டிருப்பதாகவும், அவற்றில் சில 4 ரிக்டர் அளவுக்கும் அதிகமாக இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிலநடுக்கத்தினால் 12 ஆயிரம் வீடுகள் சேதமடைந்ததாகவும், 66 ஆயிரம் மக்கள் வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பப் பட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஐ)

## டோங்கா நாட்டின் புதிய அரசர் முடிசூடினார்



நுகு அலோபா, ஜூலை 6

பசுபிக் கடலில் இருக்கும் டோங்கா நாட்டின் அரசராக ஆறாவது துபௌவுக்கு முடி சூட்டப்பட்டுள்ளது. சகோதரரின் மறைவுக்குப் பின்னர் ஆறாம் துபௌ அரசராக முடிசூட்டிக் கொணடார். அவர் மூன்றாண்டுகளுக்கு முன்பே அரச கடமைகளை நிறைவேற்ற ஆரம்பித்துவிட்டாலும், இப்போது தான் முறைப்படி முடிசூட்டப்பட்டுள்ளார்.

அந்த நாட்டின் தலைநகர் நுகு அலோபாவில் நடந்த அந்த விழாவில் ஜப்பானின் பட்டத்து இளவரசர் உள்ளிட்ட வெளிநாட்டு அரச குடும்பத்தினர் பங்கேற்றனர். தங்களது அரசரின் தலையைத் தொடுவது தவறு என டோங்காவாசிகள் கருதுகின்றனர். ஆகவே, ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஓய்வுபெற்ற மத போதகர் ஒருவர் அரசருக்கு முடி சூட்டினார். இந்த விழாவை முன்னிட்டு, கடந்த ஒரு வார காலமாகவே வீதிகள் விழாக்கோலம் பூண்டிருந்தன.

மெத்தடிஸ்ட் திருச்சபையைச் சேர்ந்த ஓய்வுபெற்ற மதபோதகரான டார்சி உட் அரசருக்கு முடி சூட்டியபோது, ஆயிரக்கணக்கான டோங்கர்களும் சுற்றுலாப் பயணிகளும் அதனைக் கண்டுகளித்தனர். சுமார் பதினைந்தாயிரம் பேர் இந்த விழாவில் பங்கேற்றனர். ஜப்பானிய பட்டத்து இளவரசர் தவிர, ஹங்கேரியின் இளவரசர் ஜார்ஜ் வோன் ஹாப்ஸ்பர்க், ஆகியோர் இந்த விழாவில் கலந்துகொண்டனர். (ஐ)

## கைகோர்த்துக்கொண்டே சாவைத் தழுவிய தம்பதியினர்

வொஷிங்டன், ஜூலை 6

அமெரிக்காவில் 75 வருடங்களாக ஒன்றாக இணைந்து வாழ்ந்து வந்த தம்பதியினர் ஒன்றாகக் கைகோர்த்துகொண்டு உயிரிழந்துள்ள சம்பவம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் கலிபோர்னியாவைச் சேர்ந்த அலெக்சாண்டர்(95), ஜேனெட்(96) தம்பதி யினர் 1940 ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டனர். இல்லற வாழ்க்கையை நல்லறமாய் நடத்திவந்த அவர்களது வாழ்க்கைக்கு அடையாளமாக 5 குழந்தைகள், 10 பேரக்குழந்தைகள் உள்ளனர். இந்த நிலையில்ஜேனெட் உடல் நலக் குறைவால் படுத்த படுக்கையிலேயே தொடர்ந்து இருந்து வந்துள்ளார். கணவனின் அருகில் இருந்து அவரைக்கவனித்துக் கொண்ட ஜேனெட், தனது கணவருடன் இணைந்தேசாவைத் தழுவ வேண்டும் என்று ஆசைப்பட்டார்.



மேலும், நாங்கள் இருவரும் கைகளைக் கோர்த்த வண்ணம் உயிரிழக்க வேண்டும் என்ற தங்களது ஆசையை பிள்ளைகளிடம் தெரிவித்து வந்துள்ளனர்.

அவர்கள், ஆசைப்பட்டபடியே இறப்பிலும் கைகோர்த்தபடியே உயிரிழந்துள்ளனர், தங்களது தாத்தா பாட்டி இறந்துவிட்டதை நினைத்து பேரக் குழந்தைகள் கவலையில் உள்ளனர். (ஐ)

# சிறுவர்களைத் தீவிரவாதிகளாக மாற்றும் ஐ.எஸ் தீவிரவாதிகளின் அடாவடி





பல்மைரா, ஜூலை 6

சிரியா இராணுவத்தினரைச் சிறுவர்கள் படுகொலை செய்யும் வீடியோவை வெளியிட்டு ஐ.எஸ் தீவிரவாதிகள் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளனர்.

சிரியாவில் உள்ள புராதான நகரான பல்மைராவைக் கடந்த மார்ச் மாதம் ஐ.எஸ் தீவிரவாதிகள் கைப்பற்றினர். அதையடுத்து அந்த நகரில் உள்ள புராதனச் சின்னங்களை அழிக்கும் முயற்சியில் அவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில் அவர்கள் தங்களுக்கு எதிராகத் தாக்குதலில் ஈடுபட்ட சிரிய இராணுவத்தினர் 25 பேரையும், சிறுவர்களைக்கொண்டுபடுகொலை செய்யும் வீடியோவை வெளியிட்டுள்ளனர்.

அதில், சிரியாவின் பல்மைரா நகரில் உள்ள ரோமானிய கட்டிட அமைப்பில் உள்ள அரங்கு ஒன்றின் முன்னால் சுமார் 25 சிரிய இராணுவத்தினர் முட்டி போட்டபடி இருக்கின்றனர். அவர்களின் பின்னால் 13 , 14 வயது மதிக்கத்தக்க சிறுவர்கள் கையில் துப்பாக்கியுடன் உள்ளனர். மேலும் அங்கு வேடிக்கை பார்ப்பதற்காக ஏராளமான ஆண்களும் சிறுவர்களும் குவிந்துள்ளனர். பின்னர் ஐ.எஸ் தீவிரவாதிகளின் தலைவர் ஒருவர் அந்த இராணுவத்தினரைச் சுடும்படி சிறுவர்களுக்குக் கட்டளை பிறப்பிக்கின்றார்.

உடனே சிறுவர்களும் தங்கள் கையில் உள்ள துப்பாக்கியால் அவர்களைச் சுடுவது போன்ற காட்சி அந்த வீடியோவில் பதிவாகியுள்ளது. ஐ.எஸ் தீவிரவாதிகளின் இந்தச் செயல் பல்வேறு தரப்பினரின் கண்டனத்துக்கு ஆளாகியுள்ளது.

இந்த நிலையில் கடந்த சில வாரங்களில் ஐ.எஸ் தீவிரவாதிகள் 500 இற்கும் மேற்பட்ட சிறுவர்களைக் கடத்தித் தீவிரவாதிகளாக மாற்றி வருவதாகத் தகவலகள் வெளியாகியுள்ளன. (ஐ)

# துனீசியத் தாக்குதலால் அவசர நிலை பிரகடனம்



துனீஸ், ஜூலை 6
துனீசியாவில் நடைபெற்ற தீவிர வாதத் தாக்குதலுக்குப் பின்னர், அரசுக்கு அதிக அதிகாரம் கொடுக்கும் வகையில் அந்த நாட்டின் ஜனாதிபதியால் துனீசியாவில் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.
துனீசியாவின் தலைநகரான துனீஸ் நகரில் இருந்து சுமார் 150 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள சவ்ஸி கடற்கரைப் பகுதி, உள்நாட்டினர் மற்றும் ஐரோப்பிய நாட்டினர் தேடி வந்து தங்கி இளைப்பாறும் சுற்றுலா தலமாக விளங்கி வருகின்றது. அங்குள்ள இம்ப்ரியல் மர்ஹபா ஹோட்டல் பகுதியில் கடந்த வாரம் திடீரெனப் புகுந்த ஒரு தீவிரவாதி அங்கு கூடியிருந்த மக்களின் மீது இயந்திரத் துப்பாக்கியால் கண்மூடித்தனமாக சுட்டுள்ளார்.
அதில் துனீசியா, ஜேர்மனி, பெல்ஜியம் மற்றும் அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த 38 பேர் உயிரிழந்தனர்.
அந்தத் தாக்குதலுக்கு பின்னர் ஏற்பட்டுள்ள நிலையைச் சமாளிக்கவும், தீவிரவாதிகள் மீது நடவடிக்கை எடுக்கவும் அரசுக்கு அதிக அதிகாரம் கொடுக்கும் வகையில் அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளதாக அந்த நாட்டின் ஜனாதிபதி; பெஜி கைட் எசெப்சி அறிவித்துள்ளார்.

**பாதிப்படையும் சுற்றுலாத்துறை**

முப்பதுக்கும் மேற்பட்ட பிரிட்டன் சுற்றுலாப்பயணிகள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து ஆயிரக்கணக்கான சுற்றுலாப்பயணிகள் வெளியேறுவதால் துனீசியாவின் சுற்றுலாத்துறை மாபெரும் சரிவை சந்திக்குமென அச்சம் எழுந்துள்ளது.
சுட்டுக்கொல்லப்பட்ட முப்பத்தெட்டு பேருக்கும் நினைவஞ்சலி செலுத்தும் விதமாக பிரிட்டனிலும் துனீசியாவிலும் கடந்த வெள்ளியன்று ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.
பிரிட்டன் மகாராணியும் அவரது கணவரும் அந்த நினைவஞ்சலிக்கு தலைமையேற்றனர்.
தாக்குதலின் விளைவாக துனீசியாவிலிருந்து பல்லாயிரக்கணக்கான பிரிட்டன் சுற்றுலாப் பயணிகள் வெளியேறியுள்ள நிலையில் துனீசியாவில் பரவலான அஞ்சலி நிகழ்வுகள் நடத்தப்பட்டன.
துனீசியாவிலிருந்து ஆயிரக்கணக்கான பிரிட்டன் சுற்றுலாப் பயணிகள் வெளியேறிக்கொண்டிருக்கும் பின்னணியில் இனிமேல் எத்தனை பேர் அங்கு வருவார்கள் என்றும் சொல்லமுடியாது.
ஆனால் சுற்றுலாப்பயணிகளில் சிலர் துனீசியாவை விட்டுச் செல்லக் கூடாது என்றும் தெரிவித்துள்ளனர். நாம் இங்கிருந்து வெளியேறினால் அது அந்தத் துப்பாக்கிதாரிக்கு கிடைக்கின்ற வெற்றியாகிவிடும். நாம் அதனைச் செய்யவேமாட்டோம் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.
துனீசியாவில் தற்போது பாது காப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. ஆனாலும் துனீசிய அரசும் மக்களும் மீண்டும் உலக சுற்றுலாப்பயணிகளை தமது அழகான கடற்கரைகளுக்கு ஈர்க்க வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளனர். அதன் மூலம் மட்டுமே கொலை செய்த இஸ்லாமிய வாத துப்பாக்கிதாரியை தோற்கடிக்க முடியும் என்பது அவர்களின் வாதமாக, எதிர்பார்ப்பாகவும் உள்ளது. (ஐ)



## குட்டி இளவரசிக்கு அழகிய கிரீடம் தயார்

லண்டன்,ஜூலை 6
பிரிட்டனின் குட்டி இளவரசி சார்லோட் எலிசபெத் டயானாவுக்கு அழகிய கிரீடம் வடிவமைக்கப்பட்டுள்ளது.
பிரிட்டன் இளவரசர் வில்லியம், கேட் மிடில்டன் தம்பதியினருக்கு கடந்த மே மாதம் அழகிய பெண் குழந்தை ஒன்று பிறந்துள்ளது.
அவருக்கு சார்லோட் எலிசபெத் டயானா எனப் பெயர் சூட்டியுள்ளனர், இந்த நிலையில் புதிதாக பிறந்த அந்தக் குட்டி இளவரசிக்கு புதிய கிரீடம் வடிவமைக்கப்பட்டுள்ளது.
அந்த கிரீடத்தை ஆஸ்டின் நகைக் கடைத்தயாரித்துள்ளது. (ஐ)




## சொத்துக்களைத் தானம் செய்யும் சவூதி இளவரசர்

ரியாத்,ஜூலை 6
சவூதி இளவரசர் அல்வலீத் தனது சொத்துக்கள் முழுவதையும் தானம் செய்யப்போவதாக அறிவித்துள்ளார்.
உலகப் பணக்காரர்களில் ஒருவரான சவூதி இளவரசர் அல்வலீத்தின் சொத்து மதிப்பு 28.8 மில்லியன் யூரோ ஆகும்.
அவர் தனது சொத்துக்கள் அனைத்தையும், சமூக மேம்பாடு, பெண்கள் முன்னேற்றம், பேரிடர் நிவாரணம், இளைஞர்கள் மேம்பாடு போன்றவற்றுக்குச் செலவிடப்போவதாக அறிவித்துள்ளார்.
அதற்கான திட்டம் இனிவரும் காலங்களில் வகுக்கப்படும் என்றும்- எனது இறப்புக்குப் பின்னர் எனது மகன் கலித் மற்றும் மகள் ரீம் ஆகியோர் இந்த அறக்கட்டளையை பார்த்துக்கொள்வார்கள் எனவும் கூறியுள்ளார். (ஐ)

## குற்றவாளிக்கூண்டில் கதறி அழுத குற்றவாளி

புளோரிடாவில் தனது பாடசாலை நண்பியை நீதிவானாகப் பார்த்த குற்றவாளி உணர்ச்சிவசப்பட்டு கதறி அழுதார்.
புளோரியாவின் மியாமியைச் சேர்ந்த ஆர்த்தூர் பூத் என்ற நபர் தொடர் கொள்ளை, களவு போன்ற செயல்களில் ஈடுபட்ட குற்றத்துக்காக கடந்த வாரம் கைது செய்யப்பட்டார்.
அதனைத் தொடர்ந்து அவர் மீது குற்றச்சாட்டு பதிவுசெய்யப் பட்டு வழக்கு ஒன்று நடைபெற்றது. அந்த வழக்கில் ஒரு நெகிழ்ச்சியான நிகழ்வு நடைபெற்றுள்ளது. அந்த வழக்கை விசாரிக்க நீதிவானாக வந்த பெண்மணி அந்தக் குற்றவாளியின் பாடசாலை நண்பியா வார். ஆர்த்தூரை குற்றவாளி கூண்டில் பார்த்து அதிச்சி யடைந்த நீதிவான், உங்களுக்கு என்ன நடந்தது. ஏன் இவ்வாறு மாறிவீட்டீர்கள். மேலும், பாடசாலைப்



பருவத்தில் நீங்கள் சிறந்த மாணவராக விளங்கினீர்கள், உங்களுடன் இணைந்து நான் உதைப்பந்தாட்டம் விளையாடி யுள்ளேன். உங்களை இப்படி குற்றவாளியாக பார்ப்பது எனக்குக் கவலையாக உள்ளது என வார்த்தைகளை உதித்துள்ளார்.
அதனைக் கேட்டு ஆர்த்தூர், பதிலளிக்கமுடியாமல் கூண்டில் இருந்து கொண்டு உணர்ச்சிவசப்பட்டு கதறி அழுதுள்ளார்.(ஐ)






அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் மகள் மலியாபிரபலதொலைக் காட்சி ஒன்றின் படப்பிடிப்பு நிகழ்வின் போது உதவியாளராக பணியாற்றியுள்ளார். அந்த நிகழ்வில் தயாரிப்பு உதவியாளராக செயற்பட்டதோடு மட்டும்மல்லாமல் சக பணியாளர்களுக்கு தேநீர் கொடுத்து பரிமாறியுள்ளார். ஒரு நாட்டின் ஜனாதிபதியின் மகள் என்ற ஆடம்பரம் ஏதும் இல்லாமல் அவர் மிகவும் எளிமையாக நடந்துகொண்டுள்ளார். (ஐ)

## அமெரிக்காவின் இரகசியங்களை சீனா உளவு பார்க்கிறது

**ஹிலாரி கிளிண்டன் குற்றச்சாட்டு**

வொஷிங்டன்,ஜூலை 6
அமெரிக்காவின் இரகசியங்களை சீனா உளவு பார்ப்பதாக அந்த நாட்டின் முன்னாள் வெளி[illegible]றவுத்துறைச் செயலரும், ஜனந[illegible]யகக் கட்சியின் முன்னணி ஜனாத[illegible]தி வேட்பாளருமான ஹிலாரி கிளி[illegible]ண்டன் குற்றஞ்சாட்டியுள்ளார்.
அமெரிக்க நாட்டின் ஜனாதிபதி ப[illegible]ராக் ஒபாமாவின் பதவிக் காலம் [illegible]ர் வரும் 2016 ஆம் ஆண்டுடன் நி[illegible]ற வடைகிறது. இதனையடுத்து ஒப[illegible]ா சார்ந்த ஜனநாயகக் கட்சியின் [illegible]ன்னணி ஜனாதிபதி வேட்பாள[illegible]க ஹிலாரி கிளிண்டன் முன்னிறு[illegible]ப் பட்டுள்ளார். அதனைத் தொட[illegible]து நாட்டின் பல்வேறு இடங்க[illegible]ல் அவர் தீவிர பரப்புரை [illegible]ற் கொண்டு வருகிறார்.
இதன் ஒருபகுதியாக ஹாம்ப்[illegible]யரில் ஹிலாரி பரப்புரை [illegible] கொண்டார். அதன்போது, சீன[illegible]ணுவம் வேகமாக வளர்[illegible]டைந்து வருகிறது. எனவே [illegible] விழிப்புணர்வுடன் இருக்க [illegible]டும். பிலிப்பைன்ஸில் சீனா அ[illegible] வரும் செயற்கைத்தீவு மற்றும் [illegible] நாட்டின் இராணுவக் கட்ட[illegible] கள் பல நாடுகளுக்கு எச்சரி[illegible] விடுக்கின்றன. அவை நம[illegible] விடுக்கப்பட்ட எச்சரிக்கைய[illegible] இராணுவத் தளபாட ஒப்ப[illegible] கள், அரச தகவல்கள் என [illegible]ரிக்காவின் இரகசியங்க[illegible] திருடி அவற்றைத் தங்களு[illegible] சாதகமாக சீனா பயன்ப[illegible] கொள்கிறது எனக் குறி[illegible]டுள்ளார்.

## ரஷ்யா-அமெரிக்கா இணைவதற்கு ஒபாமாவுக்கு புடின் அழைப்பு




வொஷிங்டன்,ஜூலை 6
சமரசம் மற்றும் பரஸ்பர மரியாதை அடிப்படையிலான பேச்சை நடத்துவதற்கு அமெரிக்காவுக்கு ரஷ்ய ஜனாதிபதி புடின் அழைப்பு விடுத்துள்ளார்.
அமெரிக்காவின் சுதந்திரதினம் நேற்று முன்தினம் கொண்டாடப்பட்டது. அதனை முன்னிட்டு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.
இது தொடர்பாக அவர் விடுத்துள்ள செய்தியில், சர்வதேச அளவிலான நிலைத்தன்மை மற்றும் பாதுகாப்புக்கு அமெரிக்கா மற்றும் ரஷ்யா இணைந்து செயற்பட வேண்டும்.
இரு நாடுகளும் இணைந்து செயற்பட்டால் சர்வதேச அளவிலான பிரச்சினைகளுக்கு கண்டிப்பாக முடிவு கண்டுபிடிக்கலாம் என்றும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

பேராசிரியர்
அம்மன்கிளி முருகதாஸ்
பணிப்பாளர்
சுவாமி விபுலானந்தா
அழகியற்கற்கைகள் நிறுவகம்

## தமிழ்ப் புலமை வரலாற்றின் மிகப்பெரும் தூண்

# பேராசிரியர் சிவத்தம்பி

**தமிழ், சிங்களம் ஆங்கிலம் ஆகிய மொழிகளைத் தமதாக்கிக் கொண்ட பேரசிரியர் ஆசிரியராக, இலங்கை நாடாளுமன்றத்தின் சமகால மொழிபெயர்ப்பாளராக கடமையாற்றியதுடன் பல்கலைக்கழகப் பேராசிரியராக வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களின் விருந்து நிலைப்பேராசிரியராக (சுவீடன் உப்சலா பல்கலைக்கழகம், சென்னைப்பல்கலைக்கழகம், தஞ்சா வூர்ப் பல்கலைக்கழகம், மலேசி யாப் பல்கலைக்கழகம்) பணியாற்றினார்.**



இன்று அன்னாரது நான்காவது நினைவு தினமாகும்.

பேராசிரியர் சிவத்தம்பி தமிழ் ஆய்வுத்துறையை எல்லா வகைகளி லும் ஓங்கி உலகளக்க வைத்தவர். தன் புலமையின் மேன்மையால் அறிவாளிகள் அனைவரையும் தன்னை நிமிர்ந்து பார்க்கச் செய்தவர். ஐம்பது வருடங்களுக்கு மேலாக தமிழாய்வின் தூணாக இருந்து செயல்பட்டு 2011 இல் அவர் காலமானபோது அவர் விட்டுச்சென்ற புலமையின் இடைவெளி இன்னும் தமிழ் அறிவுலகில் நிரப்பப்படவில்லை என்பதை நாம் யாவரும் ஒப்புக் கொண்டாக வேண்டும்.

அவரது தந்தை யாழ்ப்பாணம் கரவெட்டி சைவப்புலவர் த.பொ. கார்த்திகேசு. அவர் யோகர் சுவாமிகளின் தீர்க்கதரிசனத்தால் பெயரிடப்பட்ட தன் மகன் சிவத்தம்பி அவையத்து முந்தியிருப்பதற்கு வழிகாட்டியாக இருந்தார்.

பேராசிரியர் சிவத்தம்பியின் கல்வித்தேடல் யாழ் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியிலிருந்து மருதானை சாகிராக்கல்லூரி வழியாக இலங்கைப்பல்கலைக் கழகம் கடந்து பர்மிங்காம் பல்கலைக்கழகம் வரை வியாபித்தது. பிரித்தானியாவின் பர்மிங்காம் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் ஜோர்ஜ்தோம்சனின் கீழ் கலாநிதிப்பட்ட ஆய்வை சிவத்தம்பி மேற்கொண்டமையானது அவரது ஆய்வு நோக்கிலும் போக்கிலும் பெரிய திருப்பு முனையை ஏற்படுத்தியது. மார்க்சிய நோக்கில் தனது ஆய்வுகளை மேற்கொள்ளத் தொடங்கினார். அதுவே அவரது புலமைத்தேடலின் பலமாயிற்று.

தமிழ், சிங்களம் ஆங்கிலம் ஆகிய மொழிகளைத்தமதாக்கிக் கொண்ட பேராசிரியர் ஆசிரியராக, இலங்கை நாடாளுமன்றத்தின் சமகால மொழிபெயர்ப்பாளராக கடமையாற்றியதுடன் பல்கலைக்கழகப் பேராசிரியராக வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களின் விருந்து நிலைப்பேராசிரியராக (சுவீடன் உப்சலா பல்கலைக்கழகம், சென்னைப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்ப் பல்கலைக்கழகம், மலேசியாப் பல்கலைக்கழகம்) பணியாற்றினார்.

அவரது ஆய்வின் ஆளுமை தமிழின் புதியபுலங்களின் ஆய்வுக்கு வழிகாட்டியதுடன் புதிய ஆய்வு முறைமைக்கும் தூண்டுகோலாயிற்று. சங்க இலக்கியம், பக்தி இலக்கியம் ,நவீனஇலக்கியம், இலக்கியமும் மானுடமும், தமிழ் இலக்கிய வரலாற்றைப் புதியமுறையில் அணுகுதல், இலக்கிய விமர்சனம், தமிழ்நாடகம் ,பண்டைத் தமிழரின் பண்பாடு அரசியல் வரலாறு, தொடர் பாடல், தமிழ்ச்சினிமா, தமிழ்க் கவிதையியல் இலக்கணமும் சமூக உறவுகளும், தமிழ்கற்பிக்கும் முறைகள் , சமூகவரலாறு, பண்பாடும் கருத்துநிலையும் என நீண்டு செல்லும்.

அவர் ஆங்கிலத்தில் தமிழ் சங்க இலக்கியம் தமிழ் இலக்கியம், பண்டைத் தமிழரின் அரசியல் வரலாறு, சினிமா, நாடகம் , இலங்கைத்தமிழரின் அரசியல் வரலாறு போன்றவை பற்றி எழுதிய கட்டுரைகள் ஐரோப்பிய அறிஞரிடையேயும் தமிழ்நாட்டறிஞரிடையேயும் மிகுந்த கணிப்பைப்பெற்றவை.

இலங்கைத்தமிழ்ப் பல்கலைக் கழகங்களிலும் பாடசாலைகளிலும் நாடகமும் அரங்கியலும் என்ற கற்கைநெறியும் அதற்கான துறைகளும் செயற்பாடுகளும்; இன்று மிகவும் வளர்ந்திருக்கின்றன. அந்த வளர்ச்சிக்காக வித்திட்ட பிதாமகர்களில் ஒருவர் பேராசிரியர் கா.சிவத்தம்பி

இளம் ஆய்வாளருக்கும் இலக்கியகாரருக்கும் ஊக்கமளித்தவர். இலங்கையிலும் தமிழ்நாட்டிலுமுள்ள பல்கலைக்கழகங்களில் முதுநிலை மற்றும் முனைவர்ப்பட்ட ஆராய்ச்சியாளருக்கு வழிகாட்டியிருக்கிறார். கவிதைநூல்கள், இலக்கிய நூல்கள் நாடகநூல்கள் அரசியல்நுர்ல்கள் எனப்பல்வேறு நூல்களுக்கும் உரிய முறையிலே முன்னுரைகளை வழங்கியிருக்கிறார். அவர் எழுதிய நாடக நூல்களுக்கான முன்னுரைகள் கவிதை நூல்களுக்கான முன்னுரைகள் தனியே தொகுக்கப்பட்டுள்ளன. அவை அவ்வவற்றின் வரலாற்றைச் சுட்டுபவை.

அவர் வெறுமனே ஒரு இலக்கிய வாதியாக இருக்கவில்லை. தான் வாழ்ந்த காலத்தில் தன் சமூகம் எதிர்கொண்ட பிரச்சினைக ளுக்குத் தானும் முகம் கொடுத்தார். பல்கலைக்கழகக் கல்விமான்களிற் பலரும் அரசியலைப் பேசுவதே பாவம் என்றிருந்த காலத்தில் சமூகத்தின் தேவையுணர்ந்து யாழ்ப்பாணத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் தலைவராக இருந்து அவர் மேற்கொண்ட பணிகள் அளப்பரி யவை. பீஷ்மர் என்ற பெயரில் அவர் எழுதிய அரசியற்கட்டுரைகள் இலங்கை அரசியலின் போக்குகளைத் தோலுரித்துக் காட்டி யவை.

தனது வாழ்நாளின் இறுதிக்காலத்திலும் நெற்றியிலே ஒருசிறு ஒளிபாய்ச்சும் கருவியைப்பூட்டியபடி தன்ஆய்வுகளை மேற்கொண்டவர். தன்னால் வாசிக்க, எழுத முடியாத தருணங்களில் வாசிப்பதற்கென உதவியாளர்களை வைத்து தன் ஆய்வுத் தேடலை தொடர்ந்து மேற் கொண்டவர். அந்த ஆய்வுத் தேடல் அவரது ஆன்மத்தேடலாக இருந்தது.

அதுவே அவரைப்பற்றி இன்றும் என்றும் நினைக்கவும் பேசவும் எழுதவும் வைப்பது என்று கூறலாம்.

## இந்திரா பினான்ஸ் நிறுவனம் செரண்டிப் பினான்ஸ் என பெயர் மாற்றம்

SERENDIB FINANCE

கொமர்ஷல் வங்கி இந்திரா பினான்ஸ் நிறுவனத்தைப் பொறுப்பேற்று ஒன்பது மாத காலத்தின் பின் தனக்கு முற்றிலும் சொந்தமான அந்த இணை நிறுவனத்தை வரையறுக்கப்பட்ட செரண்டிப் பினான்ஸ் எனப் பெயர் மாற்றம் செய்துள்ளதாக அறிவித்துள்ளது.

இந்த நிறுவனம் கொமர்ஷல் வங்கியால் 2014 செப்டம்பர் 1ல் பொறுப்பேற்கப்பட்டது. இந்த கம்பனி இனிமேல் புதிய பெயரால் அழைக்கப்படுவதோடு புதிய வர்த்தக முத்திரையின் கீழ் இனம் காணப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் வாகன லீசிங் சந்தை, வாடகைக் கொள்வனவு, ஈட்டுக் கடன், நுகர்வோர் நிதியியல் ஆகிய துறைகளில் தனது நிலையை தக்கவைத்துள்ள செரண்டிப் நிதி நிறுவனம் இலங்கையில் 11 கிளைகளைக் கொண்டுள்ளது. தற்போது நாட்டின் மிகப் பெரிய தனியார் வங்கியின் பூரண ஆதரவுடன் தனது நிலையை மேலும் தக்க வைக்கவும் விஸ்தரிக்கவும் நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக வங்கி அறிவித்துள்ளது.

இந்திரா பினான்ஸ் நிறுவனத்தைப் பொறுப்பேற்றமை மற்றும் அதனை புதிய பெயரில் மீள் அறிமுகம் செய்துள்ளமையானது அதன் குத்தகைச் செயற்பாடுகளை மேலும் விஸ்தரித்து புதிய வாடிக்கையாளர் பிரிவொன்றுக்குள் ஊடுறுவ வழிவகுக்கும் என்று வங்கி தெரிவித்துள்ளது. செரண்டிப் நிதி நிறுவனம் ஊடாக வாகனங்களைப் பெற்றுக்கொள்ளும் வாடிக்கையாளர்களுக்கு குறைந்த விலையிலான குத்தகைத் தெரிவுகள் இதன் மூலம் வழங்கப்படவுள்ளன என்று வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ஜெகன் துரைரட்ணம் கூறினார்.

கொமர்ஷல் வங்கி அதன் மூலோபாய விரிவாக்கத் திட்டத்தின் கீழ் குத்தகைப் பிரிவை அபிவிருத்திக்கு உரிய ஒரு பிரிவாக இனம் கண்டுள்ளது. இதுவரை தூண்டிவிடப்படாத சந்தைப் பிரிவு மற்றும் வர்த்தக வரிசையில் குத்தகை பிரிவு இனம் காணப்பட்டுள்ளது. இந்திரா பினான்ஸ் இதில் கொண்டிருந்த வளங்களில் இப்போது கவனம் செலுத்தப் படவுள்ளது என்று துரைரட்ணம் மேலும் கூறினார். எனவே இந்த நிறுவனம் பொறுப்பேற்கப்பட்டமையானது அதனோடு சம்பந்தப்பட்ட சகலருக்கும் மற்றும் வாடிக்கையாளர்களுக்கும் நன்மை அளிப்பதாகவே அமையும் என்றார்.

செரண்டிப் பினான்ஸ் என்ற புதிய பெயரானது அதன் தலைமை அலுவலகம் மற்றும் கிளை நிறுவனங்கள் எல்லாவற்றிலும் மீள் வர்த்தக முத்திரை, மீள் விளம்பர ஏற்பாடுகள் என எல்லா அம்சங்களிலும் மாற்றத்தைக் கொண்டிருக்கும்.

## வீதியோரங்களில் மரங்களை நடுவோம்

**யாழ்.** குடாநாட்டிலுள்ள வீதிகளை அகலப்படுத்தும் போது, தறித்து அகற்றப்பட்ட மரங்களுக்குப் பதிலாக மீள் மர நடுகை இடம் பெறாமை தொடர்பாக மக்கள் வருத்தம் தெரிவிப்பதை அறிய முடிகின்றது.

எமது முன்னோர்கள் வீதிகளில் பயணம் செய்கின்ற மக்கள் இளைப்பாறிச் செல்லும் பொருட்டு நிழல்தரக்கூடிய மரங்களை வீதியோரங்களில் நட்டு வைத்தனர். வெயில் காலங்களில் வீதிகளில் பயணம் செய்த மக்கள் நிழலுக்கு ஒதுங்குவதற்கும், இளைப்பாறிச் செல்வதற்கும் இந்த மரங்கள் பேருதவியாக இருந்தன. ஆனால் வீதி அகலிப்பு என்ற பெயரில் வீதியோரமாக நின்ற இந்த மரங்கள் தறிக்கப்பட்டுள்ளன. இதனால் வீதியோரங்களில் நிழலைக் காணவே முடியவில்லை. வீதிகளை அகலப்படுத்துவது காலத்தின் தேவை என்பதை எவருமே மறுக்க முடியாது. ஆனால் தறித்த மரங்களுக்குப் பதிலீடாக மரங்களை நடாமல்விட்டதுதான் மனதை உறுத்துகின்றது.

புலிகள் இங்கு நிலைகொண்டிருந்த காலப்பகுதியில், வீதியோரங்களில் பெருமளவு மரங்கள் நடப்பட்டுப் பராமரிக்கப்பட்டன. குறிப்பாக வல்லை வெளியை அண்டிய பிரதேசங்களிலும் ஏராளமான மரங்கள் நடப்பட்டன. ஆனால் இன்று இந்த மரங்களின் நிலையைப் பார்ப்பதற்குப் பரிதாபமாக உள்ளது. உயர் அழுத்த மின்கம்பங்கள் நடப்பட்டபோது பெருமளவு மரங்கள் அழிக்கப்பட்டன. தற்போது வீதி அகலிப்பின் போதும் மரங்கள் அழிக்கப்பட்டுவிட்டன. இதைவிட சவுக்கு மரங்கள் பல்வேறு தேவைகளைக் காரணம்கூறி அழிக்கப்பட்டுவிட்டன. வல்வையில் நிலை கொண்டிருக்கும் இராணுவத்தினரும் தமது தேவைகளுக்கென மரங்களை அழித்து வருவதைக் காண முடிகின்றது.


முன்பெல்லாம் மந்திகை ஆதார மருத்துவமனைக்கு மேற்குப் பக்கமாக உள்ள வீதியோரத்தில் மிகப் பெரிய ஆலமரங்கள் காணப்பட்டன. பஸ்சுக்குக் காத்திருக்கும் பயணிகள் இந்த மரங்களின் நிழலில் ஒதுங்கி நிற்பது வழமையாகும். ஆனால் இன்று அந்த இடம் பாலைவனம் போன்று காட்சியளிக்கின்றது. பயணிகள் வெயில் காலத்தில் மிகுந்த சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

எனவே எதிர்காலச் சந்ததியினரின் நன்மையைக் கருத்திற்கொண்டு இனியாவது வீதியோரங்களில் மரநடுகையை மேற்கொள்வதற்கு சமூக ஆர்வலர்கள் முன்வர வேண்டும்.

*சி.ராகவன் அச்சுவேலி*

## எமக்கும் நீதி வேண்டும்

வாசகர் திருமுகம்



**2006** ஆம் ஆண்டில் உயர் தரத்தில் தோற்றி பல்கலைக்கழக கல்விக்குத் தெரிவாகி பட்டம் பெற்ற நாம் குறித்த செயல் வலுத் திகதிக்குள் அதாவது 31.12.2012ற் குள் எமது பட்டப்படிப்பை முடிக்காமையால் பட்டதாரி பயிலுநர் ஆட்சேர்ப்பின் போது புறக்கணிக்கப்பட்டோம்.

மேலும் இரண்டாவது ஆட்சேர்ப்பு முனாயத்த நடவடிக்கைகளின்போதும் 30.03.2012 ஐ கோரியமையால் அதற்குள் உள் வாங்கப்படவில்லை. ஏனெனில் எமது செயல் வலுத்திகதி 05.04. 2012 ஆகும். உரிய உயர் அதி காரிகளை நோக்கிய எனது வினா என்னவென்றால், இலங்கைத்தீவின் எப்பாகத்தில் ஆவது 2006 ஆம் ஆண்டு உயர்தரம் தோற்றி பல்கலை அனுமதி பெற்று கற்றுப் பட்டம் பெற்ற ஏதேனும் ஒரு துறையினர் மேற்படி அரச சேவையில் உள்வாங்கப்படாதிருக் கின்றார்களா? என்பதாகும்.

வடமாகாண பல்கலைக் கழகமொன் றில் பயின்ற எம்மவர்களின் காலத்தைப் போரும் அதன் சார்பு புறக்காரணிகளும் வீணடித்தன. இன்று பட்டதாரிகளாகிய நாம் எடுபிடி வேலை பார்த்து வாழ்வை நகர்த்த வேண்டியுள்ளது. போர்க் கால அழிவுகளுக்கு நியாயம் செய்வோர்களே! எமது வீணான காலக்கழிவால் உண்டாகியிருக்கும் பிரச்சினைக்கும் நியாயம் செய்யுங்கள். எமக்கு வாழ்வு தாருங்கள். கடவுளின் பார்வையில் நீதி வான்கள் ஆகுங்கள்.

*மா.றகுணா*


## தரித்து நிற்கும் மினிபஸ்களும் தடுமாறும் மக்களும்

**பு**ன்னாலைக்கட்டுவன் வடக்குச் சந்தியில் தரித்து நிற்கும் தனியார் மினிபஸ்களால் மக்கள் பெரும் சிரமத்துக்குள்ளா கின்றனர். தனியார் சிற்றூர்திச் சங்கத்தினரின் நேர அட்டவணைக்கேற்ப சேவையில் ஈடுபடுவதற்காக, புன்னாலைக்கட்டுவன் வடக்குச் சந்தியின் அருகில் கிழக்குப் புறமாக மினிபஸ்கள் தரித்து நிற்பதற்கான இடம் உள்ளது. இதனைவிடுத்து, நிலாவரை வீதியிலிருந்து புன்னாலைக்கட்டுவன் வடக்குச் சந்தியை நோக்கி வருகின்ற வீதியில், பயணிப்பவரின் வலது பக்கமும் இடது பக்கமும் மினிபஸ்கள் நிறுத்தி வைக்கப்படுகின்றன.

பிரதான வீதியில் வருகின்ற வாகனங்களை மறைத்தபடி வீதியின் இருமருங்கும் மினிபஸ்கள் நிறுத்தி வைக்கப்படுவதால் மாணவர்கள், வயோதிபர்கள், பெண்கள், இளைஞர்கள் என்ற வேறுபாடின்றி வாகனங்களில் பயணிப்பவர்கள் அனைவரும் தடுமாற்றத்திற்குள்ளாகின்றனர். அதாவது யாழ்.பலாலி வீதியின் கிழக்குத் திசையாக வாகனங்கள் நிறுத்தப்படுவது குறித்து மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். இவ்வாறு வாகனங்கள் நிறுத்தப்படுவதால் விபத்துக்கள் ஏற்படக்கூடிய சூழ்நிலை காணப்படுவதாகப் பலரும் தெரிவிக்கின்றனர்.சம்பந்தப்பட்டவர்கள் இந்த விடயத்தைக் கவனத்தில் கொள்ள வேண்டுமென இந்தப் பகுதி மக்கள் தமது ஆதங்கத்தைத் தெரிவிக்கின்றனர்.

*திருமதி.ரேவதி புஸ்பநாதன்*

கேலிச் சித்திரம்




நன்றி: மவ்பிம

## சுட்டாவது பிடிக்கிறார்கள் எமக்கும் பொறுப்புள்ளது

போதைப்பொருள் பாவனைக்கு எதிரான கருத்துநிலை வலுப்பெற்றிருக்கும் நிலையில் கடந்த வாரம் இளவாலை ஊடாக நாட்டுக்குக் கடத்தப்பட்ட நிலையில் சுமார் 180 கிலோகிராம் கஞ்சா போதைப் பொருளுடன் இளவாலையில் 4 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர். இந்நிலையில் கஞ்சா வைத்திருந்தவர்களில் ஒருவரைப் பொலிஸார் சுட்டுப் பிடித்துள்ளனர். அவர்களில் தமிழ், முஸ்லிம் நபர்கள் இருக்கின்றனர். போதை தடுப்பு நடவடிக்கைக்கு இது ஏற்கக்கூடியதுதான்.

முன்னரே இது தொடர்கின்றபோதும்; அதனைத் தடுக்கத் தேவையான அனைத்து நடவடிக்கையையும் எடுக்குமாறு பொலிஸ் உயரதிகாரிகளுக்கு மேல்நீதிமன்று சில வாரங்களுக்கு முன்னர் உத்தரவிட்டிருக்கிறது.

ஆனால் அந்த உத்தரவின் பின்னர், முன்னரைவிட செயல்பாடுகள் அதிகரித்ததான நிலையைச் சற்று உணரமுடிகிறது எனினும் திருப்திப்படுமளவுக்கு இல்லை. வடக்கில் போதைக்கு எதிரான கருத்து தீவிரமடைந்துள்ளது. போதைக்கு எதிரான தினத்தையும் மாணவர்கள் சிறப்பாக முன்னெடுத்து போதைப் பொருள்களை விலக்குமாறும் அதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்தியிருந்தனர். மற்றும் பலரும் அதே கருத்தையே முன்னிலைப்படுத்தி வருகின்றனர். அதனால் அது பற்றிய கருத்து இங்கு தீவிரம் பெற்றுள்ளது.

அதனால்போலும் பொலிஸ் பிடியும் இறுக்கப்பட்டுள்ளது. ஆனால் என்னதான் இறுக்கினாலும் - கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளதனை அறிந்தாலும் - கொழும்பு நீதிமன்றங்களில் கடும் தண்டனை விதிக்கப்படுவதனை அறிந்திருந்தும் கஞ்சா கடத்தும் கூட்டம் இன்னும் பயப்பட்டதாகத் தெரியவில்லை. அதற்கு மேலாக அவர்கள் சிந்தித்துச் செயற்படுகின்றனர் என்பது தெரிகிறது. அதாவது பொலிஸாருடன் போட்டி போட்டுச் செயற்படுகிறார்கள்.

அவர்கள் பெரியதொரு வலையமைப்பைக் கொண்டுள்ளனர். மூவினத்தவரும் இதில் உள்ளனர். அந்;தக் குழுவில் அல்லது அந்தக் குழுவுடன் டீல் பேசி போதைப் பொருள் கடத்தலில் ஈடுபடுபவர்கள், அவற்றைப் பெற்று விநியோகிப்பவர்கள், விற்பனை செய்பவர்கள், உடமையில் வைத்திருப்பவர்கள் என அனைவரும் கைது செய்யப்பட்டு நீண்ட காலத்துக்கு சிறையில் போடப்படவேண்டியவர்கள். சட்டத்தில் அதற்கு இடமில்லாவிட்டாலும் மனிதாபிமான அடிப்படையில் - சமூக நோக்கிலாவது நீண்ட நாள்களுக்குத் தடுப்பில் போடப் பொலிஸாரும் நீதிமன்றமும் முற்பட வேண்டும்.

அவர்களைப் பிணையிலோ அல்லது வழக்காடி விடுதலை செய்யவோ சட்டத்திலிருந்து தப்பவோ அல்லது தண்டனைக் குறைப்பைச் செய்யவோதான் சில சட்டத்தரணிகள் இன்னும் நீதிவான் நீதிமன்றிலும் மேல்நீதிமன்றிலும்கூட வாதாடுகின்றனர்.

அண்மையில் கிலோக் கணக்கில் கஞ்சா விற்றவர் முன்னர் அதனை மறுத்திருந்தபோதும் பின்னர் குற்றத்தை ஏற்றுக் கொண்டார். அவர் ஐந்துக்கும் மேற்பட்ட பிள்ளைகளைக் கொண்ட குடும்பஸ்தர். தனது கடையில் வைத்து கஞ்சா விற்று வந்த நிலையில் ஒரு கட்டத்தில் பொலிஸாரிடம் மாட்டிக் கொண்டார். பணத்தைப் பெற்றுக் கொண்டு அவர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி, அவர் குடும்பஸ்தர், பெண் பிள்ளைகள் உள்ளனர். அவர்களுக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டும். எனிமேல் அவர் குற்றம் செய்யமாட்டார்... என்றெல்லாம் நீதிமன்றில் வாதாடி குறைந்த தண்டனைக்கு அடிகோலுகிறார்.

கஞ்சா போன்ற வழக்கில் பலர் கைது செய்யப்பட்டிருக் கின்றபோதும் அவர்களில் எவரையும் பிணையில் விடுவிக்கக்கூடாது என்பதில் உறுதியான நிலைப்பாடு தேவைப்படுகிறது.

ஏனெனில் அவர்களில் ஒருவரையோ அல்லது சிலரையோ மாத்திரம் பிணையில் விடுமாறுதான் சட்டத்தரணிகள் முதலில் நீதிமன்றுக்கு வருகிறார்கள். அவ்வாறு பிணையில் விட்டபின்னர் சில மாதங்களின் பின்னர் ஏனையவர்களையும் பிணையில் விடுமாறு கோருகிறார்கள். அது ஒரே சட்டத்தரணியாக அல்லது வேறு சட்டத்தரணியாகவும் இருக்கலாம். அதே வழக்கில் ஏனையவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் எனவே அவர்களையும் பிணையில் விடுமாறு அவர்கள் கோருவர். அந்த இடத்தில் ஒரு வழக்கில் ஒரு சிலரைப் பிணை விடவும் ஏனைய சிலருக்குப் பிணை அனுமதி மறுப்பதும் நீதிமன்றினால்கூட முடியாததாகிவிடவாய்ப்புள்ளது. அதுபற்றிக் கேட்க கேள்வியை ஏற்படுத்த வழி அமைப்பதாக இருக்கக் கூடாது. அதேபோலவே நீதிமன்றங்களில் நீதிபதிகள் இடமாற்றமும் வழமையானது. அவ்வாறான நிலை வரும்போதும் ஒரே வழக்கில் சிலருக்கு முன்னர் இருந்த நீதிபதி பிணை அனுமதி வழங்கிய நிலையில் நீதிபதி மாறிய பின்னர் அந்த வழக்கிலுள்ள ஏனையவர்களைப் பிணையில் விடுவிக்க.மறுக்க முடியாத நிலையையும் ஏற்புடுத்திவிட வாய்ப்புள்ளது. பெர்லிஸார் பல நாள் புலனாய்வு செய்து கஸ்டப்பட்டுப் பிடித்துக் கொண்டுவர நீதிமன்றங்கள் பிணையில் விடுவதனால் பொலிஸார் அக்கறையுடன் தொடர்ந்து அவர்களைக் கைது செய்வதனைவிடுத்துக் கடமைக்காக அதனைச் செய்ய முற்பட்டால் எல்லாம் நாசம்தான். காலம், நேரம், அதனைத் தீர்மானித்து விடுகிறது என்பதனை மறுக்க முடியாது.

என்னதான் இருந்தாலும் போதைப் பொருள் கடத்துபவர்கள் அந்த வேலையைத் தொடர்ந்து கொண்டுதானிருக்கிறார்கள். கைது செய்யப்பட்டால் ஆள்கள் மாறி போதைப் பொருள் கடத்தல் தொடருகிறது. அவர்கள் பொலிஸாருக்கு சவால் விடுத்துச் செயற்படுகின்றனர். அவர்களைப் பொலிஸார் துப்பாக்கியால் சுட்டேனும் பிடிக்க முற்படுகிறார்கள். அவ்வாறான சமூக விரோதிகளை நாம் காட்டிக் கொடுக்கத் தயங்கக்கூடாது. பொலிஸாருக்கு பொதுமக்களினதும் நீதிமன்றங்களினதும் சட்டத்துறையினரதும் ஆதரவு தேவைப்படுவதனை மறுக்கமுடியவில்லை.!

பத்தி எழுத்து

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# நிலைமையை ஜனாதிபதி தெளிவுபடுத்த வேண்டும்

வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிய கதையாக நாட்டின் அரசியல் நாடகம் நிமிஷத்துக்கு நிமிஷம் மாறிக் கொண்டிருக்கிறது.

அரசியல் துறையில் ஊறிப்போனவர்களுக்கு இது ஒன்றும் பெரிதாக தாக்கத்தை ஏற்படுத்தமாட்டாது. ஆனால் அவ்வப்போது ஏற்படும் அரசியல் மாற்றங்களால் பொதுமக்கள் திக்கு முக்காடிப் போகிறார்கள். செய்வதறியாது திகைத்து நிற்கிறார்கள்.

கடந்த ஜனவரியில் 62 லட்சம் மக்கள் வாக்களித்து மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதி ஆசனத்தில் அமர்த்தினார்கள். அதுவரை ஆட்சியிலிருந்த ராஜபக்ஷ கூட்டத்தினரைத் தோற்கடித்து வீட்டுக்கு அனுப்பியிருந்தார்கள்.

இவ்வாறு வெற்றியைத் தேடிக் கொள்வதற்கு மக்களுக்கு அவர் அளித்த வாக்குறுதிகள் எல்லாம் என்னவாயிற்று? அவரை நம்பிய மக்களுக்கெல் லாம் வெறும் கானல் நீர் தானா மிச்சம் என்ற கேள்வி இப்போது எழுந்துள்ளது.

இதற்குக் காரணம், யாரைத் தோற்கடித்து நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்த வேண்டும் என மைத்திரிபால சிறிசேன கொக்கரித்தாரோ அவரையே தமது கட்சியின் சார்பில் ஒரு வேட்பா ளராக பொதுத்தேர்தலில் போட்டியிட வேட்பு மனு வழங்க அவர் சம்மதித்திருப்பதாக வந்துள்ள செய்தியாகும்.

ஆனால் இந்த அறிவித்தலை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் சுசில் பிரேம ஜயந்த அறிவித்துள்ளார். அதனைச் சரியான தகவல் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் செயலாளர் அநுர பிரியதர்சன யாப்பாவும் ஆமோதித்திருக்கிறார். ஆனால் மைத்திரிபால சிறிசேனவை வெற்றி பெறச் செய்வதற்கு கடுமையாக முன்னின்று உழைத்தவரான சமூகநீதிக்கான இயக்கத்தின் ஏற்பாட்டாளர் வண.மாதுளுவாவே சோபித தேரர் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில், ஐக்கிய சுதந்திர முன்னணி பட்டியலில் ராஜபக்ஷவுக்கு இடமளிப்பதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டது தொடர்பில் தமக்கு ஒன்றும் தெரியாது என்று ஜனாதிபதி கூறியதாகவும் -- அவ்வாறாயின் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தி அறிக்கை வெளியிடுமாறு தாம் கேட்டுக்கொண்டதாகவும் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் இவ்வாறான ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டிருப்பது குறித்து சிறிசேனவை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும்படி களம் இறக்கியவரான முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்க தமக்கும் அறிவிக்கப்படவில்லையென்று தெரிவித்திருக்கிறார்.

அதேவேளை நேற்றுமுன்தினம் மாத்தறையில் அதிவேக பாதையொன்றை திறந்து வைத்துப் பேசிய மைத்திரிபால சிறிசேன ஜனவரி 8 ஆம் திகதி மக்களின் பொதுவேட்பாளராகப் போட்டியிட்ட தமக்கு மக்கள் ஈட்டிதந்த வெற்றியைத் தொடர்ந்து முன்னெடுப்பார் என்றும் தம்மால் நிலைநாட்டப்பட்ட மாற்றங்களை தொடர்ந்து முன்நகர்த்துவார் என்றும் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவர் என்ற முறையில் தாம் எடுக்கும் முடிவுகளும் தீர்வுகளும் ஜனவரி 8 ஆம் திகதி ஏற்பட்ட மாற்றங்களை பாது காக்கும் வகையிலேயே அமையும் என்றும் குறிப் பிட்டுள்ளார்.

மக்கள் அன்றைய தினம் தம் மீது வைத்த நம்பிக்கைக்கு துரோகம் இழைக்கப் போவதில்லையென்றும் ஜனாதிபதி அந்த நிகழ்வில் உறுதியளித்தார் என்று செய்திகள் கூறுகின்றன. குறித்த நிகழ்வில் நெடுஞ்சாலைகள் மற்றும் முதலீட்டுத்துறை அமைச்சர் கபீர் ஹாஷீம், வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர, நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க முதலியவர்களும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு வெளியாகியுள்ள விடயங்களையெல்லாம் ஒன்றுசேர்த்துப் பார்க்கும்போது சுதந்திர மக்கள் முன்னணியின் சார்பில் ராஜபக்ஷவுக்கு சந்தர்ப்பம் வழங்குவதாக அறிவிக்கப்பட்டிருப்பதில் ஏதோ மர்மம் இருப்பது போல் தெரிகின்றது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவரான மைத்திரிபால சிறிசேனவின் சம்மதம் பெறாமலே முன்னணியின் செயலாளர் என்ற முறையில் சுசில் பிரேமஜயந்த முன்னணியின் பொதுச் செயலாளர் என்ற முறையில் இந்த அறிவித்தலை விடுத்து சிறிசேனவை சங்கடத்துக்குள் சிக்கவைத்திடுக்கக் கூடுமோ என்று எவரும் சந்தேகம் கொள்ளக் கூடியதாகவும் உள்ளது.

எதற்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன [illegible] லைப்பாட்டை விளக்கி வண. சோபித தேரர் [illegible] ப்பதுபோல் அறிக்கையொன்றை விரைவாக வெளி[illegible] டுவ [illegible] சியம். அதன்மூலமே ராஜபக்ஷ ஐக்கிய மக் [illegible] ந்திர முன்னணி மூலம் தேர்தலில் இ [illegible] வரா? இல்லையா? என்பதில் [illegible] தேகம் தெளிவாகும்.

# தமிழர்களால் மறக்க முடியாத மூதூர் தங்கத்துரை



நேற்றைய தினம் அன்னாரது 18 ஆவது நினைவு தினம்.

■ மு.ஈழத்தமிழ்மணி

தமிழ் சமூகத்தின் அரசியல் வரலாற்றிலே தான் சார்ந்த சமூகத்துக்காக, அபிவிருத்திக்காக முதன்மையாக உழைத்த அரசியல்வாதிகளில் போற்றப்பட வேண்டிய மகாபுருஷர் அருணாசலம் தங்கத்துரை. இவர் திருகோணமலை மாவட்டத் தில் உள்ள மூதூர் தொகுதியில் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டு ஏழாண்டுகள் வரை பதவி வகித்திருந்தார். தமிழரசுக் கட்சிக் காகவும், திருகோணமலை மாவட்ட மக்களுக்காகவும் இணைந்து உழைத்த காலஞ்சென்றவரான அ.தங்கத்துரை அகால மரணமடைந்து 18ஆண்டுகளாகி விட்டன.

மூதூர் பிரதேசத்தில் உள்ள கிளிவெட்டி என்ற விவசாயக் கிராமத்தில் பிறந்த தங்கத்துரை தனது ஆரம்பக்கல்வியை கிளிவெட்டியிலுள்ள அ.த.க.பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியை மட்டக்களப்பு வந்தாறு மூலை மத்திய மகா வித்தியாலயத்திலும், உயர்தரக் கல்வியை யாழ்ப்பாணம் ஸ்ரான்லிக் கல்லூரியிலும் கற்ற பின்னர், கொழும்பு சட்டக் கல்லூரியில் சட்டக்கல்வியைக் கற்று சட்டத்தரணியானார்.

தங்கத்துரையின் அரசியல் பயணம் தமிழரசுக்கட்சியிலிருந்து ஆரம்பமாகியது. தந்தை செல்வநாயகம் அளவற்ற மதிப்பும் மரியாதையும் தங்கத்துரை மீது வைத்திருந்தார். அதேபோல் தங்கத்துரையும் தந்தை செல்வா மீது பெரு மதிப்பையும், பெரும் அன்பையும் வைத்திருந்தது மட்டுமல்லாமல் தமிழரசுக்கட்சி மேற்கொண்ட அஹிம்சை போராட்டங்களிலும் தீவிரமாகப் பங்குபற்றியிருந்தார். மொழியுணர்வும், விடுதலையுணர்வும் அவரது உயிரோடு இரண்டறக் கலந்ததாகவே இருந்தன.

1970ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் நடைபெற்றபோது தங்கத்துரை மூதூர் தொகுதியில் தமிழரசுக் கட்சி சார்பில் வேட்பாளராக நிறுத்தப்பட்டிருந்தார். இரட்டை அங்கத்தவரைத் தெரிவு செய்யும் தொகுதியான மூதூர் தொகுதியில் இரண்டாவது நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். 1977ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் இரட்டை அங்கத்தவர் கொண்ட மூதூர் தொகுதி பிரிக்கப்பட்டு சிங்கள மக்களுக்கான தொகுதி உருவாக்கப் பட்டது. மூதூர்த்தொகுதி முஸ்லிம் மக்களால் முஸ்லிம் பிரதிநிதியைத் தெரிவு செய்யப்படுகின்ற தொகுதியாக மட்டுமே உருவாக்கப்பட்டது. தமிழ்ப் பிரதிநிதித்துவம் இழக்கப்பட்ட நிலையில் தங்கத்துரைக்கும் சந்தர்ப்பமில்லாமல் போய்விட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணி உருவாக்கப்பட்டு தமிழ்ப் பிரதேசங்களில் தமிழர் விடுதலைக் கூட்டணியால் நடத்தப்பட்ட அஹிம்சைப் போராட்டங்களில் அயராது பாடுபட்டார். கிளிவெட்டிப் பிரதேசத்தில் சிங்களக் குடியேற்றங்களை மிக முனைப்போடு செயற்படுத்துவதற்கு அப்போதைய அரசானது தீவிரத்திட்டங்களை வகுத்தது. விவசாயக் கிராமமான கிளிவெட்டிப் பிரதேசத்தை முழுஅளவில் சிங்களக் கிராமமாக மாற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இதனைத் தடுத்து நிறுத்தும் முயற்சியில் தங்கத்துரை ஈடுபட்டிருந்தார்.

மூதூர் தொகுதியில் சிங்களக் குடியேற்றத்தை ஏற்படுத்தும் முயற்சியில் அரசு தோல்வி கண்டது. மூதூர் தொகுதியைப் பாதுகாப்பதற்கு தங்கத்துரை எடுத்த நடவடிக்கைகள் அரசுக்கு பிடிக்காத நிலையில் அரசினால் கைது செய்யப்பட்டுஎட்டுமாதங்கள்வரையில்சிறையில் தடுத்து வைக்கப்பட் டிருந்தார். ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட மாவட்ட சபைத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி போட்டியிட்டது. 1981ஆம் ஆண்டு ஜூன் மாதம் நடைபெற்ற மாவட்ட சபைத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிட்ட தங்கத்துரை தமிழ், சிங்கள மக்களின் ஆதரவோடு அமோக ஆதரவைப் பெற்று திருகோணமலை மாவட்ட சபையின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். 1983ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட அரசியல் சூழ்நிலை காரணமாக தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமை எடுத்த தீர்மானத்துக்கு அமைவாக தங்கத்துரை தமது மாவட்டசபைத் தலைவர் பதவியை இராஜினாமா செய்தார். திருகோணமலை மண்ணை ஆழமாக நேசித்திருந்த தங்கத்துரைக்கு 24 ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் தேர்தலில் போட்டியிடும் சந்தர்ப்பம் தேடி வந்தது.

1994 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி கிழக்கு மாகாணத்தில் போட்டியிட்டது. இரா.சம்பந்தனும், தங்கத்துரையும் தமிழர் விடுதலைக்கூட்டணியில் போட்டியிட்டிருந்தாலும் தமிழ் மக்கள் தங்கத்துரையை ஆகக் கூடிய விருப்பு வாக்குகளினால் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்தனர். தமது பதவிக்காலத்தின்போது தமது சேவைகளை திறம்பட செய்யவேண்டும் என்பதில் அக்கறை கொண்டிருந்தார்.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளின் கல்வி வளர்ச்சியில் ஈடுபாடு கொண்டிருந்த தங்கத்துரை பௌதிக வளங்களைப் பெற்றுக் கொடுத்தார். அது மட்டுமன்றி தமிழினத்தின் மீட்சிக்கு கல்வியே மிக முக்கியம் என நம்பிய நிலையில் அதற்கான திட்டங்களை வகுத்து பாடசாலைகளின் கல்வியுயர்ச்சிக்கு தன்னால் முடிந்தளவு பங்களிப்பை வழங்கியிருந்தார். சுகாதாரத் துறையின் வளர்ச்சிக்கும் அதனை மேம்படுத்தவும் பல கிராமங்களில் கிராமிய வைத்தியசாலைகளை அமைத்தார்.

தூர நோக்கு சிந்தனை கொண்டிருந்த சிந்தனையாளரான தங்கத்து[illegible] தமது தரிசனப் பார்வையில் சிங்களக் குடியேற்றங்களையும் தடுத்து நிறுத்திய பெருமை அவருக்குண்டு. முதலாவதாக சிங்களக் குடியேற்றம் தமிழ்ப்பகுதிகளில் இடம்பெறால் தடுக்கும் முயற்சியில் தீவிர மாக இறங்கியது மட்டுமன்றி, தமிழ் மண்ணைக் காப்பதில் தனது கண்களில் ஒரு கண்ணாகப் பார்த்தவர். சிங்கள மக்களைக் குடியேற்ற விடாமல் தங்கபுரம், குமார புரம் பகுதிகளில் தமிழ் குடியேற்றங்களை நிறுவி அலி ஒலுவ வரை தடுத்து நிறுத்தினார்.

தமிழ் மண்ணின் வீரம் தங்கத்துரையுடனான குருதியில் இரண்டறக் கலந் திருந்தது. கிளிவெட்டியில் நீண்டகாலமாக அமைந்திருந்த அரசமரம் சிங்களக் குடியேற்றத்துக்கு வாய்ப்பாக மாறிய வே[illegible] யில் துணிந்து அதனை வேரடி மண்ணோடு அழித்த சரித்திரம் தமிழ் மக்களால் என்றுமே மறக்க முடியாத ஒன்றாகும். இன்றும் கிளிவெட்டித் தமிழ் மண் உணர்வோடு இன்றும் தலை நிமிர்ந்து மிளிர்வதற்கு மூல கார ணம் தங்கத்துரையையே சாரும்.

1996ஆம் ஆண்டு பெப்ரவரி 10ஆம் திகதி மூதூர் கிளிவெட்டியில் இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தின்போது சில படையினர் கொல்லப்பட்டதைஅடுத்து பாட சாலை மாணவி உட்படப்பலரை அந்தப் பகுதியிலுள்ள பாற் பண்ணை அறைக் குள் சிறைப் படுத்தி படையினர் சுட்டுப் படுகொலை செய்த சம்ப வத்தை உலகுக்குக் கொண்டு வந்த தங்கத்துரை படுகொலைக்குள்ளாகியவர்களின் குடும்பங்களுக்கு நீதி கேட்டும் போராடியிருந்தார்.

இப்படிப்பட்ட இன உணர்வு கொண்ட தலைவர் தங்கதுரை தமிழத் தேசியப் போராட்ட வரலாற்றில் மிகத் துயரமான படுகொலைக்கு ஆளாக வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகினார். 1997 ஜூலை 5ஆம் திகதி திருகோண மலை சிறிசண்முகா இந்துக் கல்லூரியில் இடம் பெற்றபுதியகட்டடத்திறப்புவிழாவைத் தொடர்ந்து கொடூரமான நிலையில் துப்பாக்கிப் பிரயோகத்தில் சாவடைந்தார். அவரது மரணம் திருகோணமலை மண்ணுக்கும், மக்களுக்கும் இன்றும் பேரிழப்பாகவேயுள்ளது.

இன்றும் கிளிவெட்டி வாழ் மக்கள் மட்டுமன்றி மூதூர் தொகுதி மக்களும் தங்கதுரை செய்த சேவைகளை நன்றியுடன் நினைவு கூருகின்றனர். தங்கத்துரை மரணமடைந்து 18 ஆண்டுகள் கடந்தாலும் அவரது சேவைகளை மக்கள் நினைவு கூர்ந்து கொண்டேயிருக்கின்றனர்.



# போர் வடுக்கள் தமிழர்களுக்கு நிரந்தரமாகி விடுமா?

■சேரலாதன்

இலங்கையின் இறுதிப்போர் ஓய்வடைந்து சுமார் ஆறு ஆண்டுகள் கடந்து விட்டன. ஆனால் போரின் வடுக்களைத் தமிழர்கள் இன்னமும் தாங்கி நிற்கின்றனர். இவற்றைப் போக்குவதற்கு எந்த ஆட்சியாளரும் முன்வருவதாகத் தெரியவில்லை.

இறுதிப்போரை நடத்திய மஹிந்த ராஜபக்ஷவும் அவருடன் இணைந்து பணியாற்றியவர்களும் போர்க்குற்றங்களைச் சுமந்தவாறு சுதந்திரமாக நடமாடித் திரிகின்றனர். இவர்களைப் போர்க்குற்ற விசாரணைகளிலிருந்து காப்பாற்றப்போவதாக கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போதே மைத்திரிபால சிறிசேன அறிவித்திருந்த நிலையில், தற்போது ஐக்கிய தேசியக் கட்சியும் அதனையே கூறி வருகின்றது.

பெரும்பான்மையின அரசியல்வாதிகள் அரசியல் ரீதியாகத் தமக்குள் முட்டிமோதிக் கொண்டாலும், இனரீதியான பிணைப்பைக் கொண்டிருக்கின்றனர் என்பதையே இது எடுத்துக்காட்டுகின்றது. அதிலும் பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்கள் என்பதால் ஒருவித அலட்சியப்போக்கும் அவர்களிடம் காணப்படுகின்றது.

சர்வதேச போர்க்குற்ற விசாரணைகள் இடம்பெறுவதை விரும்பாத இலங்கையின் ஆட்சியாளர்கள் தாம் உள்ளகப்பொறி ஒன்றின் மூலம் விசாரணைகளை நடத்துவதாகக் கூறிவருகின்றனர். ஆனால் இதைத் தமிழர் தரப்பினர் ஏற்றுக்கொள்ளவில்லை. தமிழர்கள் பாதிக்கப்படும் போதெல்லாம் விசாரணைக் குழுக்களை அமைப்பது இலங்கை அரசின் வழக்கமான நட வடிக்கைகளாகக் காணப்படுகின்றன. ஆனால் இந்த விசாரணைக் குழுக்களால் தமிழர்கள் பயனடைந்ததாகச் சரித்திரமே கிடையாது.

இந்த நிலையில்தான் மிருசுவில் படுகொலைகளுடன் தொடர்புடைய இராணுவ இளநிலை அதிகாரியொருவருக்கு சாவுத் தண்டனை விதிக்கப்பட்ட செய்தி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. 2000ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 19ஆம் திகதி மிருசுவிலில் இடம்பெற்ற சம்பவத்தில் எட்டுப்பேர் படையினரால் படுகொலை செய்யப்பட்டனர். இந்த எட்டுப்பேரும் தமது வீடுகளைப் பார்வையிடச் சென்றபோதே படையினரால் கோரமாகப் படுகொலை செய்யப்பட்டனர். இந்தப் படுகொலையில் ஐந்து இராணுவ வீரர்கள் தொடர்புபட்டிருந்ததாகக் கூறப்பட்ட போதிலும், ஒரேயொரு இராணுவ இளநிலை அதிகாரிக்கே உச்ச நீதிமன்றத்தினால் சாவுத் தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசு இந்தத் தீர்ப்பைச் சுட்டிக்காட்டி போர்க்குற்ற விசாரணைகளைத் தம்மால் திறமையாக முன்னெடுக்க முடியுமெனக் கூறலாம். ஆனால் இந்தத் தீர்ப்பை முழுமையாக ஆராய்ந்து பார்ப்பவர்கள் பூரணமாகத் திருப்தியடைந்து விட முடியாது. ஏனென்றால் இறந்த அந்த எட்டுப்பேரும் கழுத்தில் கூரிய கத்தியால் வெட்டப்பட்டதன் காரணமாகவே சாவைத் தழுவியதாக உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இதைத் தண்டனை வழங்கப்பட்ட ஒருவர் மட்டுமே செய்திருக்க முடியாது. பலர் ஒன்று சேர்ந்தே இதைச் செய்திருக்க வேண்டும். ஆனால் ஒருவருக்கு மட்டுமே தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இறுதிப்போரின் போது நிகழ்ந்த குற்றச் செயல்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இலங்கை அரசு விசாரணைகளை மேற்கொள்ளுமாயின் அது எந்த இலட்சணத்தில் அமைந்திருக்குமென்பதை இப்போதே அறுதியிட்டுக் கூற முடியும்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் இராணுவத் தளபதியாக அப்போது பதவி வகித்த சரத் பொன்சேகா உள்ளிட்டவர்களும், படையினரும் போர்க்குற்றங்களில் தொடர்பு பட்டவர்களெனக் குற்றம் சாட்டப்பட வேண்டியவர்கள். ஆனால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, போர்க்குற்ற விசாரணைகளுக்கு ஒருபோதுமே தமது ஆதரவை வெளிப்படுத்தவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியும் இதே நிலைப்பாட்டில் இருப்பதால் விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கப்படுமா என்ற சந்தேகமும் எழுகின்றது.

மேலும் ஐ.நா.மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானமும், எந்தவிதமான தீர்வையும் எட்டாது இழுபறியான நிலையில் காணப்படுகின்றது. மைத்திரி அரசு கூட, இந்த விடயத்தில் மஹிந்த அரசின் கொள்கைகளையே பின்பற்றுவதை அவதானிக்க முடிகின்றது. மஹிந்த மற்றும் அவர்களது சகாக்கள் மீதான ஊழல், மோசடிக் குற்றச்சாட்டுக்களுக்கு எதிராகக் காத்திரமான நடவடிக்கைகளை எடுக்க முடியாமல் திணறும் இலங்கை அரசு, போர்க்குற்ற விசாரணைகளை முன்னெடுப்பதற்கான தகுதியைக் கொண்டிருக்கின்றதா? என்ற கேள்வியும் இங்கு எழுகின்றது

எனவேதான் போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்களின் வேதனைகளும் வடுக்களும் நிரந்தரமாகவே இருந்து விடப்போகின்றன. அவற்றுக்கான தீர்வு எங்கோ வெகு தொலைவில் கூடக் காணப்படவில்லை.

ஆட்சியாளர்கள் மனம் மாறினாலும், அரசியல்வாதிகள் விதைத்த இனவாதத் தீ தொடர்ந்து எரிந்து கொண்டே இருப்பதால் அவர்களால் எதுவுமே செய்துவிடமுடியாது. இலங்கையில் வாழுகின்ற சிறுபான்மை இனங்களை இனிமேல் அவர்களைப் படைத்த ஆண்டவனாலும் காப்பாற்றவே முடியாது.

> “ஐ.நா.மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானமும், எந்தவிதமான தீர்வையும் எட்டாது இழுபறியான நிலையில் காணப்படு கின்றது. மைத்திரி அரசு கூட, இந்த விடயத்தில் மஹிந்த அரசின் கொள்கைகளையே பின்பற்றுவதை அவதானிக்க முடிகின்றது.”



# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 3 | 8 | 4 | 5 | |
| | | | | | | | 7 | |
| | | 3 | | | | | 1 | 2 |
| | | | | | | | 6 | 5 |
| | | | 9 | 7 | | | | |
| | | | 6 | | 1 | 2 | | |
| | | | 1 | 5 | | 8 | | |
| 7 | 4 | | 3 | | | | | |
| | 9 | 8 | | | | | | |

**நேற்றைய சுடோக்கின் விடை**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 9 | 6 | 4 | 5 | 1 | 3 | 7 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 2 | 7 | 8 | 9 | 1 |
| 1 | 7 | 2 | 9 | 8 | 3 | 5 | 4 | 6 |
| 9 | 6 | 8 | 2 | 7 | 4 | 1 | 3 | 5 |
| 2 | 3 | 1 | 5 | 6 | 9 | 4 | 8 | 7 |
| 4 | 5 | 7 | 3 | 1 | 8 | 2 | 6 | 9 |
| 7 | 8 | 9 | 1 | 4 | 5 | 6 | 2 | 3 |
| 5 | 2 | 4 | 7 | 3 | 6 | 9 | 1 | 8 |
| 6 | 1 | 3 | 8 | 9 | 2 | 7 | 5 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரை களையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களை யும் கொண்டிருக் கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங் கள், பகுதிகள், உப சதுரங் கள் என்றும் அழைக்கிறார் கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண் டும் மீண்டும்) வராது நிரப் பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங் கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற் கனவே நிரப்பப் பட்டி ருக்கும். தர்க்கரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டி யதே வேலை. சுடோக்கு என் பது ஜப் பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகர மாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## ஆன்மிக வாழ்க்கை

அச்சமே சாவு அச்சத்துக்கு அப்பால் நீ போக வேண்டும்.
நீ தூய்மை உள்ளாவனாக இருந்தால் வலிமை உள்ள வனாக இருந்தால், நீ ஒருவனே உலகிலுள்ள அத்தனை பேருக்கும் சமமானவனாவாய்.
பாமரனைப் பண்புள்ளவனாகவும், பண்புள்ளவனைத் தெய்வமாகவும் உயர்த்தும் கருத்தே மதம்.
சுயநலம், சுயநலமின்மை என்பவற்றைத் தவிர கடவுளுக் கும் சாத்தானுக்கும் எந்தவித வேறுபாடும் இல்லை.
உற்சாகத்துடன் இருக்கத் தொடங்குவதுதான் நீ ஆன்மிக வாழ்க்கை வாழ ஆரம்பிப்பதற்கான முதல் அறிகுறி.
தூய்மை, பொறுமை, விடாமுயற்சி ஆகிய மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாதவையாகும். இவை அனைத் துக்கும் மேலாக, அன்பு வேண்டும்.

# சித்த மருத்துவ குறிப்புகள்

**தலைவலி குணமாக:**
விரலி மஞ்சளை விளக்கெண்ணையில் முக்கி விளக்கில் காட்டி சுட்டு அதன் புகையை மூக்கின் வழியாக உறிஞ்சி தலைவலி, நெஞ்சுவலி முதலியன அகலும்.

**இருமல் குணமாக:**
அரச மரப்பட்டையைக் காயவைத்து வறுத்து தூளாக்கி ஒரு ரம்ளர் நீரில் ஒரு கரண்டி போட்டு கொதித்ததும் வடிகட்டி சர்க்கரை பால் சேர்த்து குடிக்க இருமல் குணமாகும்.

**தடிமன் நீங்க:**
தடிமன் காய்ச்சல், தலை வலிக்கு பனங்கிழங்கை அவித் துக் காயவைத்து இடித்து பொடி யாக்கி பனங்கட்டி சேர்த்து சாப்பிட்டால் குண மாகும்.

**வறட்டு இருமல் குணமாக:**
கருவேலமரக் கொழுந்தை கசக்கிச் சாறு எடுத்து வெந் நீரில் கலந்து சாப்பிட வறட்டு இருமல் குறையும். வெள்ளை முதலான நோய்கள் குண மாகும்.

**ஆஸ்துமா, மூச்சுத்திணறல் குணமாக:**
முசுமுசுக்கை இலையை அரைத்து வெங்காயத்துடன் நெய் விட்டு வதக்கி பகல் உணவில் சேர்த்துச் சாப்பிட ஆஸ்துமா, மூச்சுதிணறல் குணமாகும்.

**சளிகட்டு நீங்க:**
தூதுவளை, ஆடாதோடை, கர்ப்பூரவள்ளி இலை கண்டங் கத்திரி இலை, சுக்கு, மிளகு, திப்பிலி ஆகியவை சேர்த்து காய்ச்சிக் குடிக்க சளிகட்டு நீங்கும்.

**பிரயாணத்தின் போது வாந்தி நிறுத்த:**
தினசரி ஒரு நெல்லிக்காயை தொடர்ந்து 41 நாள்கள் சாப்பிட வாந்தி வராது.

**தலைவலி, மூக்கடைப்பு நீங்க:**
நெல்லிக்காயில் கொட்டையை நீக்கிச் சாறு எடுத்து அதில் சிறிதளவு உப்புச் சேர்த்து 3 நாள் வெயிலில் காயவைத்து பின்னர் தேங்காய் எண்ணெயை கொதிக்க வைத்து, அதில் நெல்லி சாற்றைக் கலந்து கொண்டு மூக்கில் நுகர தலைவலி போகும்.

**சளித் தொல்லை நீங்க:**
ஒரு கரண்டியில் நெருப்புத் துண்டுகளை எடுத்து அதன் மீது சிறிது சாம்பிராணி, மஞ்சள் தூள் ஆகியவைகளை போட்டுப் புகை வரவழைத்து, அந்தப்புகையை மூக்கினால் உள்ளிழுத்தால் சளித் தொல்லை நீங்கும்.

**காசநோய் குணமாக:**
செம்பருத்திப் பூவை எடுத்துச் சுத்தம் செய்து, அதை நன்றாக அரைத்து உருண்டையாக எடுத்து காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டு வந்தால் பூரணகுணம் கிடைக்கும்.

# கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 800 | 600 | 600 | 650 |
| நண்டு | 200 | 400 | 400 | 300 | 300 | 400 |
| கணவாய் | 500 | 600 | 600 | 500 | – | – |
| பாரை | 550 | 500 | – | 450 | 600 | 360 |
| சுறா | 600 | 500 | – | 600 | 600 | – |
| சீலா | 200 | 400 | 500 | 300 | 400 | 300 |
| விளை | 600 | 400 | 400 | 400 | 400 | 320 |
| சூரல் | 250 | 400 | 400 | 300 | 300 | – |
| கும்பிளா | 350 | 400 | 400 | 400 | 400 | – |
| கிழாக்கன் | 600 | 800 | 400 | 450 | 400 | – |
| ஓரா | 300 | 400 | 300 | 350 | 400 | 300 |
| திரளி | 200 | 250 | 200 | 200 | 100 | 250 |
| நகரை | 200 | 350 | 200 | 300 | 200 | 300 |
| சூடை | 100 | 200 | 100 | 100 | 200 | 70 |
| ஒட்டி | 200 | 300 | – | 300 | 300 | – |
| திருக்கை | 150 | 350 | 100 | 200 | 300 | 120 |
| பாலை | 300 | 300 | 300 | 300 | 300 | – |
| வாளை | 100 | 200 | – | 200 | 200 | – |
| நொய் | 100 | 200 | 100 | 100 | 100 | – |
| மதனம் | 150 | 300 | 200 | 200 | 200 | 200 |


# நாளை

**ஆனி-22**
**செவ்வாய்க்கிழமை**
**07.07.2015**
**திதி: ஷஷ்டி**
**மு.இ. 08.38 வரை**
**நட்சத்திரம்: பூரட்டாதி**
**மு.இ.09.21 வரை**
**சுபநேரம்:**
10.28-11.58 வரை
**இராகுகாலம்:**
02.58-04.28 வரை

# மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 70 | – | 90 | 40 | 60–80 | 80 | 80 | 40 |
| கத்தரி | 40 | 50 | 50 | 30 | 30–40 | 20 | 80 | 10–15 |
| கரட் | 120 | 130 | 160–220 | 120 | 200–250 | 160 | 220 | 240 |
| மரவள்ளி | 50 | 60 | 50 | 40 | 50–60 | 60 | 80 | 45–50 |
| பயிற்றை | 100 | 60 | 140 | 80 | 100–110 | 60 | 140 | 90–100 |
| பாகல் | 140 | 150 | 130 | 180 | 160–180 | 200 | 150 | 130–140 |
| கருணைக்கிழங்கு | 100 | 80 | 90 | – | 100 | – | 120 | 65 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | – | 80 | 100–120 | 100 | 100 | 90–100 |
| சி.வெங்காயம் | 120 | 100–150 | 120 –160 | 160 | 100–140 | 160 | 200 | 110– 140 |
| பூசணி | 30 | 30 | 40 | 20 | 20–30 | 20 | 60 | 15 |
| தக்காளி | 100 | 100 | 80 | 80 | 80–100 | 100 | 70 | 50 |
| வாழைக்காய் | 50 | 50 | 40 | 50 | 60–80 | 40 | 70 | 25–30 |
| கீரை | 20 | 20 | 30 | 05–07 | 15–20 | 10 | 30–35 | 15–20 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 20 | 30 | 20 | 20 | 10–15 | 10 |
| பச்சை மிளகாய் | 300 | 300 | 160 | 300 | 280 | 400 | 190–220 | 350 |
| புடோல் | 60 | 60 | 60 | 80 | 60–80 | 60 | 60 | 60 |
| கோவா | 80 | 100 | 90 | 100 | 80 | 100 | 80 | 70 |
| வெண்டி | 120 | 120 | 100–140 | 120 | 120 | 60 | 120 | 70 |
| போஞ்சி | 200 | 150 | 140 | 160 | 140–160 | 140 | 240 | 120 |
| லீக்ஸ் | 120 | 160 | 160 | 160 | 100–120 | 200 | 160 | 130–140 |
| தேங்காய் | 50 | 25–30 | 50 | 40–50 | 40–60 | 50 | 50 | 35 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 120 | 80 | 90–100 | 90 | 120 | 100–110 |
| தேசிக்காய் | 100 | 180 | 120 | 80 | 50–60 | 60 | 160 | 50–60 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 15 | 30–40 | 20 | 20 | 08–10 |
| கறிமிளகாய் | 130 | 100 | 120–140 | 140 | 200–240 | 200 | 200 | 190 |
| இராசவள்ளி | 120 | – | 120 | – | 80–120 | – | 180 | 90–100 |
| முருங்கைக்காய் | 300 | 150 | – | 220 | 150–200 | 200 | – | 150 |

சோதிட சிகாமணி
சிவ.சேதுபாண்டியன்



# குருப் பெயர்ச்சிப் பலன்கள்

# உங்களுக்கு எப்படி?

## கடகம்



கடந்த ஒரு வருடமாக குருபகவான் உங்கள் ராசியில் அமர்ந்து உலா வந்தார். அப்போது அதிகமான சிரமத்தை அடைந்திருப்பீர்கள். மேலும் 16-12-2014 வரை அர்த்தாஷ்டமச் சனியும் நடந்தது. அதனால் ஏற்பட்ட விரயம் இனிச் சாதகமாகும். 05-07-2015 முதல் குரு பகவான் உங்கள் ராசிக்கு 2இல் வருவது மிகச்சிறப்பு. இப்போது தொட்ட காரியம் அனைத்திலும் வெற்றியைக் காண்பீர்கள். இந்த குருப்பெயர்ச்சி ஒரு வருடத்துக்கு மிகவும் யோகமானது. கடந்த காலத்தில் போட்டி, பகைகளை சந்தித்திருப்பீர்கள். கடன் தொல்லை, வேலை பாதிப்பு, தொழில் மந்தம் போன்ற நிலைகளை அடைந்திருப்பீர்கள். ஒருசிலர் வீண் விரயத்தையும், கஸ்டத்தையும் அடைந்திருப் பீர்கள். உற்றார்- உறவினர்களிடையே பகை ஏற்பட்டிருக்கக்கூடும். நின்றுபோன திருமணம் மீண்டும் கைகூடும். அடுத்தடுத்து பணவரவுகளைப் பெறுவீர்கள். இப்போது தொட்ட காரியம் அனைத்திலும் வெற்றிகிட்டுவதால், சுற்றியுள்ளவர்கள் மத்தியில் நல்ல அந்தஸ்தோடு வாழ்வீர்கள். வெளித்தொடர்பில் நண்பர்கள் உங்களுக்கு மிகவும் நேசமாக இருப்பார்கள். நீங்கள் நடத்த வேண்டிய ஏனைய காரியங்கள் அனைத்தும் இனிதே நடக்கும்.

வீட்டில் உறவினர்கள் வருகை கூடும். குடும்பத்தில் இருந்துவந்த குழப்ப நிலைகள் நீங்கும். சகோதரர்கள் வழியில் நிலவிவந்த சொத்துப் பிரச்சினை சுமுகமான தீர்வுக்கு வரும்.

**05-07-2015 - 23-08-2015 குரு, கேது சாரத்தில்**

இந்தக் காலகட்டத்தில் நீங்கள் மகிழ்ச்சியாக வாழ்வீர்கள். முன்பு இருந்துவந்த பணக்கஷ்டம் நீங்கும். சகோதரர்கள் உங்களுடன் நேசமாக வாழ்வார்கள். நீண்ட காலமாகப் பிரிந்துவாழ்ந்த தம்பதியர் ஒன்றுசேர்வார்கள். அதேபோல குழந்தையில்லாத தம்பதியர் குழந்தைப் பாக்கியத்தை அடைவார்கள். பணவசதியும், பொருளாதாரமும் உயரும். நண்பர்கள், அந்நிய மதத்தவர், அந்நிய மொழியினர் உங்களுக்கு எப்போதும் பக்கபலமாக இருப்பார்கள். அவர்களால் கூடுதல் வசதியும் கிட்டும். உடல்நலக் குறைவுகள் நீங்கி ஆரோக்கியமாக வாழ்வீர்கள். வெளிநாடு செல்வதில் இருந்துவந்த முட்டுக் கட்டை நீங்கும்.காதல்திருமணம் செய்ய நினைத்தவர்களின் எண்ணம் கைகூடும்.

**24-08-2015 - 27-10-2015 குரு, சுக்கிரன் சாரத்தில்**

இந்தக் காலகட்டத்தில் நண்பர்களால் வெளிவட்டாரத் தொடர்புகள் அனுகூலமாகும். கடிதத் தொடர்புகளில் நல்ல தகவல் வந்துசேரும். இது வரை உங்களுக்கு தொல்லை கொடுத்துவந்த நோய்த் தாக்கம் குறையும். அந்நிய மதத்தவர், அந்நிய மொழியினரால் அதிக இலாபங்கள் வந்துசேரும். நீங்கள் முயற்சித்த காரியங்கள் அனைத்திலும் வெற்றியைக் காணலாம். போட்டி பந்தயங்களில் நல்ல வெற்றி வாய்ப்பைப் பெறுவார்கள். ஒருசில மாணவர்கள் வெளிநாடு சென்று படிக்கப் போட்ட திட்டம் நிறைவேறும். உடன் பிறந்த சகோதரர்கள் தங்களது முன்னைய செயலுக்கு வருத்தப்பட்டு, உங்களிடம் நேசத்தோடு பழகுவார்கள்.

**28-10-2015 -15-01-2016 குரு, சூரியன் சாரத்தில்**

இந்தக் காலகட்டத்தில் நீங்கள் தொட்ட காரியம் அனைத்திலும் வெற்றியைக் காண்பீர்கள். புதிய வாகனம் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். ஒருசிலர் புதிய வீடு கட்டப் போட்ட திட்டம் நிறைவேறும். மேலும் சிலர் புதியவீட்டை விலைக்கு வாங்குவார்கள். உங்கள் வீட்டருகில் குடியிருந்து தொல்லை கொடுத்துவந்தவர்கள் வீடு மாறிச் செல்வார்கள். விவசாயிகள் பணப் பயிர்களைப் பயிரிட்டு அதிக மான இலாபத்தைப் பெறுவார்கள். பிள்ளைகள் வெளிநாடு செல்லப் போட்ட திட்டம் நிறைவேறும். பாதியில் நின்றுவிட்ட திருமணம் இனிதே கைகூடும். கடந்தகாலத்தில் காணாமல்போன பிள்ளைகள் வந்து சேர்வார்கள்.

**16-01-2016 - 07-02-2016 குரு, சூரியன் சாரத்தில் வக்ரம்**

அரச பணியாளர்களுக்கு இந்தக் காலகட்டம் ஒரு பொற்காலம். எதிர்பார்த்த இடத்துக்கு மாறுதல் வந்துசேரும். அதேபோன்று எதிர்பார்த்த பதவி உயர்வும் கிட்டும். தற்காலிகப் பணிநீக்கம் போன்ற தண்டனைகளை அடைந்தவர்கள் மீண்டும் பணியில் சேர்வார்கள். பெற்றோர்களால் நல்ல பலன்கள் வந்துசேரும். மணமான பெண்கள் கணவனுடன் இணக்கமாக வாழ்வார்கள். பழைய சண்டை சச்சரவுகள் நீங்கும். குழந்தைப் பாக்கியம் இல்லாதவர்கள் குழந்தைப் பாக்கியத்தை அடைவார்கள். வாகனம் வைத்துத் தொழில் செய்கின்றவர்கள் புதிய ஒப்பந்தம் மூலம் கூடுதல் வருவாயைப் பெறுவார்கள். பிரிந்து வாழ்ந்த தம்பதியர் ஒன்றுசேர்வார்கள்.

**08-02-2016 -14-06-2016 குரு, சுக்கிரன் சாரத்தில்**

இந்தக் காலகட்டத்தில் தொழிலதிபர்கள், தொழிலாளிகள் ஒற்றுமை ஏற்பட்டு உற்பத்தியும் பெருகும். பொருள் விற்பனை செய்கிறவர்கள் கூடுதல் இலாபத்தைப் பெறுவார்கள். அண்டை, அயலார் உங்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வார்கள். கணவன்- மனைவியிடையே இருந்து வந்த நீண்ட காலப் பிணக்குகள் மாறும். ஒற்றுமையுடன் வாழ்வார்கள். பகைவர்கள் விலகிச்செல்வார்கள். பிரிந்து வாழும் தம்பதியர்களிடையே, விவா கரத்து வழக்கு இருந்தாலும் ஒன்றுசேர்வார்கள்.

**15-06-2016 - 09-07-2016 குரு, சுக்கிரன் சாரத்தில்**

இந்தக் கால கட்டத்தில் உங்கள் பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரும். சகோதரர்கள் ஒற்றுமையுடன் இருப்பார்கள். அன்றாட வரவுகள்கூடும்.செய்யும்தொழிலில் ஏற்றம் காணலாம். தொழில் துறையில் நல்ல முன்னேற்றம் காணப்படும். நீண்ட வருடங்களாகப் பார்க்காத உறவுகளை இப்போது பார்ப்பீர்கள். அவர்களின் வற்புறுத்தலால் வீட்டில் சுபகாரியப் பேச்சுகள் சுமுகமாக முடியும். அரச பணிக்கு முயற்சித்தவர்களின் எண்ணம் ஈடேறும். தொல்லைதந்தவர்கள் விலகிச்செல்வார்கள். கொடுக்கல்- வாங்கலில் சுமுகமான நிலை ஏற்பட்டு வரவுகளும் கூடும்.

**10-07-2016 -01-08-2016 குரு சூரியன் சாரத்தில்**

இப்போது உங்கள் எண்ணங்கள் அனைத்தும் நிறைவேறும். குடும்பத்தில் அளவில்லாத மகிழ்ச்சியுண்டு. எங்கு பார்த்தாலும் உறவுகளின் ஆதரவுண்டு. சகோதரர்கள் வழியில் இருந்துவந்த பிணக்குகள் நீங்கும். அதிகாரிகளின் ஆதரவில், அரச ஊழியர்கள் கெடுபிடி இல்லாமல் வாழ்வார்கள். தொழில் துறையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். அயல்நாடு செல்லப் போட்ட திட்டப்படி இளைஞர்கள் பயணிப்பார்கள். அப்படிச் செல்கின்றவர்கள் பெற்றோர்களின் ஆசிர்வாதத்தையும் பெற்றுச் செல்ல வேண்டும். திருமணமாகாமல் உள்ள இளைஞர்களுக்கு திரு மணம் கைகூடும். ஈடுபடும் காரியங்கள் அனைத்தி லும் எளிதில் வெற்றிபெறுவார் கள்.

**அரசு ஊழியர்களுக்கு**

பொதுவாக இது அரச ஊழியர்களுக்கு உகந்த குருப் பெயர்ச்சி யாகும். இதுவரை தடைப்பட்டுவந்த பதவி உயர்வு, ஊதிய உயர்வு அனைத்தும் வந்து சேரும். விரும்பிய இடத்துக்கு மாறு தலும் கிட்டும். பணிபுரியும் இடத்தில் இருந்து வந்த பணிச்சுமை குறையும். சக பணியாளர்கள் ஒத்துழைப் புக் கிட்டும். தொல்லை கொடுத்து வந்த அதிகாரிகள் இடமாற்றத்தில் செல்வார் கள். தற்காலிகப் பணிநீக்கத்தில் உள்ளவர்கள் மீண்டும் பணியில் சேர்வார்கள்.

**வியாபாரிகளுக்கு**

வியாபாரிகள் புதிய கிளைகள் ஆரம்பிக்கப் போட்ட திட்டம் நிறைவேறும். தொல்லை கொடுத்துவந்த போட்டி வியாபாரிகள் விலகிச் செல்வார்கள். புதிய வாடிக்கையாளர்கள் வந்து சேர்வார்கள். ஒருசிலர் தற்போதுள்ள கடையை விரிவுபடுத்தப் போட்ட திட்டம் நிறைவேறும். சந்தை வியாபாரிகள் கூடுதல் இலாபத்தைப் பெறுவார்கள்.

**தொழிலாளர்கள், தொழிலதிபர்கள்**

இந்தக் குருப்பெயர்ச்சி காலத்தில் புதிய ஒப்பந்தங்கள் வந்துசேரும். ஒருசிலர் வெளிநாட்டில் தொழில் தொடங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். தொழிலாளிகள் ஒற்றுமையால் உற்பத்தி இருமடங்காகும். இதுவரை இருந்துவந்த கூடுதல் வேலைப்பளு குறையும்.

**பெண்களுக்கு**

பெண்களுக்கு, இதுவரை பட்ட துன்பத்திலிருந்து விடுதலை கிடைக்கும். நாளைய பொழுதுக்கு என்ன செய்வோம் என்று இருந்திருப்பீர்கள். இப்போது வருவாய் அதிகரித்து தேவைகள் பூர்த்தியாகி, சேமிப்பும் உயரும். வீட்டில் சுபகாரியப் பேச்சுகள் நடக்கும். வீட்டுக்கு அடங்காமல் இருந்துவந்த உங்கள் பிள்ளை இப்போது நல்லவராக வாழ்வார். பொன், பொருள் சேர்க்கை உண்டு. ஆடை, ஆபரணப் பெருமையோடு வாழ்வீர்கள்.

**மாணவர்களுக்கு**

மாணவர்கள் கல்வியில் எதிர்பாராத முன்னேற்றத்தை அடைவார்கள். தொழில்துறை சம்பந்தப்பட்ட உயர்கல்வியில் உள்ளவர்கள் புதிய கண்டு பிடிப்புகளைச் செய்வார்கள். மாணவர்களின் உயர் படிப்புக்கு கல்விக்கடன் தடையின்றிகிடைக்கும்.

**விவசாயிகளுக்கு**

விவசாயிகள் பணப்பயிர்களில் கூடுதல் இலாபம் அடைவார்கள். விவசாயமும் செழிப்பாக நடைபெறும். இப்போது நீங்கள் பிறர் சொத்தை வாங்கக்கூடிய நிலை உள்ளது. நல்ல விலையோடு வரும் சொத்துக்களை வாங்கிச்சேர்ப்பீர்கள். கிணற்றில் நீர் இல்லையே என்கிற கவலை மாறும். விவசாயிகளுக்கு இது ஒரு பொற்காலம்.

**அரசியல் பிரமுகர்களுக்கு**

உங்களுக்கு தொல்லை கொடுத்து வந்த எதிரிகள் விலகிச்செல்வார்கள். பொதுமக்கள் மத்தியில் உங்கள் பொதுப்பணி அங்கீகாரத்தைத் தரும். ஒருசிலர் திடீர் அதிர்ஷ்டத்தைப் பெறுவார்கள்.

**புனர்பூச நட்சத்திரக்காரர்களுக்கு:**

புனர்பூசம் 4-ஆம் பாதத்தில் பிறந்த நீங்கள் செய்ய வேண்டிய காரியம் அனைத்தையும் செய்துமுடிக்க உகந்த நேரம். நீண்ட காலமாக குழந்தைப் பாக்கியம் இல்லாத தம் பதியருக்கு குழந்தைப் பாக்கியம் . கிட்டும். தொழிலில் இருந்துவந்த போட்டிகள் குறையும். பிள்ளைகள் வழியில் தடைப்பட்டு வந்த சுப காரியப் பேச்சுகள் கைகூடும். வீட் டில் மங்கள நிகழ்ச்சிகள் இனிதே நடக்கும்.

**பூச நட்சத்திரக்காரர்களுக்கு:**

நீங்கள் சோதனைகள் எத்தனை வந்தாலும் கடந்துவிடும் மனப்பக்குவம் உள்ளவர்கள். இதுவரை நீங்கள் பட்ட வேதனை யாவும், சாதனையாக மாறும். விட்டுச்சென்ற சொந்தங்கள் விரும்பி வந்துசேரும். எதிர்பார்த்த அரச பதவி கிடைக்கும். அரச ஊழியர்கள் கேட்ட இடத்துக்கு மாறுதலை அடைவார்கள். தொழிலில் இருந்துவந்த போட்டி விலகும். செய்யும் தொழிலில் நல்ல இலாபத்தைப் பெறுவார்கள்.

**ஆயிலிய நட்சத்திரக்காரர்களுக்கு:**


எந்தத் தோஷம் இருந்தாலும் அத்தனை தோஷமும் உங்கள் நட்சத்திரத்தை பாதிக்காது. நீங்கள் திட்டமிட்டபடி உங்களுக்கு வேலை வாய்ப்பு கிட்டும். எதிர்பார்த்த பெண்ணைத் திருமணம் செய்வீர்கள். குழந்தைப் பாக்கியம் இல்லாத தம்பதியருக்கு குழந்தைப் பாக்கியம் கிட்டும். எதிர்பாராத வகையில் உறவினர்கள் உங்களுக்கு உதவி செய்வார்கள். உடன்பிறந்தவர்கள் மத்தியில் உங்கள் மதிப்புக் கூடுதலாகும்.

**பரிகாரம்:**

27 கொண்டல் கடலை எடுத்து மஞ்சள் துணியில் முடிந்து உங்கள் காசுப் பையில் அல்லது பையில் வைத்துக் கொள்ளுங்கள். எல்லாவற்றிலும் வெற்றியைக் காண்பீர்கள். முடிந்தவரை தட்சிணாமூர்த்தியை வணங்கி வரவேண்டும்.

# வர்ணம் தீட்டலாம் வாங்க





# தெரிந்து கொள்வோம்

**பாலூட்டி:** கன்று ஈன்று பாலூட்டுபவை பாலூட்டிகளாகும். இவை காற்றைச் சுவாசிப்பவை. பெரும்பாலும் நிலத்தில் வாழ்பவைஉதாரணம்: மனிதன், மிருகங்கள். சில பாலூட்டிகள் நீரிலும் வாழும். உதாரணம்: திமிங்கிலம்.



**மீன்கள்:** தண்ணீரில் வாழும் முதுகெலும்புள்ள உயிரினங்கள் இவை. கடல் நீரில் அதிக மீன் இனங்கள் வாழ்கின்றன.



**பறவைகள்:** பறப்பதற்கு சிறகுகள் உடையவை. இவை முட்டையிட்டு குஞ்சு பொரிக்கும். பென்குவின் போன்ற சில பறவைகளால் பறக்க முடியாது.



**இருவாழ்விகள்:** தரையிலும், தண்ணீரிலும் வாழக் கூடிய தன்மை பெற்ற உயிரினங்கள் இருவாழ்விகளாகும். அவை குளிர் இரத்தப் பிராணிகள். உதாரணம்: தவளை.




**ஊர்வன:** குளிர் இரத்தப் பிராணிகள் சுற்றுப்புறச் சூழ்நிலைகளுக்கு தக்கபடி அது மாறவும் கூடும். உதாரணம்: ஓணான்.




## கொக்கு

கொக்கு நீண்ட கழுத்தையும் கால்களையும் கொண்ட ஒரு பறவையாகும். இவை பொதுவாக வெண்ணிறத்தில் காணப்படுகின்றன. இவை மீன்கள் போன்றவற்றை உணவாகக் கொள்கின்றன. கழுத்தை நீட்டியபடி பறக்கின்றன. சில கொக்கினங்கள் இடம் பெயர்ந்து போகின்றன.



# விதிக்கு விளக்கம்




ஒரு பெருந்தனக்காரரின் வீட்டில் அமர்ந்து முல்லா அவருடன் உரையாடிக் கொண்டிருந்தார். செல்வந்தருக்கு திடீரென ஒரு சந்தேகம்வந்துவிட்டது. முல்லாஅவர்களே! விதி என்று மனிதர்கள் கூறுகிறார் களே அது என்ன? என அவர் கேட்டார். நாம் எதிர்பார்ப்பது நடக்காதபோது அதற்கு விதி என்று பெயரிட்டுஅழைக்கிறோம்– என்றார்முல்லா. செல்வந்தருக்கு முல்லாவின் விளக்கம் சரியாகப் புரியவில்லை. இன்னும் சற்றுத் தெளிவாகஇதைப்பற்றிச்சொல்லுங்களேன் எனச் செல்வந்தர் கேட்டுக் கொண்டார்.

முல்லா உடனே எனது அருமை நண்பர் அவர்களே! முதலில் நான் உங்களை எதற்காகச் சந்திக்க வந்தேனோ அந்த விடயத்தைக் கூறி விடுகிறேன். அப்புறம் விதியைப் பற்றித் தெளிவாக விளக்குகிறேன்– என்றார். எதற்காகச் சந்திக்க வந்தீர்? என்று செல்வந்தர் வியப்புடன் கேட்டார். எனக்கு ஒரு கோடிப் பொன்கடனாக வேண்டும் உங்களைக் கேட்டுப் பெறலாம் என்று தான் வந்தேன் என்றார் முல்லா. செல்வந்தருக்கு அதிர்ச்சியாக இருந்தது. இவ்வளவு பெரிய தொகை எதற்காக? என்று விளங்காமல் திகைத்தார். நான் கேட்டது என்ன ஆயிற்று? என்று முல்லா கேட்டார். இவ்வளவு பெரிய தொகையைத் திடீரென்று கேட்டால் எப்படி? என்றார் செல்வந்தர் தயக்கத்துடன். முல்லா சிரித்துக் கொண்டே உம்மிடம் கடன் கேட்டால் நிச்சயம் கிடைக்கும் என்ற நம்பிகையுடன் உங்களை நான் சந்தித்தேன் உங்களால் பணத்தைக் கொடுக்க முடியவில்லை, அல்லது கொடுக்க விரும்பவில்லை. அப்போது எனக்கு ஏற்படுகின்ற ஏமாற்றம் இருக்கிறதே அதை விதி என்று எண்ணி சமாதானம் அடையலாம் என்று விதிக்கு விளக்கம் தந்தார் முல்லா. பின்னர் முல்லா, நான் விளையாட்டுக்காகத்தான் உம்மிடம் கடன் கேட்டேன் நீர் குழப்பமடைய வேண்டாம் எனக் கூறிச் சிரித்தார்.

# பழக்கதோஷம் ஆபத்தானது!


ஒரு நாள் ஒருவர் தனது வீட்டுப் பரணைச் சுத்தம் செய்து கொண்டிருந்தார். அப்போது அது வரை அவர் கண்ணில்படாத மிகப் பழைய புத்தகம் ஒன்றைக் கண்டார். அதன் பக்கங்கள் மஞ்சள் படிந்து உதிரத் தொடங்கியிருந்தன. அதனால் அந்தப் பக்கங்களை மிகக் கவனமாகத் திருப்ப வேண்டியிருந்தது. அவர் அந்தப் புத்தகத்தை எத்தனையோ முறை வாசிக்க முயன்றும், ஒரே ஒரு பத்தியில் உள்ள கருத்தை மட்டும் தெரிந்து கொள்ள முடிந்தது. எனவே அது மாய மந்திரங்களைப் பற்றியது என்று அறிந்து கொண்டார். அந்தப் பத்தியில், கருங்கடல் கரையில் கிடக்கும் மாயசக்தி மிக்க ஒரு கறுப்புக் கூழாங்கல் பற்றிச் சொல்லப் பட்டிருந்தது. அந்தக் கல்லால் எதைத் தொட்டாலும், அது தங்கமாக மாற்றி விடுமாம். அந்தக் கல்லை எப்படிக் கண்டு கொள்வது என்றும் –அந்தப் புத்தகத்தில் சொல்லப்பட்டிருந்தது. தொட்டுப் பார்த்தால் மற்ற கற்கள் எல்லாம் பனிக்கட்டி போல் குளிராய் இருக்க, அந்தக் கல் மட்டும் வெதுவெதுப்பாய் இருக்குமாம். இதைத் தெரிந்து கொண்ட அந்த மனிதர், இருப்புக் கொள்ளாமல், கருங்கடல் நோக்கி உடனே புறப்பட்டார். அங்குத் தினமும் காலையிலிருந்து மாலை வரை அவர் ஒவ்வொரு கல் லாய்த் தொட்டுப் பார்த்துத் தேடத் துவங்கினார். கடற்கரையில்கண்ணுக்கெட்டிய தூரம் வரை கருங்கூழாங் கற்கள் கிடந்தன. ஒரு முறை சோதித்த கல்லை மறுபடியும் மறுபடியும் சோதிக்காமல் இருக்க வேண்டுமே என்ற கவலை வந்து விட்டது அவருக்கு. சோதித்த கல்லைக் கடலுக்குள் உடனே எறிந்து விட்டால் குழப்பம் வராது என்று சிந்தித்து, ஒவ்வொரு கல்லாகக் கட லுக்குள் எறிந்து கொண்டிருந்தார். இப்படி பல ஆண்டுகள் கடந்து போயின. கல்லும் கிடைக்கவில்லை, ஆனால் கற்களைத் தொட்டுப் பார்த்து கடலுக்குள் எறிவது மட்டும் அனிச்சை செயல்போல் அவருக்கு ஆகி விட்டது. ஒரு நாள் மாலை, மிகுந்த தேடலுக்குப் பின்னர் களைத்துப் போய் கடற்கரையை விட்டுச் செல்லும்போது ஒரு கறுப்புக் கூழாங்கல் அவர் கண்ணில் பட்டது. அதைக் கையில் எடுத்தார். அது வெதுவெதுப்பாய் இருந்தது. ஆனால், பல ஆண்டுகள் பழக்கத்தால், அதையும் கடலில் தூர எறிந்து விட்டார். ஆம். செய்யும் செயல்களில் எப்பொழுதும் கருத்தும் கவனமும் தேவை .





உதயன்
விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

## 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



### சின்னத்தம்பி மயில்வாகனம்

தோற்றம் 07.05.1939 — மறைவு 06.06.2015

கடந்த 06.06.2015 இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர் சின்னத்தம்பி மயில்வாகனம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (06.07.2015) திங்கட் கிழமை மு.ப. 11.00 மணி யளவில் அவரது இல்லத்தில் நடைபெற வுள்ளது. அத் தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை யிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத் திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம் இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப் பாக ஏற்றுக் கொள்ளவும். மேலும் இவரது மறைவுச் செய்திகேட்டு நேரில் வருகை தந்தும் தொலைபேசி, தொலைநகல் மூலமாகவும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் வேறு பல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

குடும்பத்தினர்.

4ஆம் வட்டாரம் கோம்பாவில்
புதுக்குடியிருப்பு.
(61726)
077 1985072

## மரண அறிவித்தல்

### திருமதி பராசக்தி மதியாபரணம்

இல 43, வளாக வீதி, திருநெல்வேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பராசக்தி மதியாபரணம் 05.07.2015 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா இராசம்மா தம்பதியரின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை செல்லமுத்து தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற மதியாபரணத்தின் அன்பு மனைவியும் கணேசபிள்ளை காலஞ்சென்ற மகேசன் மற்றும் புஸ்பராணி, தயாகரன் ஆகியோரின் அன்புத் தாயும் றஞ்சினி, சுமித்திரா ஆகியோரின் மாமியாரும் கோபினா, அபிசனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (05.07.2015) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் பி.ப 4.00 மணியளவில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

43, வளாக வீதி,
திருநெல்வேலி,
(61723)
தகவல் :-
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

### எஸ்.பி.நடராசா



எமது அன்புக்கும் பெருமதிப்புக் குமுரிய தொழிலதிபர் எஸ்.பி. நடராசா (அண்ணா தொழிலகம்) அவர்கள் இறைபதமெய்திய செய்தி கேட்டு அதிர்ச்சி அடைகின்றோம்.

அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

செல்வி சிவஞானம் ஞானலோஜினி
சட்டத்தரணி
DR. சிவஞானம் ஜெய்சங்கர்.
(61728)

## கண்ணீர் அஞ்சலி



இலங்கை காப்புறுதிக்கூட்டுத் தாபனத்தின் குழு நிதி ஆலோசகராக கடமையாற்றும் பத்திராசா அனிஸ்ரன் கபிலன் அவர்களின் அன்பு தாய் பத்திராசா ஜரினம்மா அவர்கள் இறைபதமடைந்த செய்தி கேட்டு துயருறுகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்,
முல்லைத்தீவு கிளை.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### இராஜேஸ்வரன் தவநிரோஜன் ( கஜீ )

கடந்த 07.06.2015 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் மகன் தவநிரோஜன் (கஜீ) அவர்களின் அந்தியேட்டி வீட்டுக் கிரியைகள் நாளை (07.07.2015) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அந் நிகழ்விலும் அதனை தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

82/17, யாழ்வீதி,
யாழ்ப்பாணம்.

T.தவம் (தந்தை)
(வசந்தவம் ரயர் வேக்ஸ் உரிமையாளர்)
குடும்பத்தினர்.

## இதய அஞ்சலி

### எஸ்.பி.நடராசா



எமது தொழிலுக்கு வழிகாட்டியாகவும் பேருதவியாகவும் இருந்து வந்த தொழிலதிபர் எஸ்.பி.நடராசா (அண்ணா தொழிலகம்) அவர்கள் இறைபதம் எய்திய செய்தி கேட்டு அதிர்ச்சியடைகின்றோம்.


அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கே.கே.எஸ் வீதி,
கோண்டாவில் மேற்கு.
(61727)

கோபசன் வெல்டிங் வேக்சோப்
உரிமையாளர் S.யோகேஸ்வரன்(லோகன்)
ஊழியர்கள்.

## கண்ணீர்க் காணிக்கை

### எஸ்.பி.நடராசா



நெஞ்சமதில் நிலைத்து நின்று
எண்ணமதில் என்றும்
நிலைத்து வண்ணமலர்
வாசமென
மனங்களிலே வீசி நின்றீரே!
கண்ணிமைக்கும் காலத்துள்
காலனுமைக் கவர்ந்து
சென்ற
கொடுமையை எண்ணி
மனம் வெதும்பியே
வாடுகின்றோம்.

ஓம் சாந்தி!ஓம் சாந்தி!ஓம் சாந்தி!

அண்ணா தொழிலக
ஊழியர்கள்.
(c 16641)

## மரண அறிவித்தல்

### வல்லிபுரம் சீவரட்ணம்



கோண்டாவில் கிழக்கு நாராயணன் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் சீவரட்ணம் 05.07.2015 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் மற்றும் சரஸ்வதிதேவி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னு-பூரணம் தம்பதியரின் பாசமிகு மருமகனும் மல்லிகா தேவியின் அன்புக்கணவரும் சுஜீவா(கொள்வனவு உத்தியோகத்தர்மாநகர சபை, யாழ்ப்பாணம்), சுமதி(லண்டன்), சதீஸ்(பாதுகாவலர் நல்லூர் பிரதேச சபை), காலஞ்சென்ற ஜேயன் ஆகியோரின் அன்புத்தந்தையும் மோகன்ராஜ், சசிகுமாரி, ஷாலினி ஆகியோரின் மாமனாரும் மெல்ஷா, யனோஜ், கிருசன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.07.2015) திங்கட்கிழமை பி.ப ஒரு மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோட்டைக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாராயணன் வீதி,
கோண்டாவில்.
தொடர்பு :- 071 862 8566
077 684 4390
(61729)
தகவல் :-
குடும்பத்தினர்.

# மனக்கோட்டை கட்டுகிறது ஐக்கிய ம.சு. கூட்டமைப்பு

## அமைச்சர் ஹக்கீம் கூறுகின்றார்

ஆட்சி மாற்றத்தின் மூலம், அரசியலில் ஏற்பட்ட மாறுதல்களைத் தக்க வைப்பதை உறுதிப்படுத்த வேண்டுமாக இருந்தால், இந்த மாற்றத்தை உருவாக்குவதற்கு எந்த சக்திகள் தற்போதைய ஜனாதிபதிக்குத் துணையாக நின்றார்களோ, அந்த சக்திகளோடு இன்றைய ஜனாதிபதி நின்றாக வேண்டும். – இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று மாநகரசபையின் முன்னாள் பிரதி மேயர் எம்.எம்.எம். நிஸாம், அவரின் அக்கரைப்பற்று இல்லத்தில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்திருந்த இப்தார் நிகழ்வில் கலந்துகொண்ட மு.கா. தலைவர் ஹக்கீம், அங்கிருந்த ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

நாங்கள் உருவாக்கிய யுகப் புரட்சியை, தலைகீழாக மாற்றுவதற்குரிய முயற்சிகள் நடந்து கொண்டுள்ளதொரு சூழலில்தான், இந்த இப்தார் நிகழ்வில் நாங்கள் கூடியிருக்கின்றோம். தற்போது, அரசியலில் நடந்திருக்கின்ற நிகழ்வானது, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பேரம்பேசும் சக்தியை அதி உச்சத்துக்குக் கொண்டு சென்றுள்ளது.

ஆட்சி மாற்றத்தின் மூலம், அரசியலில் ஏற்பட்ட மாறுதல்களைத் தக்க வைப்பதை உறுதிப்படுத்த வேண்டுமாக இருந்தால், இந்த மாற்றத்தை உருவாக்குவதற்கு எந்த சக்திகள் தற்போதைய ஜனாதிபதிக்குத் துணையாக நின்றார்களோ, அந்த சக்திகளோடு இன்றைய ஜனாதிபதி நின்றாக வேண்டும். இல்லையென்றால், இந்த ஜனாதிபதியை நாங்கள் அங்கீகரித்துக் கொண்டு அரசியல் செய்வதில், சங்கடமானதொரு சூழ்நிலை உருவாகிவிடும்.

எது எப்படியிருந்தாலும், எதிர்வரும் பொதுத் தேர்தலில் மு.காங்கிரஸை தனித்துக் களமிறக்கினால், தாங்கள் வென்று விடலாமென்று, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மிகத் தீவிரமாக ஆலோசித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் இன்று எமக்குக் கடைசியாகக் கிடைத்த செய்தியாகும்.

மு.காங்கிரஸ் தனித்துக் களமிறங்கினால் யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு தவிர்ந்த எட்டு அல்லது 10 மாவட்டங்களில், ஐ.தே.கட்சியை தோற்கடித்து விடலாமென்று, ஐ.ம.சு.கூட்டமைப்பு கணக்குப் போட்டுக் கொண்டிருக்கின்றார்கள். மு.காங்கிரஸ் ஒருபோதும் ஐ.ம.சு.கூட்டமைப்புடன் இணைந்து எதிர்வரும் தேர்தலில் களமிறங்கப் போவதில்லை. – என்றார். (ற)

Spoken English
ஆங்கிலத்தில் சரளமாகக்கதைக்க பயில ஆசிரியர் ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி (Dip in English and Science London) நாவலிங்கம் வீதி, சங்கானை, 424 K.K.S வீதி, யாழ்ப்பாணம். T.P : 077 675 1649

காணி விற்பனைக்கு
சரசாலையில்
றோட்டுக்கரையுடன் ஏக்கர் 43
றூட் 3 விஸ்தீரணமுடைய வெற்று
ஆதனம் விற்பனைக்குண்டு.
தொடர்பு :
077 858 9433
0044 794 731 6802

ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்
IELTS
• Latest training materials. (BOOK 10)
• Skills development in all four categories.
• Personalised guidance and ample of opportunities to interact with the lecturer.
IELTS Life Skills
திருமணம் செய்து நிரந்தர விசாவில் UK செல்பவர்களுக்கானது, 2015 புதிய நடைமுறைக்கு அமைவாக இலகுவான முறையில் UK அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆங்கில பரீட்சை
British Council'S IELTS Registration Centre
Spoken English
(Veta Fluency Diploma)
DMI INTERNATIONAL ENGLISH COLLEGE
யாழ்ப்பாணம் 021 222 4403 Hot Line :0777173517
நெல்லியடி 021 226 2470 | சாவகச்சேரி 021 227 0775 | சுன்னாகம் 021 224 1970 | கிளிநொச்சி 021 228 5655

# சேமலாப நிதியத்தையும் களவாடியது கடந்த அரசு

## முன்னாள் எம்.பி. எரான் விக்ரமரத்ன தெரிவிப்பு

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசு, மக்களின் ஊழியர் சேமலாப நிதியத்தை களவாடி அதனை தமது தேவைக்காக பயன்படுத்திக்கொண்டது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

மக்கள் பணத்தை மக்களுக்கே தெரியாமல் மஹிந்த அரசு சிறிது சிறிதாக கொள்ளையிட்டது. அலரி மாளிகைக்கு முன்னால் அமைக்கப்பட்ட உல்லாச விடுதிக்காக மக்களது ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்து சுமார் 50 கோடி ரூபா திருடப்பட்டுள்ளது. உழைக்கும் மக்களுக்கு தமது ஓய்வுகாலத்தில் மிகுதியாக இருப் பது அந்தப் பணம் மாத்திரம்தான். ஆனால் அதிலும் மஹிந்த அரசு கைவைத்துவிட்டது.

2009ஆம் ஆண்டு போர் நிறைவுக்கு கொண்டுவரப்பட்டபோதும், அதனால் கிடைக்கப் பெற்ற சமாதானத்தின் பிரதிபலன் மக்களுக்கு கிடைக்கவில்லை. வாழ்நாள் முழுவதும் தாங்களே நாட்டை ஆளவேண்டுமென நினைத்து, அரசியலமைப்பையும் அதற்கேற்றவாறு மாற்றிக்கொண்டு நாட்டை ஆண்டனர். இதனால்தான், கடந்த ஜனவரி 8ஆம் திகதி ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையில் பொது கூட்டணியை அமைத்து அந்த ஆட்சியை தோற்கடித்தோம்.

அத்துடன், கல்வி மட்டத்தில் நாம் மிகவும் பின்தங்கியுள்ள நிலையிலேயே உள்ளோம். தமது பிள்ளைகளுக்கு சிறந்த கல்வியும், கல்வி கற்பதற்கு சிறந்த பாடசாலையும் கிடைக்க வேண்டுமென்பதே ஒவ்வொரு பெற்றோரதும் எதிர்பார்ப்பாக உள்ளது. இந்த எதிர்பார்ப்பு ஒன்றுமே நிறைவேறவில்லை.

பிள்ளையை பாடசாலைக்கு சேர்ப்பதற்கு இன்னும் அமைச்சர்கள் உள்ளிட்டவர்களுக்கு பின்னால் ஒரு கடிதத்துக்காக அலையவேண்டியுள்ளது. இதனை நாம் இல்லாமல் செய்வோம். நாட்டில் ஒருவருக்கு ஒரு வாக்குரிமையே உள்ளது. அதுபோலவே நாட்டின் நீதி உள்ளிட்ட அனைத்து துறைகளும் மக்களுக்கு சமமாக பகிரப்பட வேண்டும்.

பதவியிலிருந்து தூக்கியெறியப்பட்டவர்கள் இன்று பின்கதவால் வந்து ஆட்சியை தக்க வைத் துக் கொள்ள முயற்சிக்கின்றனர். ஆனால் நாம் மக்களின் தேவையு ணர்ந்து, நாம் ஆட்சிக்கு வந்து இரண்டே வாரங்களில் அத்தியாவசிய பொருள் கள் மற்றும் எரிபொருட்களின் விலையை குறைத்து மக்களுக்கு நன்மையேற் படுத்தினோம்.

எதிர்வரும் தேர்தலில் மக்கள் கடந்த ஆட்சியாளர்களையும் தற்போதுள்ள அரசையும் ஒப்பிட்டு பார்த்து அதற்கேற்றவாறு வாக்களிப்பர் என எதிர்பார்க்கின்றோம்.

நாட்டில் ஏற்படப் போகும் நல்லாட்சி மைத்திரியின் எதிர்காலமோ, ரணிலின் எதிர்காலமோ அல்லது மஹிந்தவின் எதிர்காலமோ அல்ல. இது உங்கள் பிள்ளைகளின் எதிர்காலம் என்பதை மறவாதீர்கள். – என்று அவர் தெரிவித்தார். (ற)

ஆங்கிலம் மூன்று மாத சனி, ஞாயிறு பயிற்சி நெறி
தொழில்புரிவோர், பல்கலை புதுமுக மாணவர்கள் மாணவர்கள், இளைஞர், யுவதிகளுக்கானது.
2வது பயிற்சிநெறி ஆரம்பம் : 11.07.2015
பிரிவு 1 : காலை 08.00-10.00 பிரிவு 2 : மு.ப 10.00-12.00
பிரிவு 3 : பி.ப 01.00-03.00 பிரிவு 4 : மாலை 03.00-05.00
SAAMSON
யாழ்நகர். 077 621 4567 021 320 3313

கடை இடமாற்றம்
யாழ் ஆஸ்பத்திரி வீதி, நியூ மாக்கற் மேல்மாடியில் இல 10இல்
இதுவரை இயங்கி வந்த
நியூ யாழ் போன் சொப்
இன்று 06.07.2015 தொடக்கம் ஆஸ்பத்திரி வீதி, நியூ மாக்கற் மேல் மாடியில் இல 08இல் இயங்கவுள்ளது என்பதை வாடிக்கை யாளர் களுக்கு அறியத் தருகின்றோம். அதிரடி விலைக்கழிவு ஒரு கிழமைக்கு வழங்கப்படும். மேலும் தங்கள் தொடர்ச்சியான ஆதரவை வேண்டி நிற்கின்றோம்.
மேலதிக தகவல்களுக்கு எமது நிறுவனமான இல 08 நவீன சந்தை வெளிப்புறத்திலுள்ள கலக்ஸி மொபைல் சொப்பை நாடுங்கள்.
077 070 0832
(61726)
உரிமையாளர்



# இளம் சமுதாயத்தினரை கட்டியெழுப்பும் நிகழ்வு

மன்னார், ஜூலை 6

சமூக, சமாதான, சமத்துவமான இளம் சமுதாயத்தை கட்டியெழுப்புதல் தொடர்பான விழிர்ப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மன்னாரில் இடம் பெற்றது.

போரின் பின் நாட்டில் பாரம்பரிய மத ரீதியான பிரச்சினைகளை தீர்த்து வைக்கும் முகமாக சர்வமதத் தலைவர்களை உள்ளடக்கி இந் நிகழ்வு இடம்பெற்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வானது பிரித்தானிய உயர்ஸ்தானிகாரியாலயத்தின் நிதி உதவியுடன், மன்னார் சேவாலங்கா மன்றத்தின் அமுலாக்கத்தின் கீழ் இடம் பெற்றது.

மேலும் இந்நிகழ்ச்சியில் ஜனாதிபதியின் சர்வமத ஆலோசகர் ஜெகதீஸ் குருக்கள், சேவாலங்கா மன்றத்தின் உதவித்திட்ட பணிப்பாளர் திருமதி அனட் றொயிஸ், மாவட்ட நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் குபேரக்குமார் கஸ்மீர் உட்பட சர்வமதத் தலைவர்களும் கலந்துகொண்டிருந்தனர். (ற)

# சிலாபத்தில் சிக்கியது மது உற்பத்தி நிலையம்



கொழும்பு, ஜூலை 6

சிலாபம் காக்கப்பள்ளி களப்பு பிரதேசத்தில் சட்டவிரோதமாக இயங்கி வந்த மதுபான உற்பத்தி நிலையம் ஒன்றை சிலாபம் பொலிஸ் பிரிவின் குற்ற ஒழிப்பு பிரிவினர் முற்றுகையிட்டப்பட்டதோடு சந்தேகத்தின் பேரில் நபர் ஒருவரையும் கைது செய்யதுள்ளனர்.

அங்கு உற்பத்தி செய்யப்பட்ட மதுபானம், காஸ் அடுப்புக்கள் மற்றும் சிலிண்டர்கள் உட்பட மேலும் பல உபகரணங்கள் போன்றவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இது தொடர்பில் கைது செய்யப்பட்ட நபர் சிலாபம் பம்மல பிரதேசத்தில் வசித்து வருபவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

கிடைக்கப் பெற்ற இரகசிய தகவல் ஒன்றையடுத்து பல நாள்களாக இவ்விடயம் தொடர்பிலான விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர் குற்ற ஒழிப்பு பிரிவினர் குறித்த இடத்தை முற்றுகையிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ்அதிகாரிகள்குறித்தஇடத்தை முற்றுகையிட்ட போது அங்கு மூன்று காஸ் அடுப்புக்களைக் கொண்டு சட்டவிரோத மதுபான உற்பத்தி நடவடிக்கைகள்இடம்பெற்றுக்கொண்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்தசம்பவம்தொடர்பானமேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருவதாக சிலாபம் பொலிஸார் தெரிவித்தனர். (ற)

# ஐ.ம.சு.கூ. குறித்து கருத்துக் கூற சந்திரிகாவுக்கு அதிகாரமில்லை

## சுசில் பிரேமஜயந்த கூறுகின்றார்

கொழும்பு, ஜூலை 6

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணி தொடர்பில் கருத்து தெரிவிக்கும் அதிகாரம் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவிற்கு இல்லை என கூட்டணியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

சிறி லங்கா சுதந்திர கட்சியின் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் உடனான சந்திப்பின் போது, மஹிந்தவிற்கு வேட்பு மனு வழங்கப்பட்டுள்ளமை தொடர்பில் தமக்கு அறிவிக்கப்படவில்லை என சந்திரிகா தெரிவித்துள்ளமை தொடர்பில் ஊடகவிய லாளர்களால் வினவப்பட்டது. அதற்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள கூட்டணியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த, முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவுக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியுடன் எவ்வித சம்பந்தமும் கிடையாது. எனவே அவருக்கு கூட்டணி குறித்து பேசு வதற்கு எவ்வித அதிகாரமும் இல்லை. – என்று குறிப்பிட்டுள்ளார். (ற)

# ஐம்பது பேரே தற்போது புனர்வாழ்வு முகாமில்

வவுனியா, ஜூலை 6

விடுதலைப் புலிகள் அமைப்பில் அங்கத்துவம் வகித்த மற்றும் அவர்களுக்கு உதவியவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்களில் 50 பேரே தற்போது பூந்தோட்டம் புனர்வாழ்வு முகாமில் புனர்வாழ்வு பெற்று வருகின்றனர் என்று புனர்வாழ்வு அதிகாரி லெப் கேணல் பீ.பீ.எச்.பெர்னான்டோ தெரிவித்துள்ளார்.

வவுனியா, பூந்தோட்டம் புனர்வாழ்வு முகாமில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்த மற்றும் அவர்களுடன் தொடர்புகளைக் கொண்டிருந்த பலர் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு புனர்வாழ்வு பயிற்சி கொடுத்து சமூகமயமாக்கல் வேலைத் திட்டத்தை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு ஆரம்பித்தது.

அவ்வாறு புனர்வாழ்வு பெற்று 12 ஆயிரம் பேர் வரையில் தற்போது சமூகத்துடன் இணைக்கப்பட்டுள்ளனர். இங்கு பெற்ற பயிற்சிகளைக் கொண்டு பலர் சுயதொழில் மற்றும் மேசன், வயறிங் என தொழில் செய்து நல்ல வருமானத்தைப் பெறுகிறார்கள்.

ஒரு சிலர் பயிற்சி பெற்றும் அதனைப் பயன்படுத்தாது கூலி வேலை செய்து வருகிறார்கள். இங்கு பல்வேறு தொழிற் பயிற்சிகளும், சப்பாத்து செய்தல் போன்ற சுயதொழில் பயிற்சியும் மொழிக் கற்கைகளும் வழங்கப்படுகின்றன.

கடந்த காலங்களில் புனர்வாழ்வு பெற்று சமூகத்துடன் இணைக்கப்பட்டவர்களில் 10 பேர் வரையிலானோரே மீண்டும் சிறைக்கு வந்தனர். ஏனையோர் சமூகத்தில் வாழ்கிறார்கள். அந்த வகையில் இந்த புனர்வாழ்வு பயிற்சி வெற்றியளித்துள்ளது.

தற்போது ஒரு பெண் உட்பட 50 பேர் புனர்வாழ்வு பெற்று வருகின்றனர். அவர்களின் புனர்வாழ்வு காலமான ஒரு வருடம் முடிவடையும் போது அவர்கள் ஒவ்வொருவரும் சமூகத்துடன் இணைக்கப்படுவார்கள்- என்று தெரிவித்துள்ளார்.

(ற)

## சிறுமி துஷ்பிரயோகம்: இளைஞர் கைது

புத்தளம், ஜூலை 6

புத்தளம் மாவட்டத்தின் முந்தல் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பத்துளுஓயா பகுதியில் 15 வயதுடைய சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்படுத்திய இளைஞன் ஒருவனை கைது செய்துள்ளதாக முந்தல் பொலிஸார் தெரிவித்தனர்.

காதலனாலேயே குறித்த சிறுமி துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக முந்தல் பொலிஸ் நிலையத்தில் பெற்றோரினால் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்தே இளைஞன் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

துஷ்பிரயோகத்திற்குட்படுத்தப்பட்ட சிறுமி தற்போது புத்தளம் ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்றும் அவரை இன்று புத்தளம் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முந்தல் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற)

## மரண அறிவித்தல்

### சண்முகநாதன் ஆனந்தராஜா

(சண்முகநாதன் மில்)



கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சண்முக நாதன் ஆனந்தராஜா நேற்று (05.07. 2015) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வர்களான சண்முகநாதன் - பாக்கியம் தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை வல்லவாம்பிகை தம்பதியரின் மருமகனும் இந்திராதேவியின் அன்புக் கணவரும் மீரா, அகிலன், கஜன் ஆகியோரின் தந்தையும் ஆனந்தகுமார், சித்திரா, சுபத்திரா, ஆனந்தநாதன், சந்திரா, அருணா, சுகுணா, மஞ்சுளா ஆகியோரின் அன்புச் சகோதரனும் வள்ளியம்மை, சிவகுருநாதன், கந்தசாமி, வடிவாம்பிகை, பொன்னையா, ஞானேஸ்வரி, தில்லை நாதன், லிங்கநாதன், மங்கையர்க்கரசி, தயாபரன், ராமலக்ஷ்மி, அனுசூயா ஆகியோரின் மாமனும் கீர்த்திகா, லதுமிலன், டிசான் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(06.07.2015) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00மணியளவில் செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

32, இராஜவீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
077 474 5796, 021 222 7212
077 368 2255

(61713)

தகவல் :-
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 05 | 05 |
| ✱ | ✱ |
| 10 | 07 |
| ✱ | ✱ |
| 1928 | 2015 |



### திருமதி சிவக்கொழுந்து சிவப்பிரகாசம்

புலோலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவக்கொழுந்துசிவப்பிரகாசம் 05.07.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வல்லிபுரம் சிவப்பிரகாசம் அவர்களின் துணைவியாரும் காலஞ்சென்றவர்களான செல்லம்மா, கந்தசாமி, இலட்சுமிப்பிள்ளை, மகேஸ்வரி ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற சிவராஜா, பாலகிருஸ்ணன், சிவஞானலிங்கம், சத்தியபாமா, சண்முகராசா, சிவகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஞானசவுந்தரி, இராசலிங்கம், மேசி, நந்தினி, வனிதா, இளஞ்செல்வி ஆகியோரின் அன்பு மாமியாரும் வாசுகி, மைதிலி, நிசாந்தன், உமையாள், ஊர்மிளா, சுபாங்கி, ஜானகி, கஜன், யாழினி, திவாகர், கபில்ஜா, பிரவின், அபிராமி, வைஸ்ணவி ஆகியோரின் பேர்த்தியும் விதுஷன், அனுஷன், ரஜன், சிறிவராகி, அனுமிதன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (06.07.2015) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் ஆனைவிழுந்தான் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் , நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :-
பாலகிருஷ்ணன் +9477 444 4377(Srilanka)
சிவஞானலிங்கம் +1585 465 0956(USA) +94752819174( Srilanka)
சத்தியபாமா +94775713353( Srilanka)
சண்முகராசா +4922485003 (Germany)
சிவகுமார் +19057945140( Canada)+9477 846 6083
இராசலிங்கம்(மருமகன்) +94750387470( Srilanka )

கலையன் தோட்டம்,
புலோலி கிழக்கு,பருத்தித்துறை

(59773)

தகவல் :-
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### ஆசீர்வாதம் வின்சன்ற் துரைராஜா

(ஓய்வுநிலை குடியேற்றத்திட்ட உத்தியோகத்தர் (C.O) பரந்தன்.திட்ட முகாமையாளர் (P.M) இரணைமடு)



கரவெட்டியைப்பிறப்பிடமாகவும் 5ஆம் வாய்க்கால் பரந்தனை வசிப்பிட மாகவும் கொண்ட ஆசீர்வாதம் வின்சன்ற் துரைராஜா 05.07.2015 ஞாயிற்றுக் கிழமை கரவெட்டியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஓய்வுபெற்ற ஆசிரியர்களான பஸ்தியாம்பிள்ளை ஆசீர் வாதம்-அன்னம்மா தம்பதிகளின் புத்திரனும் காலஞ்சென்றவர்களான வரப்பிரகாசம்-ஞானம்மா தம்பதிகளின் மருமகனும் மேரி கொன்செப்ஸனின் அருமைத்துணைவரும் வீபீஸ்அன்ரனயினஸ்(லண்டன்), எமிலி நிசாந்தினி (அவுஸ்திரேலியா), ஜெயமாறியோ விஜந் (இந்தியா) ஆகியோரின் அன்புத்தந்தையும் விஜயந்தி(லண்டன்) மரினோ டயான் (அவுஸ்திரேலியா), தர்மினி (இந்தியா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் இவாஞ்சலின், டியோனா(லண்டன்), மேகன், நேத்தன்(அவுஸ்திரேலியா), றெறன்ஸ் பிரியன்(இந்தியா) ஆகியோரின் அன்புப்பேரனும் காலஞ்சென்ற அன்ரனி யோசப்(குலம்) மற்றும் ஜோசப்பின் புஸ்பராணி ஆகியோரின் அன்புச்சகோதரரும் P.தர்மநாயகம் (ஓய்வுநிலை நீர்பாசனபொறியியலாளர்),ஜோசப்செல்வராஜா(USA),V.J.B தவராசா ஆகியோரின்மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய தகவல் பின்னர் அறியத்தரப்படும்.


அமலகம்
பெற்றோல்செட் ஒழுங்கை
கரவெட்டி
021 226 2558

(C 16639)

தகவல் :-
குடும்பத்தினர்.

### அமரர் கந்தையா அருணாசலம்

(ஓய்வுபெற்ற அதிபர்)



கொடிகாமம், பாலாவி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா அருணாசலம் (04.07.2015) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - நல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கனகம்மா (ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும் சசிகலா, சியாமளா (ஆசிரியை - யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), சிவசுதன் (பிரதேசசபை- கொடிகாமம்), செந்தூர்ச்செல்வன் (ஜேர்மனி), காலஞ்சென்ற சபேசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சிவராசா மற்றும் வனஜா, நிரஞ்சலா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் கஜன் (ஆஸ்திரேலியா), நகுசன், வைஷ்ணவி, அரவிந்தன், டினாத், புராந்தகி, சபேசினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று(05.07.2015) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பாலாவி இந்துமயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாலாவி தெற்கு,
கொடிகாமம்.

(61711)
(45.3.7)

தகவல்.
குடும்பத்தினர்.

### திருமதி சரஸ்வதி இலங்கைநாயகம்



மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி இலங்கைநாயகம் நேற்று (05.07.2015) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இலங்கைநாயகத்தின் பாசமிகு மனைவியும் சுசிலாதேவி, காலஞ்சென்ற சகுந்தலாதேவி மற்றும் குமாரகுலசிங்கம் சிவஞானவடிவாம்பாள் ஆகியோரின் அன்பு தாயாரும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, சர்வகுலர்ாசா மற்றும் திருச்செல்வம் இந்திராதேவி ஆகியோரின் மாமியும் காலஞ்சென்ற பொன்னாச்சி, வேலாயுதம், சரவணமுத்து, சுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு சகோதரியும் சிவமலர், சிவகுமார், காலஞ்சென்ற கிருஸ்ணகுமார் மற்றும் தனவாணி, செல்வரூபன் காலஞ்சென்ற சிவரூபன் மற்றும் ஜெயரூபன், ஜெயாகரன், தாட்சாயினி, கிருபாஜினி, சுகிர்தா, சுரேஸ், சுகந்தன், சுமணன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.07.2015) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு கோண்டாவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.
077 742 1128

(61722)

தகவல் :-
குடும்பத்தினர்.

# திருடர்களுடனேயே மஹிந்த இருந்தார்

## கலாநிதி தம்பர அமில தேரர் கூறுகின்றார்

கொழும்பு, ஜூலை 6
மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் திருடர்களுடனேயே இருந்தார். அதனைப் புரிந்து கொண்டே மக்கள் அவரைத் தோற்கடித்தனர். ஆயினும் ஜனா திபதி மைத்திரிபால சிறிசேனவால் திருடர்களுடன் இணைந்து நிற்க முடியாது என சமூக நியாயத்துக்கான பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சங்கத்தின் ஒருங்கிணைப் பாளர் கலாநிதி தம் பர அமில தேரர் தெரிவித் துள்ளார்.

தூய்மையான அரசியல்வாதிகளை அடுத்த நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்ய வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாகும். மிகவும் மரியாதைக்குரியவர்களை அடுத்த பொதுத் தேர்தலில் நாடாளுமன்றத்திற்கு அனுப்பவே மக்கள் எதிர்பார்ப்புடன் உள்ளனர் எனவும் அவர் கூறி யுள்ளார்.

எத்தனோல் வியாபாரிகள், மோசடியாளர்கள், திருடர்கள், நாட்டின் வளங்களை கொள்ளையிட்டவர்கள் மற்றும் கொலைக் குற்றவாளிகள் அல்லாத நபர்களை நாடாளுமன்றத்திற்கு அனுப்பவே மக்கள் முடிவு செய்துள்ளனர்.

இவ்வாறான நிலையில், மஹிந்த ராஜபக்ஷவுக்கு தேர்தலில் போட்டியிட வாய்ப்புக் கொடுத்தால் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படும். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு திருடர்களுடன் அணி வகுக்க முடியாது.

இதனால், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவர் பதவியில் இருந்து விலகி, மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் செயற்பாடுகளில் இருந்து ஒதுங்கியிருக்குமாறு கோரிக்கை விடுக்க விரும்புகிறோம் என தம்பர அமில தேரர் குறிப்பிட்டுள்ளார். (ற)

---

### காணாமற்போதல்,

உறுதிமொழியை நிறைவேற்றக் கல்வி அமைச்சுக்கு முடியாமலுள்ளமைக்குச் சங்கம் எதிர்ப்புத் தெரிவிக்கிறது. முதலாம் ஆண்டுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளாது கல்விக் கொள்கைகளை உருவாக்குவது மதிப்பீட்டுச் செயல்களை முறைமைப்படுத்துவது, பாடத் திட்டங்களை விருத்தி செய்வது ஆகிய செயற்பாடுகள் சம்பந்தமாக முறையான செயற்பாடொன்றை ஒழுங்கு செய்யவேண்டும்.

உலகளாவிய ரீதியில் மனித உரிமைகள் விரிவடைந்தது உரிமைகள் உறுதியான நிலையை அடைந்துவரும் நிலையில் பாடசாலை மாணவர்களதும், ஆசிரியர்களதும் அதிபர்களினதும் சுயாதீனச் செயற்பாடுகளை மழுங்கடிக்கும் வகையில் கல்வி நிர்வாகம் காணப்படுவதனை உடனே மறுசீரமைக்க வேண்டும்.

இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பை மீறி பல்வேறு அளவுகளில் கொடுப்பனவுகள் வழங்குவதன் மூலம் அடிப்படைச் சம்பளமற்றுச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் ஆசிரிய உதவியாளர்களை ஆசிரியர் தரம் 3 11 இக்கு சேர்த்துக் கொள்ள வேண்டும். இந்த யாப்புக்கு மாறாக பாடசாலைகளில் ஆசிரியர்களை ஈடுபடுத்துவது கல்வியின் தன்மைக்குத் தடை ஏற்படுத்தும் நிலை ஏற்படுத்தப்பட்டிருப்பதோடு இந்தத் துறையில் இடம்பெறும் சகல நியமனங்களும் பிரமாணக் குறிப்புக்கு அமையச் செயற்படுத்தும்படி அரசுக்கு வலியுறுத்துகிறது.

புதிய ஆசிரியர் அதிபர்களின் சேவைகளின் யாப்பின்படி அநீதியான சேவை நிபந்தனைகளை உடன் நிறுத்தும்படியும் அதிலுள்ள பிரச்சினைகள் தொடர்பாக முடிவெடுப்பதற்கு தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடனான சமாலோசனைக் குழு ஒன்றை நியமிப்பதற்குத் திருத்தமொன்றைக் கொண்டுவரும்படியும் அதில் நிலுவைச் சம்பள உரிமை மறுத்திருப்பதனை நீக்கிவிடும்படியும் பழைய யாப்பு முறையில் நியமனம் பெற்றுக் கொண்ட ஆசிரியர்கள், அதிபர்கள் மீது திணிக்கப்பட்ட தடைகளை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கும்படியும் மாநாடு வலியுறுத்தியுள்ளது.

நீதிமன்றங்களில் கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரத்தைக் கடந்த அரசு இடக்கிய விதத்தில் இந்த அரசும் மாணவர் போராட்டங்களையும் வடக்கில் ஏற்படுத்திய ஆர்ப்பாட்டங்களையும் தடை உத் [illegible] றதனையும் வன்மையா[illegible] கிறது. மாணவர்களின் போரா[illegible]ங்[illegible] போது அவர் [illegible]க்[illegible] கது செய்வது [illegible] நிறுத்த வேண்டும். கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரம் நிலைநாட்டப்பட வேண்டும்.

பாடசாலைகளில் பாரதூரமான முறையில் ஊழல்கள் செய்வதற்கு இடமளித்துள்ள நபர்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதை தாமதப்படுத்தும் காரணத்தால் பாடசாலைகளுக்குள் ஊழல் செயற்பாடுகள் மேலெழுந்து காணப்படுவதுடன் முன்னைய ஆட்சியின் கீழ் கல்வி அமைச்சு பெரும் மோசடி நிலவரத்தை உண்டுபண்ணியிருந்ததுடன் அது தொடர்பாக எந்தவொரு பரிசீலனையும் மேற்கொள்ளாத நிலைமையில் மோசடிக்கு ஆதரவு நல்கியவர்களைத் தொடர்ந்தும் அந்தத்துறையில் வைத்திருப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதோடு அதற்கு எதிர்ப்பையும் தெரிவித்துக் கொள்கிறது.

கல்வி நோக்கத்தை வெற்றி கொள்ள சரியான கல்வித் தரிசனம் கொண்ட கல்வி மறுசீரமைப்புச் செய்து நாட்டுக்கு ஏற்றவகையில் கல்விச் செயற்பாடுகளை நிறுவ வேண்டும்.

கடந்த ஆட்சிக் காலத்தில் ஏற்பட்டிருந்த அடக்குமுறையான சூழ் நிலையினுள் கொலை செய்தல், கடத்தல் உள்ளிட்ட காரணங்களால் அரசியல் பாதுகாப்புக்காக வெளிநாடு சென்றுள்ள மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், ஊடகத் துறையினர் போன்றவர்களுக்குத் தேவையான நியாயங்கள் வழங்கப்படவேண்டும். நாட்டில் இடம்பெறும் மனித உரிமைகள் மீறல்களுக்கு எதிராகக் குரலெழுப்பிச் சர்வதேச அமைப்புகளும் பல்வேறு நாடுகளும் தற்போதுள்ள அரசுடன் இணைந்து செயற்படும் நிலையில் இடம் பெறுகின்ற அநீதிகளை மறைப்பதற்குப் பதிலாக அதனைப் பரிசீலனை செய்து இனிமேல் அவ்வாறான செயற்பாடுகள் நாட்டிலும் இடம்பெறாமல் இருக்க இந்த மாநாடு வலியுறுத்துகிறதுது என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-4)

### அண்ணா

கால ஓட்டத்தில் வடக்கின் பிரபல கைத்தொழில் அதிபர்களில் ஒருவராக உயர்ந்து உள்ளூர் உற்பத்திகளைப் பெருக்கிப் பல ருக்கு வேலைவாய்ப்பும் வழங் கியவர். மூத்த கைத்தொழி லாளர் 'மில்க் வைற்' அதிபர் க.கனகராசாவின் அரவணைப் பில் தன்னை உயர்த்தியவர்.

அண்ணா என்ற நாமத்துடன் பல உள்ளூர் உற்பத்திகளைத் தயாரித்து அத்துறையில் பெரும் வெற்றியும் கண்டவர்.

தமக்கு நீண்ட காலம் தெரிந்தவர்களைப் போலவே,சில நாள் பழகியவர்களையும் மதித்து செயற்பட்டு அரவணைத்துச் செயற்பட்டவர். அதே வகை சார்ந்து தமது ஊழியர்களையும் மதித்து பணி புரிந்தவர்.

அவரது இறுதிக் கிரியைகள் குறித்து பின்னர் அறிவிக்கப்படும் என்று குடும்பத்தினர் தெரிவித்தனர். (அ)

### வேட்பு மனுத்

மாவட்ட செயலகங்களிலுமுள்ள தெரிவத்தாட்சி அலுவலர்கள், இதனைக் கையேற்புச் செய்யவுள்ளனர்.

வடக்கு மாகாணத்தில், யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கிய யாழ்ப்பாணத் தேர்தல் தொகுதியின் வேட்பு மனுக்கள் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திலும், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னித் தேர்தல் தொகுதியின் வேட்பு மனுக்கள் வவுனியா மாவட்ட செயலகத்திலும் கையேற்புச் செய்யப்படவுள்ளன.

இன்று ஆரம்பமாகும் வேட்பு மனுக் கையேற்பு நடவடிக்கைகள், எதிர்வரும் 13 ஆம் திகதி நண்பகல் 12 மணி வரையில் இடம்பெறும். வேட்புமனுக்கள் அலுவலக நேரத்தில் மாத்திரமே, தேர்தல்கள் திணைக்களத்தினால் பொறுப்பேற்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (த-5)

### யாழ். மாவட்ட

செய்யப்படும் மாவட்ட செயலகங்களுக்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படவுள்ளது.

அதனடிப்படையில் யாழ்.மாவட்ட செயலகத்திற்கும் இன்று முதல் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படவுள்ளது. மேலும், தேர்தல் காலத்தில் இடம்பெறும் சம்பவங்கள் தொடர்பில் முறைப்பாடு செய்வதற்குரிய பொலிஸ் பிரிவு ஒன்றும், யாழ்.மாவட்ட செயலகத்தில் இன்று முதல் இயங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

### 11 கிராம

ருந்தனர். குறித்த காலப் பகுதிகளில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான செயற்பாடுகளை கிராம சேவையாளர்கள் முன்னெடுத்திருந்தனர் என்றும், அதனை அவர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர். அதன் காரணமாகவே அவர்கள் புனர்வாழ்வுக்காக, வவுனியா பூந்தோட்டம் புனர்வாழ்வு முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் தொடர்ந்தும் கிராம சேவையாளர்களாகப் பணியாற்ற வேண்டுமாயின், புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்ட சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் இளம் தாய் ஒருவர் உள்ளிட்ட 11 கிராம சேவையாளர்களும் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (த-5)

### வேட்பாளர்

கொள்ளவுள்ளனர்.

நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்கு வேட்பாளர்களைப் பகிர்ந்தளிப்பது தொடர்பில் இணக்கப்பாடுகள் இதுவரை எட்டப்படவில்லை.

யாழ்ப்பாணம், திருகோணமலை, அம்பாறை ஆகிய தேர்தல் மாவட்டங்களுக்கான வேட்பாளர் இட ஒதுக்கீடு குறித்து ஏற்கனவே முடிவாகியுள்ளபோதிலும், வன்னி மற்றும் மட்டக்களப்பு தேர்தல் மாவட்டங்களில் இணக்கப்பாடு ஏற்படவில்லை.

இந்நிலையில், இறுதி முடிவெடுப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உயர்பீடம் இன்று வவுனியாவில் ஒன்று கூடுகின்றது.

இந்தக் கூட்டத்தில் வேட்பாளர்களுக்கான இடஒதுக்கீடு குறித்து இணக்கப்பாடு எட்டப்படும் என்று தான் நம்புவதாக கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இன்றைய கூட்டத்தில் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் தொடர்பிலும், வடக்கு, கிழக்கில் தேர்தல் பிரசாரங்களை முன் னெடுப்பது குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்படும் என்று சம்பந்தன் மேலும் கூறினார். (த-சி)

### கடந்த முறை

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி உட்பட கூட்டமைப்பின் அனைத் துக் கட்சிகளும் பங்குபற்றியிருந்தன.

இந்தக் கலந்துரையாடல்களின் போது, கூட்டமைப்பின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தேர்தலில் போட்டி அனுமதி வழங்கப்படவுள்ளது. அத்துடன், வேட்புமனு வழங்கும் தீர்மானங்கள் அனைத்தும் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளன. கட்சிகளுக்கிடையில் வேட்புமனுக்களை எவ்வாறு பகிர்ந் தளிப்பது தொடர்பில் இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை. வேட்பு மனுத் தொடர்பில் ஏதும் மா ற்றம் ஏற்படுத்தப்படுமாயின், அதனை ஐக்கிய மக்கள் சுதந் திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த வால் மேற்கொள்ளப்படும் என் றும் அநுர பிரியதர்ஜன யாப்பா குறிப்பிட்டார். (த-சி)

### பஸ் டிப்போவில்

வங்கியில் வைப்பிலிடுவதே அவரின் பணி. ஆனால் அவர் மீது குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டிருந்த நிலையில் நேற்று அவர் கையும் மெய்யுமாகப் பிடிபட்டுள்ளார்.

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் நாட்டின் அனைத்துப் பகுதிக்குமான பிரதம செயலாற்று அதிகாரி உபாலி போகத்துடுவ, வட மாகாண பஸ் டிப்போவுக்கான பொதுமுகாமையாளராகப் பதில் கடமையில் உள்ளார். அவர் தலைமையிலான குழுவினரே நிதி கையாடல் செய்த அதிகாரியை நேற்றுக் கையும் மெய்யுமாகப் பிடித்தனர். குறித்த நபரைப் பிடித்த போது பஸ் டிப்போவுக்கு வர வேண்டிய பணமாக நேற்[illegible] சேர்ந்த சுமார் 76 ஆயிரம் ரூபா பணம் அங்கு இருக்கவில்லை. அதுபற்றிய விசாரணையின் பின்னர் அவரைப் பிடித்துப் பொலிஸில் ஒப்படைத்தனர் அதிகாரிகள்.

அவர் முல்லைத்தீவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். அவர் இன்று நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, முன்னர் வடமாகாணத்துக்குப் பொறுப்பாக இருந்தவர் மீதும் நிதி மோசடி தொடர்பில் பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. எனினும் அது தொடர்பி[illegible] இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது. (த-4)

### பிளவடைந்தது

தற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய இரு பிரதான கட்சிகளும் தவற விட்டுள்ளன.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் தொடர்ந்தும் கூட்டு சேர்ந்திருப்பதில் பயன் இல்லை. நாங்கள் எமது கட்சிக் கொள்கைகளைப் பிரதிபலிக்கும் வகையில் எதிர்காலத்தில் பெரும் சக்தியாக இருக்கவேண்டும். ஆகவே, நாங்கள் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தனிக்கட்சி அமைத்து தனித்துப் போட்டியிடவுள்ளோம்.

ஜாதிக ஹெல உறுமய என்ற பெயர் எக்ஸத் யஹபாலன ஜாதிக பெரமுன' (ஐக்கிய நல்லாட்சிக்கான தேசிய முன்னணி) என மாற்றப்பட்டுள்ளதுடன், கட்சி சின்னமாக சங்குக்குப் பதில் வைரம் வைக்கப்பட்டுள்ளது.

ஜனவரி 8ஆம் திகதி மக்கள் மைத்திரிபால சிறிசேனவுக்கு வழங்கிய ஆணைக்குப் பாதிப்பு ஏற்படும் வகையில் ஜாதிக ஹெல உறுமய செயற்படாது" – என வலியுறுத்திய அவர், அதனைப் பாதுகாக்கும் வகையில் எமது கட்சி செயற்படும் எனவும் தெரிவித்தார்.


முன்னாள் ஜனாதிபதிக்கு வேட்பு மனு வழங்க ஐ.ம.சு.மு. தீர்மானித்துள்ளமை அவர்களின் கட்சி விவகாரமாகும். நாங்கள் வெளி யேறியமைக்கும் இதற்கும் எந்தவித தொடர்பும் இல்லை" – என்றார். (த-சி)

# 20ஆவது அரசமைப்பு திருத்தம் நல்லிணக்கத்தை உருவாக்கும்

## மதங்களுக்கு இடையேயான சமாதான அமைப்பு அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 6
20ஆவது அரசமைப்புத் திருத்தம் பற்றிய ஜனநாயகக் கருத்தொற்றுமைப்பாட்டை உருவாக்கும் செயன்முறை தேசிய ஒற்றுமையையும் நல்லிணக்கத்தையும் உருவாக்குவதில் முக்கிய பங்களிப்பை வழங்கும் என மதங்களுக்கிடையேயான சமாதான அமைப்பு தெரிவித்துள்ளது.
இது தொடர்பில் விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.
மேலும் அந்த அறிக்கையில்– உள்நாட்டுப் போர் முடிவடைந்துள்ள சந்தர்ப்பத்தில் நாடு கட்டியெழுப்பப்படுகின்றது. இதன்போது மக்களிடையே பிரிவினைகளையும் பேதங்களையும் ஏற்படுத்தாமல் பாதிப்புற்ற உள்ளங்களை நலம்பெறச் செய்ய வேண்டும். அவர்களிடத்தில் நல்லிணக்கத்தையும் நல்லுறுவையும் ஏற்படுத்த ஆவன செய்ய வேண்டும். இவற்றைக் கருத்தில் கொண்டு விருப்பு வாக்கு தேர்தல் முறையை ரத்துச் செய்யுமாறு அனைத்து அரசியல் கட்சிகள், அமைப்புக்கள், அபேட்சகர், தேர்வுக் குழுக்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம்.
அத்துடன் போதைப்பொருள் கடத்தல்காரர், குற்றச் செயலில் ஈடுபடுவோர், மோசடிக்காரர், கற்பழிப்புக்களில் ஈடுபடுவோர் போன்றோருக்கு எந்தவொரு தேர்தலிலும் அபேட்சகராக போட்டியிட நியமனப் பத்திரம் வழங்குவதை தவிர்க்க வேண்டும். உத்தேச 20 ஆவது அரசமைப்புத் திருத்தமானது அரசியல் மற்றும் பிரதிநிதித்துவம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி – ஐக்கிய தேசியக் கட்சிகளுக்கிடையே மாத்திரம் கேந்திரமயமாகாத முறையில் சகல அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புக்களுக்கிடையே பிரிந்து செல்வதற்கான வழிகளை மேற் கொள்ள வேண்டும். இதன்மூலம் சகல மக்களதும் கௌரவம், சமத்துவம், ஒற்றுமை மற்றும் நேர்மை வளர்ந்து உறுதியான ஜனநாயகம் மலரும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (த–10)

# தென்மராட்சிப் பகுதியில் டெங்குத் தொற்று அதிகம்



தென்மராட்சி, ஜூலை 6
தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த மாதம் டெங்கினால் பீடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை திடீரென அதிகரித்துள்ளது. டெங்கினால் பீடிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் தென்னிலங்கைக்கு பல்வேறு தேவைகளுக்காகச் சென்று திரும்பியவர்களெனத் தெரிய வருகிறது.
கடந்த மே மாதம் பெய்த பெருமழையையடுத்து பிரதேசத்தைச் சேர்ந்த ஆறு பேர் டெங்கினால் பீடிக்கப்பட்டதாகவும், ஜூன் மாதத்தில் திடீரென 16 ஆக அதிகரித்துள்ளதாகவும், அது தொடர்பாக விசாரணை களை மேற்கொண்டபோது பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலா னோர் கொழும்பு சென்று திரும்பியதாகக் கண்டறியப்பட்டுள்ளது எனவும் கூறப்பட்டது.
இதேவேளை– கடந்த ஆறு மாதங்களில் (ஜனவரி–ஜூன் ) தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த 130 பேர் டெங்குகளினால் பீடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த–9)

# கட்டணக் கழிப்பறை அமைக்க கோரிக்கை

தென்மராட்சி, ஜூலை 6
கொடிகாமம் பஸ் நிலையத்தில் காணப்படும் பொது மலசலகூடத்தைக் கட்டணக் கழிப்பறையாக மாற்ற வேண்டுமெனப் பயணிகள் பலர் சாவகச்சேரி பிரதேச சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.
பிரதேச சபையினால் அண்மையில் கழிப்பறை புனரமைக்கப்பட்ட போதிலும் போதிய பராமரிப்பு இல்லாததால் அதனைச் சிலர் ஒழுங்காகப் பயன்படுத்தாமல் துஷ்பிரயோகம் செய்வதால் பஸ் நிலையம் மற்றும் அயலில் உள்ள வர்த்தக நிலையங்களில் நிற்க முடியாத அளவுக்கு துர்நாற்றம் வீசுகிறது.
புனரமைப்பின்போது மூடி வேலி அடைக்கப்பட்டதால் சிலர் கழிப்பறைக்குள் செல்லாது வெளியேயே இயற்கைக் கடனைக் கழித்து அசிங்கப்படுத்துகின்றனர்.
இதனைத் தடுக்கக் கழிப்பறையைப் ப்ராமரிக்க ஒருவரை நியமிப்பதுடன் கட்டணக் கழிப்பறையாக மாற்றுமாறும் பிரதேச சபைத் தலைவரைக் கோரியுள்ளதாகத் தெரிவித்தனர். (த–9)

# மாணவர்கள் நாடாளுமன்ற அங்குரார்ப்பணம்

தென்மராட்சி, ஜலை 6
கச்சாய் அ.த.க.பாடசாலை மாணவர் நாடாளுமன்ற அங்குரார்ப்பண நிகழ்வும் பிரதமர், அமைச்சர்கள், சபாநாயகர், உறுப்பினர்கள் பதவியேற்பும் நாடாளுமன்ற கன்னி அமர்வும் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை பி.ப. 1.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெறும்.
பாடசாலை அதிபர் கா.குணசிங்கம் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வட மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தனும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய கல்வி அபிவிருத்திப் பிரிவு பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தர சிவமும், கௌரவ விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய சேவைக் கால ஆசிரிய ஆலோசகர் வே.க.சந்திரகுமாரும் கலந்துகொள்வர். (த–9)


# சுதந்திரக் கூட்டிலிருந்து சுதந்திரக் கட்சி விலகும்?

கொழும்பு, ஜூலை 6
ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியில் இருந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சி விலகுவதற்கு ஆயத்தமாவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவும், அவர் சார்பானவர்களும் சூழ்ச்சியான முறையில் வேட்பு மனு பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளில் இறங்கியுள்ளமையே இதற் கான காரணம் எனக் கருதப்படுகிறது.
சுதந்திரக் கூட்டணியில் இருந்து விலகித் தனியாகப் போட்டியிடுவதில் சுதந்திரக்கட்சி அவதானம் செலுத்தியுள்ளது.
இந்நிலையில் முன்னாள் ஜனாதிபதிக்கு வேட்பு மனு வழங்கப் பட்டதாகச் சுதந்திரக் கூட்டணியின் பொதுச் செயலாளர் அறிக்கை விட்டபோதிலும் தான் அதற்கான அனுமதியை வழங்கவில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார். (த)

# 14 சுயேச்சைக் குழுக்கள் கட்டுப் பணம் செலுத்தின

கொழும்பு, ஜூலை 6
எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கு இதுவரை 14 சுயேச்சைக் குழுக்கள் தமது கட்டுப் பணத்தைச் செலுத்தியுள்ளன எனத் தேர்தல் செயலகம் அறி வித்துள்ளது.
இவ்வகையில் மட்டக்களப்பில் மூன்று குழுக்களும்,கம்பஹாவில் இரண்டு குழுக்களும், களுத்துறையில் இரண்டு குழுக்களும், நுவரெலியா,திகா மடுல்ல, புத்தளம், அநுராதபுரம், கொழும்பு, திருகோணமலை, இரத்தினபுரி ஆகிய இடங்களில் தலா ஒரு குழுவும் கட்டுப் பணம் செலுத்தியுள்ளன.
குறிப்பாகத் தமிழரைத் தலைமை வேட்பாளராகக் கொண்ட 3 குழுக்களும் முஸ்லிமை தலைமை வேட்பாளராகக் கொண்ட 2 குழுக்களும் தேரர் ஒருவரை தலைமை வேட்பாளராகக் கொண்ட ஒரு குழுவும் ஏனைய குழுக்கள் சிங்களவரை தலைமை வேட்பாளராகவும் கொண்டுள்ளன. (த)

# நாடாளுமன்று சென்ற மாணவர்கள்



தென்மராட்சி, ஜூலை 6
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தெரிவு செய்யப்பட்ட மாணவர் நாடாளுமன்ற அமைச்சர்கள் 150 பேர் அண்மையில் கொழும்பு நாடாளுமன்றுக்குச் சென்று நாடாளுமன்ற நடவடிக்கைகளைப் பார்வையிட்டனர். அத்துடன் அலரி மாளிகையையும் பார்வையிட்டுள்ளனர்.
யாழ்.மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் மகளிர் விவகார பிரதி அமைச்சருமான திருமதி விஜயகலா மகேஸ்வரனின் ஏற்பாட்டில் மாணவர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றையும் அலரி மாளிகையையும் பார்வையிட்டனர்.
மாணவர் நாடாளுமன்ற அமைச்சர்களாகத் தெரிவு செய்யப்பட்ட 150 மாணவர்களுடன் வலய அதிகாரிகள், பாடசாலைகளின் பொறுப்பாசிரியர்கள் ஆகியோரும் சென்றிருந்தனர். (த–9)

# நடிகர் கொலை தொடர்பில் தேடப்பட்டவர்கள் கைது

கொழும்பு, ஜூலை 6
நடிகர் இந்திக்க ரட்னாயக்கவின் கொலை தொடர்பாக தேடப்பட்டு வந்த இருவர் பதுளை சுற்றுலா விடுதி யொன்றிலிருந்து பதுளை பொலிஸார் கைது செய்துள்ளனர்.
இரவு களியாட்ட விடுதிகளில் நடனமாடும் 25 வயது நிரம்பிய கண்டியைச் சேர்ந்த இரேசா திலினி அமரசேக்கர என்ற இளம் பெண்ணும் பதுளைப் பகுதியின் உடுவரை என்ற இடத்தைச் சேர்ந்த 35 வயது நிரம்பிய நலின சம்பத் என்ற நபருமே கைது செய்யப்பட்டிருப்பவர்களாவர்.
இந்திக்க ரட்னாயக்க என்ற நாடக நடிகர் மகரகம உல்லாச விடுதியொன்றில் கடந்த வாரம் கொலை செய்யப்பட்டிருந்தார். இது தொடர்பாக இருவர் தேடப்பட்டு வந்தனர்.
கைது செய்யப்பட்டவர்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்ட போது இரேசா திலினி அமரசேக்கர என்ற இளம் பெண் கொழும்பு களியாட்ட விடுதியில் நடனமாடுபவரென்றும் கைது செய்யப்பட்ட நபர் பல்வேறு குற்றச் செயல்களின் பிரகாரம் 12 பிடியாணை பிறப்பிக்கப்பட்டு பொலிஸாரால் தேடப்பட்டு வந்தவரென்றும் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ற)

# பொலிஸாருக்கு இடையூறு; 21 பேருக்கு விளக்கமறியல்

தென்மராட்சி, ஜூலை 6
கொடிகாமம் தவசிகுளம் பகுதியில் பொலிஸாரைக் கடமை செய்ய விடாமல் தடுத்த 21 பேரின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. தவசிகுளம் பகுதியில் கசிப்பு விற்பனை தொடர்பாக பார்வையிடச் சென்ற பொலிஸாரை கடமை செய்ய விடாமல் தடுத்ததுடன் அவர்கள் மீது கற்களை வீசித் தாக்கியதில் பொலிஸ் உத்தியோகத்தர் காயமடைந்தார். இந்தச் சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலி ஸார் 10 பெண்கள் உட்பட 21 பேரைக் கட்டம் கட்டமாக கைது செய்து சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்திய போது வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.
இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது பிணை மனுக்கள் சட்டத்தரணிகளால் சமர்ப்பிக்கப்பட் போதிலும் அவற்றை நிராகரித்த நீதிவான் 21 பேரையும் தொடர்ந்து எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (த)

# யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டத் தொடர்
# சம்பியனானது யாழ்.இந்து






யாழ்ப்பாணம், ஜூலை 6
யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் கனிஷ்ட பிரிவு இருபாலருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரின் 19 வயதுப்பிரிவு ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ். இந்துக்கல்லூரி வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது.

நேற்று ஞயிற்றுக்கிழமை யாழ். மத்தியகல்லூரியின் கூடைப் பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் யாழ்.இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.மத்திய கல்லூரி அணி மோதிக் கொண்டது. ஆட்டத்தின் முதல் சுற்றின் முடிவில் யாழ். இந்துக்கல்லூரி 15புள்ளிகளையும், யாழ்.மத்திய கல்லூரி அணி 10 புள்ளிகளையும் பெற ஆரம்பத்திலேயே மத்தியின் ஆதிக்கம் மேலோங்க ஆரம்பித்தது. இரண்டாவது சுற்றிலும் கணிசமான ஆதிக்கம் செலுத்தி தமது இருப்பை பலப்படுத்த தவறவில்லை இந்துவின் மைந்தர்கள். இதனையடுத்து முதல் பாதியின் முடிவில் யாழ். இந்துக்கல்லூரி அணி 28 புள்ளிகளையும், யாழ்.மத்திய கல்லூரி அணி 22 புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

மூன்றாம் சுற்றில் தமது அதிரடி ஆட்டத்தினை வெளிப்படுத்திய யாழ்.இந்துக்கல்லூரி அணியினர் 13 புள்ளிகள் வித்தியாசத்தில் (24:11) அச்சுற்றை கைப்பற்றி அசத்த இந்துவின் வெற்றி கிட்டத்தட்ட உறுதியானது. இந்துவின் மைந்தர்களது வேட்டை நான்காவது சுற்றிலும் தொடரப்பட நான்கு சுற்றுக்களிலும் முழுமையான ஆதிக்கம் செலுத்தி 72:43 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது யாழ்.இந்துக்கல்லூரி. (ம-23)

## இன்றைய மோதல்கள்



யாழ்ப்பாணம், ஜூலை 6
வளர்மதி சனசமூக நிலையத்தின் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வளர்மதி விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடந்தும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்று திங்கட்கிழமை கழக மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

இதில் இரவு 7மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாயன்மார்கட்டு பாரதி அணியை எதிர்த்து மீசாலை சீ[illegible] அணி மோதவுள்ளது. இரவு 7.[illegible] மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மறவன் புலவு அம்பிகை அணியை எதிர்த்து மட்டுவில் மோகனதாஸ் அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய அணியை எதிர்த்து அச்சுவேலி ஸ்ரார் அணி மோதவுள்ளது. (ம-23)

## மானிப்பாய் ஏஞ்சல் சம்பியன்



யாழ்ப்பாணம், ஜூலை 6
யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் கனிஷ்ட பிரிவு இருபாலருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரின் 13வயதுப்பிரிவு பெண்களுக்கான இறுதியாட்டம் நேற்று வெள்ளிக்கிழமை மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலையின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்றது.

மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணியை எதிர்த்து உடுவில் மகளிர் கல்லூரி அணி மோதிக் கொண்ட இந்த ஆட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணி 28:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது.(ம-23)

## யாழ். உதைபந்தாட்ட லீக்கின் முடிவுகள்

யாழ்ப்பாணம் ஜூலை 6
யாழ்.உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் 'பி' பிரிவு அணிகளுக்கு இடையிலான லீக் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. அதில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றிபெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு.

முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் பொற்பதி அணியை எதிர்த்து உதயசூரியன் அணி மோதிக் கொண்டது. இதில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா ஒரு கோலினைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையானது தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் சென்.றொக்ஸ் அணியை எதிர்த்து யாழ்.ஜக்கிய அணி மோதிக் கொண்டது. இதில் யாழ்.ஜக்கிய அணி 2:1என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

## தடகளப்போட்டிகள் நாளை

கிளிநொச்சி, ஜூலை 6
கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான தடகளப் போட்டிகள் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு முழங்காவில் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன.

போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகமும் சிறப்பு விருந்தினராக வட மாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் எஸ்.எம்.ராஜா ரணசிங்கவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-9)

## இராணுவ அணி எதிர் இந்து இளைஞர் அணி
# இறுதியில் பலப்பரீட்சை



யாழ்ப்பாணம் ஜூலை 6
அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 96ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வடக்கு கிழக்கு மாகாணங்கள் ரீதியாக நடத்திய கரப்பந்தாட்டத் தொடரின் அரையிறுதியாட்டங்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெற்றன.

இதில் முதலாவதாக இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அனுராதபுரம் இராணுவ அணி மோதிக் கொண்டது. 5 செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் அனுராதபுரம் இராணுவ அணி 25:17, 25:19, 25:19 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் இளவாலை மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. 5 செற்களைக் கொண்ட இந்த அரையிறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணியினர் 25:17, 25:22, 25:15 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. (ம-23)

## போராடி வெற்றிபெற்று
### கிண்ணத்தைக் கைப்பற்றியது ஏஞ்சல்



யாழ்ப்பாணம், ஜூலை 6
யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் கனிஸ்ட பிரிவு இருபாலருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரின் 11 வயதுப்பிரிவு ஆண்களுக்கான இறுதியாட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ். மத்தியகல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்றது.


சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணி மோதிக் கொண்ட இந்த ஆட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணி 20:19 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் ஆனது. (ம-23)

## விடத்தல் தீவு ஐக்கிய அணி அபாரம்

வடமாகாண உதைபந்தாட்ட அபிவிருத்திப் பேரவையால் நடத்தப்படும் மொபிட்ரல் வெற்றிக் கிண்ணத்திற்கான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டம் ஒன்று நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை 3.30 மணிக்குமுழங்காவில்பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து விடத்தல் தீவு ஐக்கிய அணி மோதிக் கொண்ட இந்த ஆட்டத்தில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா ஒரு கோலினைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. சமநிலை தவிர்ப்பு உதைகளில் விடத்தல் தீவு ஐக்கிய அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

## பல்க்நர் கைது



சிறையில் பல்க்நர்

ஆஸ்திரேலிய அணியின் சகல துறை வீரரான ஜேம்ஸ் பல்க்நர் மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றத்துக்காக இங்கிலாந்தின் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இங்கிலாந்தில் உள்ள கழகங்களுக்கு இடையிலான ரி–20 தொடரில் லங்காஷையர் அணிக்காக பல்க்நர் விளையாடி வருகிறார். அவர் அங்கு குடிபோதையில் வாகனம் ஓட்டியதாக குற்றச்சாட்டு எழுந்தது. அவரது இரத்தம் 2 முறை பரிசோதிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் குடிபோதையில் வாகனம் ஓட்டியதாக பல்க்நரை மான்செஸ்டர் பொலிஸார் கைது செய்துள்ளனர். (ம)

# பங்களாதேஷை பந்தாடியது தென்னாபிரிக்கா

பங்களாதேஷ் – தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான இரண்டு ரி–20 ஆட்டங்களைக்கொண்ட தொடரின் முதலாவது ஆட்டத்தில் தென்னாபிரிக்கா 56 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று 1–0 என்ற அடிப்படையில் தொடரில் முன்னிலை வகிக்கிறது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்கா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானிக்க களத்தில் வில்லியர்ஸ் மற்றும் ஹொாக். பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட வில்லியர்ஸ் முதல் பந்துப்பரிமாற்றத்தை முழுவதுமாக வீணடித்து இரண்டே ஓட்டங்களுடன் வெளியேறி ஏமாற்றம் கொடுத்தார். சிக்சருடன் இன்னிங்ஸை ஆரம்பித்த ஹொாக் பதின்மத்துடன் பவிலியன் திரும்ப தென்னாபிரிக்காவின் சரிவு ஆரம்பமானது. அணியின் ஓட்டம் 31ஆக இருந்தபொழுது ஆரம்ப வீரர்கள் இருவருமே களத்தில் இல்லை. ஒரு முனையில் நிதானித்து நின்று பிளாஸிஸ் வேடிக்கை காட்டினாலும் மறுமுனை பலவீனமானதாகவே அமைந்திருந்தது. அடுத்தடுத்த ஆட்டமிழப்பு பிளாஸிஸை கட்டிப்போட தென்னாபிரிக்காவின் ஓட்ட வேகம் சுமாராகவே சென்று கொண்டிருந்தது. இறுதிக்கட்ட நம்பிக்கையுடன் களத்தில் ரொஸ்சொவ். பிளாஸிஸ், ரொஸ்சொவ் இருவருமாக இணைந்து பிரித்து மேய்ந்தனர். அரைச்சதத்தை கடந்து அசத்தினார் பிளாஸிஸ். முன்வரிசை வீரர்கள் செய்த தவறுகள் ரொஸ்சொவ்வின் அதிரடியில் ஈடுசெய்யப்பட முடிவில் தென்னாபிரிக்கா 148–4.

120 பந்துகளில் 149 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி. பாகிஸ்தான், இந்தியா என்று இருபெரும் நாடுகளை பந்தாடிய போர்மில் உள்ள பங்களாதேஷில் இந்த இலக்கை அடைவதென்பது ஒரு விடயமே இல்லை. ஆனால் தென்னாபிரிக்காவின் பந்துவீச்சும் களத்தடுப்பும் பெரும் சவாலானது. எனவே கேள்விக்குறியான வெற்றிக்கனவுடன் களத்தில் இக்பால் மற்றும் சர்கர். தென்னாபிரிக்காவைப்போலவே முதல் பந்துப்பரிமாற்றத்தின் இறுதிப் பந்தில் பங்களாதேஷின் முதல் இலக்குச் சரிக்கப்பட்டது. அடுத்த பந்துப்பரிமாற்றத்தில் சர்கரும் ஆட்டமிழக்க பங்களாதேஷ் 13–2. ஷகிப் அல் ஹசனும் ரஹிமும் சிறிது நேரம் நிலைத்து நின்று காட்டிய போராட்டம் தென்னாபிரிக்காவின் பந்துவீச்சில் எடுபடுவதாக தெரியவில்லை. இணைப்பாட்டத்தை உடைத்து ரஹிமை வெளியேற்றினார் டுமினி. ரஹ்மான் 4, ஹொசைன் 1. பத்து பந்துப்பரிமாற்றங்களின் முடிவில் பங்களாதேஷ் 56–5. பின்வரிசை வீரர்கள் எவரும் நூறு என்ற சராசரியை எட்டவே இல்லை. பதின்ம ஓட்டங்களுடன் ஒருவர் பின்னால் ஒருவராக பவிலியன் நோக்கி படையெடுக்க 96 ஓட்டங்களில் சுருண்டு 56 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது பங்களாதேஷ். (ம)



# இலங்கை வலுவான நிலையில்



இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்று டெஸ்ட் ஆட்டங்களைக்கொண்ட டெஸ்ட் தொடரின் மூன்றாவதும் இறுதியானதுமான .ஆட்டத்தின் மூன்றாம் நாள் முடிவில் இலங்கை இரண்டாவது இன்னிங்ஸிற்காக 228–5 என்ற நிலையில் உள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மிஷ்பா முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்ய முதல் இன்னிங்ஸிற்காக இலங்கை 278 ஓட்டங்களில் சுருண்டது.


பந்துவீச்சில் பாகிஸ்தான் சார்பாக சாஜ்5 இலக்குகளையும் ரஹற் அலி 3 இலக்குகளையும் அஷார் அலி 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

279 ஓட்டங்களைப் பெற்றால் முன்னிலை பெற்றுவிடலாம் என்ற நிலையில் பதிலுக்கு தமது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த பாகிஸ்தான் இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் பாகிஸ்தான் 209–9 என்ற நிலையில் இருந்தது. தொடர்ந்து மூன்றாம் நாளுக்காக களத்தில் அஹமட் 72 ஓட்டங்களுடனும் இம்ரான்கான் ஓட்டமெதனையும் பெறாத நிலைமையிலும் களமிறங்கினார்கள். இம்ரானுக்கு வாய்ப்புக்களை கொடுக்காமல் தானே பெரும்பாலான பந்துகளை எதிர்கொண்டு அணியை பலப்படுத்தும் முனைப்பில் தீவிரமாக ஈடுபட்டார் அஹமட். போராட்டம் நீண்ட நேரம் நீடிக்கவில்லை. இம்ரானை போல்ட்டாக்கி பாகிஸ்தானின் ஆட்டத்தை 215 ஓட்டங்களுடன் முடிவுக்கு கொண்டு வந்தார் கௌசல்.

பந்துவீச்சில் இலங்கை சார்பாக பிரசாத், பிரதீப், கௌசல் மூவரும் தலா மூன்று இலக்குகளைக் கைப்பற்றினர்.

63 ஓட்டங்கள் முன்னிலை பெற்றிருந்த நிலையில் மேற்கொண்டு இரண்டாவது இன்னிங்ஸிற்காக களத்தில் கருணாரத்னயுடன் சில்வா. இருவருமே பத்து ஓட்டங்களைத் தாண்டவில்லை. திரிமன்னேயை டக்குடன் பவிலியனுக்கு அனுப்பினார் ரஹற் அலி. தற்பொழுது இலங்கை 35–3. ஒருமுனையில் நிதானித்துக் கொண்டிருந்த தரங்கவுடன் இணைந்தார் மத்தியூஸ். மத்தியூஸ் நிதானித்தாலும் முதல் இன்னிங்ஸைப்போல் அரைச்சதத்தை தவறவிட்டு ஆட்டமிழந்தார் தரங்க. முபாரக் சுமாரான பங்களிப்பை வழங்க சரிவில் இருந்து படிப்படியாக மீண்டது இலங்கை. இணைப்பாட்டமாக 81 ஓட்டங்களை பகிர்ந்திருந்த வேளையில் முபாரக்கின் ஆட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட இலங்கை 161–5. தொடர்ந்தும் நிதானித்துக் கொண்டிருந்தார் மத்தியூஸ். நிலைமையின் தீவிரத்தை உணர்ந்து நிதானிக்கத் தொடங்கினார் சந்திமால். ஆறாவது இலக்குக்காக தவமிருந்தார்கள் பாகிஸ்தான் பந்துவீச்சாளர்கள். இணைப்பாட்டத்தை அசைக்கக்கூட முடியவில்லை. அரைச்சதம் கடந்து அசத்தினார் மத்தியூஸ். சந்திமாலும் நிதானிக்க நேற்றைய ஆட்டநேர முடிவில் இலங்கை 228–5 என்ற நிலைமையில் உள்ளது. மத்தியூஸ் 77 ஓட்டங்களுடனும் சந்திமால் 39 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் உள்ளனர். (ம)

# நடால் அதிர்ச்சித் தோல்வி



சர்வதேச ரென்னிஸ் தொடர்களில் மிகவும் உயரிய தொடரான விம்பிள்டன் ரென்னிஸ்தொடர் தற்பொழுது இங்கிலாந்தில் நடைபெற்று வருகிறது. இந்தத்தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் உலகின் முன்னணி வீரர்களில் ஒருவரான ரபெல் நடால் அதிர்ச்சித் தோல்வியடைந்து வெளியேறியுள்ளார்.

ஆண்கள் ஒற்றையர் இரண்டாவது சுற்றில், 2 முறை விம்பிள்டன் தொடரைக் கைப்பற்றியவரும் உலகின் முன்னணி வீரர்களில் ஒருவருமான ஸ்பெயினின் ரபேல் நடால், தரவரிசையில் 102 ஆவது இடத்தில் உள்ள ஜெர்மனி வீரர் டஸ்டின் பிரவுனை எதிர்கொண்டார். இதில் ரபேல் நடால் 5–7, 6–3, 4–6, 4–6 என்ற செற்களில் டஸ்டின் பிரவுனிடம் அதிர்ச்சி தோல்வி அடைந்து தொடரில் இருந்து வெளியேறினார்.

இந்த வெற்றி குறித்து பிரவுன் தெரிவித்ததாவது இந்த ஆட்டத்தில் தோல்வி அடைந்தாலும் என்னிடம் இழப்பதற்கு எதுவுமில்லை என்பதால் தைரியமாக விளையாடினேன். ஆனால் நடால் தோல்வியடைந்தால் அவரிடம் இழப்பதுக்கு பல உள்ளன. இந்த பதட்டமே அவரை விளையாட விடாமல் செய்தது. அவரால் சீராக விளையாட முடியவில்லை. மொத்தத்தில் நடாலின் தோல்வியை என்னாலேயே நம்பமுடியவில்லை என்றார். (ம)

# ஆஸி. போராடி வெற்றிபெறும்

இங்கிலாந்து அணியின் முன்னணி வீரராக விளங்கிய கெவின் பீற்றர்சன், இந்த ஆஷஸ் தொடரை ஆஸ்திரேலியா கைப்பற்ற அதிக வாய்ப்பு உள்ளது என்று தெரிவித் துள்ள அதேநேரம் அந்த வெற்றிக்கு இங்கிலாந்துக்கு எதிராக ஆஸ்திரேலியா கடுமையாக போராட வேண்டியதிருக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.


கரீபியின் பிரிமியர் லீக் தொடரில் சென்.லூட்ஸ் செளக்ஸ் அணிக்காக விளையாடி வரும் பீற்றர்சன் இது பற்றி மேலும் தெரிவித்ததாவது இங்கிலாந்து – ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான ஆஷஸ் தொடர் கடும் சவாலாக இருக்கும் என்று நினைக்கிறார்கள். ஆனால், இறுதியில் ஆஸ்திரேலியாதான் கிண்ணத்தைக் கைப்பற்றும். ஆஷஸ் தொடர் 2–1 என்ற வகையில் செல்லும். ஆனால், இங்கிலாந்து சூழ்நிலை இங்கிலாந்துக்கு உதவியாக இருக்கும். அதனால், ஆஸ்திரேலியா கடுமையாக போராட வேண்டியிருக்கும் என்றார். (ம)

## விடைபெற்றார் ஹாரிஸ்

சர்வதேச ஆட்டங்களில் இருந்து ஓய்வுபெறுவதாக ஆஸ்திரேலிய வேகப்பந்துவீச்சாளர் ரியான் ஹாரிஸ் அறிவித்துள்ளார்.

உட்திரும்பல், வெளித்திரும்பல் பந்துகளை வீசுவதில் சிறந்தவரான ரியான் ஹாரிஸ் ஆஷஸ் தொடருக்கான ஆஸ்திரேலிய அணியில் இடம்பெற்றிருந்தார். கடந்த சில நாட்களுக்கு முன் பயிற்சியாட்டமொன்றில் விளையாடியபோது அவரது முழங்காலில் காயம் ஏற்பட்டது. இதனால் ஆஷஸ் தொடரில் இருந்து நீக்கப்பட்டார், இதனைத் தொடர்ந்து தனது குடும்பத்தினரிடம் கலந்தாலோசித்த ரியான், இதுதான் ஓய்வு பெறுவதற்கு சரியான தருணம் என்று தெரிவித்து ஓய்வு முடிவை அறிவித்துள்ளார். (ம)





## ஆர்ஜென்ரினாவை பந்தாடியது சிலி 99 ஆண்டுகளில் முதல் தடவையாக கிண்ணத்தைக் கைப்பற்றி அசத்தல்

தென் அமெரிக்க கால்பந்து தொடரின் இறுதியாட்டத்தில் ஆர்ஜென்ரினாவை வீழ்த்தி முதல்முதலாக கிண்ணத்தைக் கைப்பற்றி வரலாற்றுச் சாதனையை படைத்துள்ளது சிலி.

99 ஆண்டுகால வரலாற்றினைக் கொண்ட தென் அமெரிக்க கால்பந்து தொடரில் (கோபா – அமெரிக்கா தொடர் என்றும் அழைக்கப்படுவதுண்டு) ஆர்ஜென்ரினா அணி இதுவரை 14 முறை கிண்ணம் வென்றுள்ளது. ஆனால் சிலி ஒரு தடவையேனும் கிண்ணத்தைக் கைப்பற்றவில்லை. நான்கு தடவைகள் இறுதிக்கு முன்னேறியதே சிறந்த பெறுபேறாகும்.

இந்த நிலையில் கிண்ணக் கனவுடன் இரண்டு அணிகளும் களமிறங்கின. ஆர்ஜென்ரினா பலமிக்க அணியாக காணப்பட்ட போதிலும் சிலியில் ஆட்டம் நடைபெற்றதனால் சொந்த மண்ணில் ரசிகர்களின் ஆதிக்கம் அந்த அணிக்கு மிகையாகவே இருந்தது. இதனால் இறுதிவரை சளைக்காமல் ஆர்ஜென்ரினாவுக்கு ஈடுகொடுக்க ஆட்டத்தின் முடிவுவரை எந்த அணியாலும் முதல் கோலைப் பதிவுசெய்ய முடியவில்லை. கொடுக்கப்பட்ட சமநிலைத் தவிர்ப்பு உதைகளை கச்சிதமாகப் பயன்படுத்திய சிலி ஆர்ஜென்டினாவை 4–1 என்ற கணக்கில் வீழ்த்தி முதல் முறையாக கிண்ணத்தைக் கைப்பற்றியது. (ம)


# கனவான் தன்மையில் கரைகண்ட கிறிஸ்ரியானோ றொனால்டோ

சுனாமியில் உறவுகளை இழந்து அநாதையாக நின்ற சிறுவனை உதைபந்தாட்ட வீரனாக்கி அழகு பார்த்துள்ளார் போர்த்துக்கல் அணியின் தலைவரும் நட்சத்திர வீரருமான றொனால்டோ.

கடந்த 2004ஆம் ஆண்டு தாக்கிய சுனாமியில் உலகம் முழுவதும் சுமார் 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட




சிறு வயதில் மட்டுனிஸ்




தற்பொழுது மட்டுனிஸ்

மக்கள் பரிதாபமாக உயிரிழந்தனர். இதில் சுனாமியில் அதிக அழிவுகளை சந்தித்த இந்தோனேஷியாவின் ஏக் கடற்கரை பகுதியில் 21 நாட்களுக்கு பிறகு மட்டுனிஸ் என்ற 3 வயது சிறு வன் அதிர்ஷ்ட வசமாக உயிருடன் மீட்கப்பட்டான். இச்சிறு வனை மீட்க அவன் அணிந் திருந்த போர்த்துக்கல் அணி வீரர் மனுவேல் ரய் கோஸ்ட் டாவின் பெயர்பொறிக்கப்பட்ட உடைதான் காரணமாக இருந் தது. அந்த உடையுடன் கடற்கடை ஓரமாக மண்ணில் புதை யுண்டு கிடந்த நிலையிலேயே மட்டுனிஸ் உயிருடன் மீட்கப்பட்டான்.

இதன் பிறகு ஒரு ஊடகத்திற்கு அவன் கொடுத்த நேர்காணலில் தனது குடும்பத்தினரை சந்திப்பதும் கால்பந்து வீரராவதும் தான் தனது கனவு என்று கூறினான். அவனது உறவினர்கள் யாரும் உயிருடன் இல்லை. ஆனால் கால்பந்து வீரராகும் அவனது ஆசையை அறிந்த றொனால்டோ அவனது கனவை நிறைவேற்றும் பணி யில் களமிறங் கினார். போர்த்துக்கலில் இருந்தவாறே மட்டுனிஸிக்கு இந்தோனேஷியாவில் தேவையான அனைத்து உதவி களையும் பார்த்து பார்த்து செய்தார். மட்டுமல்லாது இந்தோனேஷியா செல்லும் போதெல்லாம் றொனால்டோ மட்டுனிஸை சென்று பார்த்து அவனது வளர்ச்சியில் தனி அக்கறை காட்டி வந்தார். தற்பொழுது 17 வயது இளைஞனான மட்டுனிஸ், போர்த்துக்கல் நாட்டின் புகழ்பெற்ற ஸ்போர்ட்டிங் லிஸ்பன் அணிக்காக விளையாட ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். இதே ஸ்போர்ட்டிங் லிஸ்பன் அணியில்தான் றொனால்டோவும் முதன்முதலில் விளையாட ஒப்பந்தம் செய்யப்பட்டார். என்பது குறிப்பிடத்தக்கது. (ம)



## ஒன்பது ஆண்டுகளாக முதலிடம் தவிர்க்க முடியாத ஆதிக்கத்தில் நிகோல்

சர்வதேச ஸ்குவாஷ் ஆட்டத்தில் அசைக்க முடியாத சக்தியாக மலேஷிய வீராங்கனை நிகோல் டேவிட் திகழ்ந்து வருகிறார். 8 முறை உலகக் கிண்ணத்தினை ருசித்திருக்கும் அவர் இந்த வாரத்துடன் உலக தரவரி சையில் தொடர்ந்து 9ஆவது ஆண்டாக தரப்படுத்தலில் முதலிடத்தில் அடியெடுத்து வைக்கிறார்.

தரப்படுத்தலில் முதலிடம் தொடர்பாக நிகோல் தெரிவித்ததாவது 9 ஆண்டுகளாக தரப்படுத்தலில் முதலிடத்தில் நீடிப்பது மகிழ்ச்சி. இது மிகவும் சிறப்பு வாய்ந்தது. தொடர்ந்து சாதிக்க விரும்புகிறேன். இன்னும் சில ஆண்டுகள் தொடர்ச்சியாக முதலிடத்தில் நீடித்து தகர்க்க முடியாத சாதனையை படைக்க வேண்டும் என்பதே எனது நோக்கம் என்றார். ஆனா லும் தற்பொழுது அவரது அரியணையை எகிப்தின் ரனீம் எல் வெலிலி நெருங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (ம)

## மணிக்கு 236 கி.மீ. வேகம் ஊதித் தள்ளினார் பெடரர்

விம்பிள்டன் ரென்னிஸில் 2ஆவது அதிவேக சர்வை அடித்து ஆஸ்திரேலிய வீரர் சாம் குரோத் சாதனை புரிந்துள்ளார். ஆனாலும் அவரால் பெடரரின் வெற்றியைத் தடுக்க முடியவில்லை.

சர்வதேச ரென்னிஸ் தொடர்களில் மிகவும் உயரிய தொடரான விம்பிள்டன் ரென்னிஸ்தொடர் தற்பொழுது இங்கிலாந்தில் நடைபெற்று வருகிறது. இந்தத்தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவின் 3ஆவது சுற்று ஆட்டத்தில் ஆஸ்திரேலிய வீரர் சாம் குரோத், பெடரருக்கு எதிராக ஆடினார்.

இந்த ஆட்டத்தின் முதல் செற்றில் ஆஸ்திரேலிய வீரர் சாம் குரோத் அடித்த பந்து மணிக்கு 236 கி.மீ. வேக்த்துடன் சென்றது. இது விம்பிள்டன் டென்னிஸில் 2ஆவது விளாசலாக பதிவாகியுள்ளது.

சாம் குரோத் இவ்வளவு ஆக்ரோஷம் காட்டியும் பெடரர் தான் வெற்றி பெற்றார். அதாவது 6–4, 6–4, 6–7, 6–2 என 3–1 என்ற செற்கணக்கில் பெடரர் சாம் குரோத்தை வீழ்த்தி 4 ஆவது சுற்றுக்கு முன்னேறினார். (ம)

வாடகைக்கு
நல்லூரில் அனெக்ஸ் வாடகைக்கு உண்டு.
தனியறை, குளியலறை,
சமையலறை,ஹோல் உத்தியோகத்தர் குடும்பம்.
முற்பணம் எதிர்பார்க்கப்படும்.
தொடர்பு : 078 521 0573

A/L Personal / Group class
(English & Tamil medium)
Biology, Chemistry, Science and Technology
{ 37 வருட past papers, theory கற்பிக்கப்படும். }
T.P : 077 547 7931

SUCCESS
Language centre
* O/L English A அல்லது B வேண்டுமா?
* O/L English Past paper classes நடைபெறுகின்றன.
* 10 வருட Past papers விளக்கமாகச் செய்து விடப்படும்.
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
( லிங்கன் கிறீம் ஹவுஸ் முன்பாக)
T.P : 077 640 8622

FRENCH LANGUAGE CENTRE
FOR BETTER FRENCH IN NORTH
பிரெஞ்சு மொழி வகுப்பு
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diploma in French
இலகுவாக எழுத வாசிக்க சரியான உச்சரிப்புடன் கதைக்க...
விரிவுரையாளர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)
கடந்த March மாத DELF A1, A2 Exam இல் 100 % சித்தியடைந்துள்ளனர்...
954 மாணவர்கள் இதுவரை French கற்றுள்ளனர்..
உடன் அனுமதியை பெற்றுக் கொள்ள : 0779 789 456 / 021 221 7781
No. 40, Palaly Road, Jaffna.(அரியகுளம்) | No.181, 1st Floor, பிரதான வீதி, நெல்லியடி. 021 320 2973. | கண்டி வீதி, அரசடி, சாவகச்சேரி

ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
கற்பதற்கு இலங்கையில் FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. (யாழில் 1976 முதல்). ஆசிரியர்கள் : யாழ்.பல்கலைக்கழக பிரெஞ் & ஆங்கில விரிவுரையாளர்கள் (பிரான்ஸ் நாட்டவரும்). இலங்கையில் AF மட்டுமே அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF) ஐ வழங்குகின்றது. பிரெஞ்சு மொழிபெயர்ப்புகள்.

ஆரம்பம் விரைவில்... உடன் அழைத்து பதியுங்கள்
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 6.07.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.